# பரராசசேகரம்

ஆறாம் பாகம்



மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்

வட மாகாணசபை

DR. T. Thayalini PhD

# பரராசசேகரம்

## ஆறாம் பாகம்

(மீள்பதிப்பு)

**மாகாண சுதேச மருத்துவத் திணைக்களம்**
**வட மாகாணசபை.**

**நூல்** :- பரராசசேகரம் (ஆறாம் பாகம்)

**முதற்பதிப்பாசிரியர்** :- ஏழாலை ஐ.பொன்னையா

**மீள்பதிப்பு** :- மாகாண சுதேச மருத்தவத்திணைக்களம்
வட மாகாணசபை.

**பதிப்பு** :- டிசம்பர் 2016

**பிரதிகள்** :- 1000

**அச்சுப்பதிப்பு** :- வைரஸ் பிறிண்டேஸ்
கணனி வடிவமைப்பு.

## வடமாகாண கௌரவ ஆளுநரின் ஆசிச்செய்தி

**"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள்பதிப்புக்கு எனது ஆசிச்செய்தியை அனுப்புவதில் பேருவகையடைகிறேன்.

நூலின் மீள்பதிப்பு முயற்சி வெற்றிபெற இறைவனின் ஆசியை வேண்டுகிறேன்.

**"பரராசசேகரம்"** என்பது யாழ்ப்பாண பரராசசேகரன் மன்னனால் 12 மருத்துவர்களின் உதவியுடன் இயற்றப்பட்ட மருத்துவத் தமிழ் நூல் ஆகும் எனவும் பரராசசேகரன் என்ற பட்டப்பெயருடன் பல அரசர்கள் இருந்துள்ளனர் எனவும் இந்த நூல் 14 - 16 ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதியை சேர்ந்ததாகவும் இதன் நூல் 12000 செய்யுள்களால் அமைந்தது என்று கூறப்படினும் 8000 செய்யுள்களே அச்சில் வந்துள்ளன. என்பதையும், இந்த நூல் அகத்திய வைத்திய சிந்தாமணி, தந்வந்திரி வைத்திய சிந்தாமணி ஆகியவற்றைத் தழுவியே எழுந்தது என்றும் "பரராசசேகரம்" எனும் மருத்துவத் தமிழ் நூல் பற்றிய தகவல்களை வேறு தமிழ் அறிஞர் நூல்களின் மூலமாக பெறமுடிந்தது.

ஆகையினால் இத்தகைய மருத்துவப் பெறுமதியும் வரலாற்று விழுமியமும் நிறைந்த **"பரராசசேகரம்"** எனும் மருத்துவத் தமிழ் நூல் அழிந்தொழிந்து போகாமல் காப்பாற்றப்படுவதுடன் அதன் உள்ளடக்கமாகவுள்ள மருத்துவக்குறிப்புக்களும் விளக்கங்களும் சந்ததி சந்ததியாக கையளிக்கப்படுவதன் மூலமாக தமிழர் மருத்துவப் புலமை அனைத்து மக்களுக்கும் பயன்படவேண்டும். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூல் மீள் பதிப்பு செய்வதன் நோக்கமும் அதுதான்.

மீள்பதிப்புப் பணியை பொறுப்பேற்று நிறைவேற்றும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தைப் பாராட்டி வாழ்த்துகிறேன். **"பரராசசேகரம்"** மருத்துவத் தமிழ் நூலின் மீள்பதிப்பு நூல்கள் மருத்துவர்களையும் மாணவர்களையும் அத்துறையில் அறிவை வளர்க்க விரும்பும் ஏனைய மக்களையும் சென்றடைந்து அவர்கள் பயனடையவேண்டும் எனவும் வாழ்த்தி நிறைவு செய்கிறேன்.

நன்றி

றெஜினோல்ட் கூரே,
ஆளுநர்,
வடமாகாணம்.

## வடமாகாண கௌரவ முதலமைச்சரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணத்தின் மன்னர் ஆட்சிக் காலத்தில் குறிப்பாக பரராஜசேகரன் ஆட்சி புரிந்த காலத்தில் இயன் மருத்துவத்தின் மீது கொண்டுள்ள உவகையினால் பல்வேறு திக்குகளிலும் மருத்துவத்தில் சிறப்புற்று விளங்கிய மருத்துவப் புலமை மிக்க பண்டிதர்களை அழைத்து அவர்களின் மருத்துவக் குறிப்புக்களைப் பெற்று பன்னிரண்டாயிரம் பாடல்களுடன் பாடல் வடிவில் **"பரராசசேகரம்"** எனும் பெயரில் நூலொன்று உருவாக்கப்பட்டது. அவற்றை ஏழு பாகங்களாகத் தொகுத்து திரு.ஐ.பொன்னையா என்பவர் வெளியிட்டார். அவை சிதிலமடைந்து மேலதிக பிரதிகள் கைவசமின்றி அவற்றின் பிரதிகளை பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. எனினும் இம் மருத்துவக் குறிப்புக்கள் அழிந்துவிடக்கூடாது என்ற ஆதங்கத்தில் அவற்றை மீள் பதிப்பு செய்ய முன்வந்திருக்கும் மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்திற்கு எமது வாழ்த்துக்களை இச் சந்தர்ப்பத்தில் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன்.

மேலைத்தேய மருத்துவத் துறைகளில் நாட்டம் கொண்ட எம்மவர்களில் பலர் இரசாயனக் குளிகைகளிலும், ஊசி மருந்துகளிலும் நாட்டம் கொண்டு கீழைத்தேய மருத்துவ முறைகளில் இருந்து விலகி மேலைத்தேய மருத்துவத்தை நாடிச் செல்கின்றனர். அதே தருணத்தில் மேலைத்தேயத்தில் வாழ்கின்ற பலர் கீழைத்தேய மருத்துவ முறைகளில் பயன்படுத்தப்படுகின்ற மருந்துகள், எண்ணெய்கள் மற்றும் குடிநீர் போன்றவை எந்தவித பக்கவிளைவுகளும் அற்றதாக, நிரந்தர வைத்திய முறைமையாக பூரண வைத்திய முறையாகவும் இருப்பதைக் கண்ணுற்ற இந்தியா போன்ற நாடுகளை நோக்கி அவர்களின் உடல் உபாதைகளைப் போக்கவும் நீண்ட நொடிய நோய்களை குணப்படுத்தவும் படை எடுத்து வருகின்றார்கள்.



இந் நிலையில் கீழைத்தேயத்திற்கே உரித்தான பக்க விளைவுகள் அற்ற மருத்துவ முறைகளை அழியவிடாது பாதுகாத்து எமது அடுத்த சந்ததிக்கு கையளிக்க வேண்டிய பாரிய பொறுப்பு எமக்குண்டு. அந்த வகையில் மீள்பதிப்பு செய்யப்படுகின்ற இந்த 07பதிப்புக்களும் எமது எதிர்காலத்தின் அரும்பெரும் சொத்தாக அமையவேண்டும் என வாழ்த்தி இந்த அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாண சபை.

# வடமாகாண கௌரவ சுகாதார அமைச்சரின் ஆசிச்செய்தி

பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த **"பரராச சேகரம்"** எனும் வரலாற்றுப் பொக்கிசமான வைத்தியநூலை வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் மீள்பதிப்பு செய்வதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

முன்னோர்களால் ஏட்டில் பாடல்களாக எழுதப்பட்ட இந்நூல் யாழ்ப்பாணம் ஏழாலையைச் சேர்ந்த திரு.ஐ.பொன்னையா அவர்களினால் ஏழு பாகங்களாக தொகுக்கப்பட்டு 1928 - 1936ம் ஆண்டு காலப்பகுதியில் வெளியிடப்பட்டாலும் அவற்றை மீள்பதிப்பு செய்யவேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

காலத்தின் தேவையறிந்து இவற்றை மீளப்பதிப்பதற்கு முயற்சி மேற்கொண்ட வடக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் ஆணையாளர் டாக்டர் (திருமதி) சி.துரைரட்ணம் அவர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

மேலைத்தேய மருத்துவத்தின் மோகம் மக்களிடையே அதிகமாக இருந்தாலும் அதனை உருவாக்கிய மேலைத் தேயத்தவர்களே தற்போது சுதேச மருத்துவ முறைகளில் அதிக நாட்டம் காட்டுவது அதன் சிறப்புகளைக் கோடிட்டு காட்டுகின்றது.

மீள்பதிப்பு செய்யப்பட்ட இந்த புத்தகம் எமது சுதேச மருத்துவத்துறை மாணவர்களுக்கும், மக்களுக்கும் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

டாக்டர்.பத்மநாதன் சத்தியலிங்கம்,
சுகாதார அமைச்சர்,
வடக்கு மாகாணம்.



# பிரதம செயலாளரின் ஆசிச் செய்தி

ஒரு காலத்தில் சுதேச மருத்துவத்துறையில் இந்தியாவுக்கு இணையாக மிகவும் பயனுறுதியும் விளையபயனும் மிக்கதான மருத்துவ சேவையை வழங்குவதில் யாழ்ப்பாணம் முன்னணியில் இருந்தது. ஆயுள்வேத மற்றும் மூலிகை மருத்துவத்தில் மிகவும் நாட்டமும் நம்பிக்கையும் கொண்ட யாழ்ப்பாண இராஜ்யத்தை அரசாட்சி புரிந்த பரராஜசேகர மன்னன் அவனது காலத்தில் பல்வேறு புலமை மிக்க வைத்தியர்களால் கைக்கொள்ளப்பட்டு வந்த இந்த மருத்துவத்தை அழியவிடாது பாரம்பரியமாக நடைமுறைப்படுத்தும் நோக்கோடு 12,000 மருத்துவப் பாடல்கள் அடங்கிய ஏட்டுப்பிரதிகளை தனது காலத்தில் இருந்த மருத்துவ வியலாளர்களைக் கொண்டு ஆவணப்படுத்தினார்.

*1928 - 1936* காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த காலஞ் சென்ற திரு.ஐ.பொன்னையா என்பவரால் ஏட்டுப்பிரதியாக இருந்த இம் மருத்துவக் குறிப்புப் பாடல்கள், ஏழு பாகங்களாகத் தொகுக்கப்பட்டு முதன் முதலாக நூல் மயமாக்கப்பட்டது. இந் நூலை ஆதாரமாகக் கொண்டே இன்றும் பாரம்பரிய சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள் மருத்துவம் செய்து வருகின்றனர்.

இயற்கை மூலிகைகளோடு இணைந்த சித்த ஆயுர்வேத மருத்துவமானது தற்போது அனேக நாடுகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற இக் காலத்தில் எமக்கு அரும்பொக்கிஷமாகக் கிடைக்கப்பெற்ற **"பரராசசேகரம்"** மருத்துவ நூலானது அழிந்து விடாதபடி மீண்டும் மீண்டும் மீள்பதிப்புக்குட்படுத்தி காத்து அடுத்து சந்ததியினருக்கு கொண்டு செல்ல வேண்டிய கட்டுப்பாடு வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தின் பாரிய பொறுப்பாகும்.

சுதேச மருத்துவத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப் படுகின்ற **"பரராசசேகரம்"** மீள்வெளியீட்டின் முயற்சி யானது காலத்தோடொட்டிய அத்தியாவசியமானதும் மிகவும் பாராட்டப்பட வேண்டியதென்றாகும். இந்நூலின் மூலம் தமிழ்கூறு நல்லுலகெங்கும் பயன்பெற எல்லாம் வலல் இறைவன் துணை வேண்டி உளமார வாழ்த்துகின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்
வடமாகாண சபை

## செயலாளரின் வாழ்த்துரை

கலை பண்பாடுகளினால் சிறப்புற்ற யாழ்ப்பாண இராச்சியம் செழிப்புடனிருந்த பரராஜசேகர மன்னனின் ஆட்சியின்போது, அவன் முன்னிலையில் பல மருத்துவப் புலமையாளர்களைக் கொண்டு உருவாகியதே பரராசசேகரம் என்னும் பன்னீராயிரம் பாடல்களுடன் விரிந்த மருத்துவ நூலென வரலாற்றாளர்கள் கூறுவர்.

அன்று முதல் முறைசார் கல்வியூடாக மருத்துவம் போதிக்கப்படும் வரை மருத்தவத்தையே தம் உயிர்மூச்சாகக் கொண்டு வாழ்ந்த மருத்துவப் பரம்பரையினர் பரராசசேகரத்தின் ஏட்டுப் பிரதிகளை தமது அரும்பெரும் சொத்தெனவும், பிரதான உசாத்துணையெனவும் கொண்டு பேணிப்பாதுகாத்து வந்துள்ளனர்.

ஏழாலை ஐ.பொன்னையா எனும் மருத்துவரின் அயராமுயற்சியின் பயனாக ஏழு பாகங்களாக எண்ணாயிரம் பாடல்களுடன் அசேற்றப்பட்ட நூலாக பரராசசேகரம் கடந்த நூற்றாண்டில் கிடைக்கப் பெற்றிருப்பினும் காலவோட்டத்தால் அவற்றிலேற்பட்ட சிதைவுகளினாலும், கிடைத்தற் கரியனவாயி ருப்பதாலும் அவற்றை மீள்பதிப்பு செய்து எதிர்காலத்திற்கும் கிடைக்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற வடமாகாண சுதெச மருத்துவ திணைக்களத்தின் அரியமுயற்சி பாராட்டுக்குரியதாகும்.

ஏழுபாகங்களாக உள்ள வெவ்வேறு ரோகங்களிற்கான நிவாரணம் தொடர்பான இந்நூலில் 1ம் 2ம் 5ம் 6ம் 7ம் பாகங்கள் மீள்பதிப்பு செய்யப்படுகின்றன.

நவீன காலத்தின் தேவைக்கேற்ப இந்நூலின் பித்தரோகம் என்ற பகுதியை இணையத்தில் ஒரு நண்பர் பதிவேற்றியிருந்தமையைக் காணுகையில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இந்த முயற்சியின் பலன்கள் எமது சந்ததியனருக்கு நன்மை பயப்பதாக என வாழ்த்தி நிற்கின்றேன்.

சி.திருவாகரன்
செயலாளர்.
சுகாதார சுதேச மருத்துவ நன்நடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் அமைச்சு.
வடமாகாணசபை



## மாகாண ஆணையாளரின் செய்தி

சித்த மருத்துவமானது "தமிழர் மருத்துவம்" எனவும் "தமிழர் பாரம்பரியம்" எனவும் போற்றப்படும் மருத்துவ முறையாகும். ஏனைய சுதேச மருத்துவ முறைகளைப் போலவே சித்த மருத்துவமானது தமிழர் வரலாற்றில் பிணைப்பிணைந்திருப்பதை வரலாற்று நூல்கள் மூலம் தெரிந்து கொள்ள கூடியதாக இருக்கின்றது. இலங்கையைப் பொறுத்த வரை இலங்கையை ஆண்ட மன்னர்கள் பலர் சிறந்த வைத்தியர்களாக இருந்ததை பல வரலாற்று நூல்கள் எடுத்தியம்பி உள்ளன. இவர்களுள் "செகராஜசேகர மன்னன்", "பரராஜசேகர மன்னன்" ஆகியோரது பெயர்கள் ஈழத்து சித்த மருத்துவ வரலாற்றில் முக்கியத்தவம் பெறுகின்றன. இவர்களது காலத்தில் சித்த மருத்துவமானது சிறப்புற்று இருந்தமைக்கு "பரராஜசேகரம், செகராஜசேகர வைத்தியம்" எனும் நூல்கள் சான்று பகர்கின்றன. இந்நூல்களில் குறிப்பிடப்படும் மருத்துவ முறைகள் எமது நாட்டிற்குரிய தனித்துவமான சித்த மருத்துவ முறைகளை அடிப்படையாகக் கொண்டதாக கருதப்படுகிறது. மேலும் "பரராஜசேகரம்" எனும் நூலானது யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ மாணவர்களது பாட நூல்களில் ஒன்றாக அமையப்பெறுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இவ்வாறான முக்கியத்துவம் வாய்ந்த வைத்திய நூல்களில், பல சிதிலமடைந்து அரகிப் போய் வருவது சித்த மருத்துவத்தின் அபிவிருத்திக்கும் ஒரு பாரிய சவாலாகவே காணப்படுகிறது. எனவே 1928 - 1936ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஏழாலையைச் சேர்ந்த ஐ.பொன்னையா என்பவரால் தொகுக்கப்பட்ட "**பரராஜசேகரம்**" எனும் ஏழு பாகங்கள் கொண்ட நூல்களுள், எமக்கு கிடைக்கப் பெற்ற ஐந்து பாகங்கள், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்தால் மீள் பதிப்பு செய்யப்படுகின்றன..

இந்த மீள் பதிப்பின் போது ஐ.பொன்னையா அவர்களால் குறிப்பிடப்பட்டிருந்த பிழைகள் திருத்தப்பட்டிருப்பதுடன் எழுத்துச் சீர்திருத்தமும் கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

வடமாகாண சுதேச மருத்துவ திணைக்களம் இதுவரை "ஒன்பது விஷ ஆருடம் - பத்மநாம அய்யர், "நாடி தர்ப்பனம்" சிதம்பரநாத வைத்தியர்" ஆகிய நூல்களை மீள் பதிப்பு செய்து வெளியிட்டுள்ளது. இந்த வரிசையில் பரராசசேகரத்தின் ஐந்து பாகங்களை வெளியிடுவதில் திணைக்களம் என்ற வகையிலும், சித்தமருத்துவர்கள் என்ற வகையிலும் நாம் பெருமை கொள்வதோடு இந் நூலை வெளியிடுவதற்காக தம்மிடம் இருந்த பிரதிகளை எமக்கு தந்துதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் நாம் நன்றியை தெரிவித்தக் கொள்கின்றோம்.

எமது சித்த மருத்துவத்தைப் பேணி பாதுகாத்த அனைவருக்கும் இந் நூலை நாம் சமர்ப்பணம் செய்கின்றோம்.

டாக்டர்.(திருமதி).சி.துரைரட்ணம்,
மாகாண ஆணையாளர்,
சுதேச மருத்துவ திணைக்களம்,
வடமாகாண சபை.



யாழ்ப்பாண வைத்திய நூல் வெளியீடு 11

# பரராசசேகரம்

## ஆறாம் பாகம்

### உதரரோக நிதானம்

குன்மம், பாண்டு, காமாலை, சோகை, வாய்வு, சூலை ரோகங்கள்

பதிப்பாசிரியர்
ஏழாலை
ஐ.பொன்னையா

திருஞானசம்பந்தர் அச்சியந்திரசாலை
மல்லாகம்தாது ௵ புரட்டாதி மீ
1936

விலை ரூபா 2.00

உரிமை பதிவுசெய்யப் பெற்றது.

## பரராசசேகரம்

### பதினாறாவது

### உதரரோக நிதானம்

இரசித மான சோதி யெழின்மிகு மலையில் வாழும்
பரசிவ னருளினாலே பவமறு முனிவ னந்நாள்
உரைசெயு முதர ரோக முறுகுணங் கிரியை சொல்லக்
கரிமுக முடைய முக்கட் கணபதி துணைத்தாள் காப்பே 1

உதர மதனி லுறுரோக பெயரு மதுசெய் குணவேக
விதன மதுசெய் குறிசோர்வு தெளிவு மிகைகண் முதலாய
விதியின் மொழியை யயனாரு மறிய வினிய வயுள்வேத
விதியை யுலகி லறைகூற விரவி யுரைசெய் ததுவாகும்
முதிய முனிவ ரொருநால்வ ரறிய வரனு மொருகால
முதிய மொழியை வடநீழ லதனின் மொழியவுணர்வாய்மை
உதனை யறியு மறிவாளர் பொதிய மலையின் முனிகூறு
முதர கிரியை யறியாதா ரொருகி ரியையு மறியாரே 2

### உதரரோகத் தொகுப்பு

மருவிய வுதரந் தன்னில் வைகுநோ யொருநூற் றொட்டாம்
பெரியவ ருரைத்த வுண்மை தொந்தமு மொன்பான் பேசிற்
கருதிய வேது மற்றுஞ் சாத்திய மசாத்தி யங்கள்
உரைசெயுங் குறிகு ணங்கள் சிகிச்சையு முணர்ந்து கொள்ளே 3

### உதரரோகம் உண்டாவதற்கு ஏது

கருதிடின் மீனின் முள்ளுங் கரந்துமி நெல்லின் வாலும்
மருவிய கல்லெ லும்பு மங்கையர் மருத்தி னீடும்
பருகுசோ றறாமை யாலும் பழமல நிற்கை யாலும்
மருவுநோ மயிர்க னாலும் வயிற்றினி நோய்கள் சேரும் 4

புரையற வுண்கை யாலும் பொருமநீர் கொள்கை யாலும்
சுருளவே முடக்கிக் கொண்டு சுகமறக் கிடக்கை யாலும்
மருவிய மேடு தாழ்வின் மனமற வுறங்கை யாலும்
பெருகவுண் டோடி னாலும் பெருத்திடும் வயிற்றி னோயே 5



செரித்திடப் பொறுத்த லின்றித் தின்றிடு பேதத் தாலும்
உரைத்திடு நெய்யை நன்றா யுருக்கியே கொளாமை யாலும்
அரித்திடுங் கிருமி யாலு மதிமல நிற்கை யாலும்
பெருந்திடு முதரந் தன்னிற் பேசுநோய் வளருங் காணே 6

பசித்தபோ தருந்தா தாலும் பசியிலா தருந்த லாலும்
நசித்திடு வெறிநீ ராலு நாரியர் வருத்தத் தாலும்
இசைத்திடு வாத பித்த சேற்பன மிவைமூன் றெல்லை
திசைப்படு தொந்தத் தாலுஞ்சேர்ந்திடும் வயிற்றில் நோயே 7

உண்டுட னடவா தாலு முடனோடி நடக்கை யாலும்
அண்டிடுந் தண்ணீர் தன்னை யடுத்தடுத் தருந்த லாலும்
பண்டுள போச னத்திற் பழமலஞ் சிக்கை யாலும்
கொண்டிடு முதரந் தன்னிற் கூடுமே பலவா நோய்கள் 8

தும்பி தேரை யிடுநீராற் ரோசங் கொண்ட சுனைநீராற்
கம்பி லுமியானெல்லுமியாற் கறிமுள்ளெ லும்பாற்கரை சோற்றால்
அம்பார் கடையா ருகிர் தன்னா லாறுஞ் சோற்நா லரைப்பசியால்
வம்பார் முலையா ரிடுமருந்தால் வருமே யுதரந் தனிநோய்கள் 9

மனம வுண்கை யாலு மகிழுமூண் குறைதலாலும்
கனமலஞ் செறிந்து நின்று கழலுத லிலாமை யாலும்
தனமிகக் கெடுகை யாலுந் தானுறு மோகத் தாலும்
சினமிக வுறுத லாலுஞ் சேருமே வயிற்று னோய்கள் 10

இப்படி யுதா ரோக மெய்து நூற்றெட்டு மிங்ஙன்
மெய்ப்படு மேதுத் தம்மான் மேவியே தோன்று மென்று
செப்பினன் முனிவ னம்மா சேருநோய் குறிகு ணங்கள்
முற்படத் தெரிந்து கொண்டு முறைப்படி சிகிச்சை செய்யே 11

சொல்லிய வுதரந் தன்னிற் றோன்றிடும் வியாதி பேரும்
எல்லைசேர் குணம சாத்தியஞ் சாத்திய மிசைம ருந்தும்
அல்லியங் கோதை நல்லா †யறிவொடிவ் வாறுந் தானே
வல்லவ ருரைத்து வைத்தார் வாகட நூலோருக்கே 12

†அறிவு - இரட்டை - சுடதல்

## உதரரோகம் 108 ன் வகை

அனிலத்தால் வந்த நோய்க ளவையைம்ப தாகு மென்பர்
தனிவரு பித்தந் தன்னாற் சாருநோய் முப்பதாகும்
துனிதரு கபங்க டம்மாற் றோன்றுநோ யிருபத்தெட்டாம்
எனவரு முறைக ளாய்ந்தே யியம்பினன் முனிவனம்மா 13

### பாடபேதம்

அனிலத்தால் வந்த நோய்க ளறியைம்பத் தாற தென்று
தனிவரு பித்தந் தன்னாற் சாருநோய் மூப்ப தாகும்
துனிதரு கபங்க டம்மாற் சொல்லிரு பத்தி ரண்டாம்
எனவரு முறைக ளாய்ந்தே யியம்பினன் முனிவ னம்மா 14

### வாதத்தால் தோன்றுன்ன

குடற்கழலை யண்டவிர்த்தி குலைந்த பக்க சூலமும்
அடலெழுந்த குன்மமோ டழுந்துநாபி சூலமும்
உடல்முடங்கு வாதமு மூதியேறு சூலமும்
அடலெழுந்த பிலிகையும் மதிப்படுங் கவுசியே 15

வெய்யபாவை யட்டலிகை வீங்குதா சூலமும்
துய்யா வாதக் கிராணியுந் தொடர்சலக் கூர்மமும்
பையவிற் பழுங்கியும் பரந்த வாத சூலமும்
கொய்குசப் புரோணியுங் கோளுறுப்ப சூலமே 16

†உதரரோகநிதானம் எழுதிய பிரதிகள் 10 வரையிலிருக்கின்றன. இருந்தும், அவற்றைக்கொண்டு பெயர் முதலியவற்றை நன்கு தெரிந்துகொள்ள முடியவில்லை. பிரதிகளுட் பெரும்பலான மிகப் பழமைவாய்ந்தன. ஏனையவும் பலவேறுபாடுகளோடு காணப்படுகின்றன. இச்செய்யுளின் முதற்பகுதி, குடல் கவர்கண்டவிர்த்தி என்றும், குடல் கவரண்டவிர்த்தி என்றும், குடற்கழலை யண்டவிர்த்தி என்றும், குடல் கவரண்டவிர்த்தி என்றும், குடல்கவவிர்த்தி என்றும் பல்வாறு காணப்படுகின்றது. இப்படியே பிறவும் பாடபேதங்கள் எல்லாம் காட்டலுறின் மிகவிரியுமென்றஞ்சி ஒரு பிரதியிற் கண்டவாறே சிற்சில பாடபேதங்களோடு மட்டும் பதிப்பிக்கப்படுகின்றது. அன்பர்கள் யாரேனும் இந்நிதானம் முழுவதிலும் கிடைத்தமட்டில் சரியானபாடம் குறித்தனுப்பிவைப்பின் அவர்களது பெயரோடு உடனே அச்சிட்டு இதிற்சேர்த்துக் கொள்ளப்படும்.



கற்பழுவு கண்டியுங் கடைக்குட லடசியும்
மெத்தறற் புணைச்சலும் மேவுசந்து குத்தியும்
சொற்புணைப் பிரவாசியுஞ் சொல்லுமங்க சூலியும்
அற்பழுக்கு ளடசியும் மஷ்ப்பழுச் சொருகியே 17

கடியவாத ரோகியுந் கனத்தகல் லறைப்பனும்
அடிவயிற்றி லடசியும் மங்கமேறு சூலையும்
வடிவகன்ற நாபிக்கீழ் வல்லுயிரை வாங்கியும்
கொடியமெய்ப்பர கண்டியுங் கோபசிங்க சூலையே 18

உற்றடிமுதுகினி லுளைந்த சூலமும்
பெற்றதன் மேலினிற் பிரண்ட கேசியும்
மற்றதன் னடியிலே மரண மன்னியும்
சற்றதன் மேலினிற் சதுரசூல காலியே 19

அதிலுற மேலெழு மத்தி சூலமும்
பதியுறு செறுவினிற் பன்னு கேசியும்
கதுவுமுள் ளெலும்பினிற் கனத்த காலியும்
முதிரிட வயிற்றினின் முழங்கு சூலையே 20

### பாடபேதம்

அதிரமேலுங் கீழுமா யழற்றுமத்தி சூலமும்
பதியதாக வேகுடற் பன்னுகேசி யானதும்
கதுவுமுள் ளெலும்பினிற் கனத்தெழுந்த காலியும்
முதுவடி யுறழநல் விரலிற் கொள்ளுமே 21

கையடி நால்விரற்கீழ்க் கருவழி கேசியுமடர்ந்திடும்
மெய்யுறப் புறத்துமே லங்கிதாவி யுளைந்திடும்
துய்யமதி கெடக்குளிர் சோர மயக்கி வலித்திடும்
மையமார் பினில்நடு முனைசோர வலிக்குமே 22

### பாடபேதம்

கையடியி னால்விரல் கருவடர் கேசி யடர்த்திடும்
மெய்யநாடி பரந்துற மீதுற வங்கியா யுளைந்திடும்

குய்யநாடி மத்திபங் கூடியே சோர வலித்திடும்
மையமாக மார்பினி லறவ லித்துக் குத்துமே 23

இடப்புறத்தி லேறிடு மிழுத்திறங்கும் வாயுவும்
புடப்படக் கொதித்திடும் பக்கமா மெகுத்துவம்
சுடப்பிரண்டு சீவனைத் தொட்டிழுக்கும் பீலிகை
அடர்ப்படுங் குடகி ரியாமழற்று வாயுவும் 24

குண்டலத்தின் வாயுவோடு கூடுகின்ற வாயுவும்
மண்டையேறு கெண்டையின் வலியதான வாயுவும்
கொண்டலா மயக்குடன் குடல்வரண்ட வாயுவும்
மன்றிலாடு நாதன் முன் வகுத்துரைத்த நோய்களே 25

**எதிர்மூல சூலம்**

ஆணவனடியை யுற்றே யழன் றுகீழ் முதுகைப்பற்றிப்
பாண்கடைக் குடலைச் சுற்றிப் பாவியே வலிக்கும் போது
நாண்படுநாபி தன்னை நடுவுறச் சுழித்து வாங்கில்
எண்படு மதனை நீயு மெதிர்மூல சூல மென்னே 26

**கோப சூலம்**

நாவிக்கீ ழிரண்டு பக்க நடுப்பெற வழன்று பற்றிச்
சோகமே மிகவுண் டாகிச் சோர்ந்திட வலித்துப் பின்னைத்
தாவியிப் படிய தாகிற் றான்கோப சூலமென்று
கோபமே யாற லுற்ற குறுமுனி யருளிச் செய்தான் 27

**கேசி ஆமசூலம்-வத்திரகேசி**

தானதே யுதர மெல்லாந் தயங்கவே வலிக்கு மாகில்
ஆனதே கேசியாம சூலமென் றறிந்து கொள்ளும்
ஊனுறு முதாத்தோடு முளைந்திடு நாபி கொண்டு
வானுற வலித்து விம்மில் வத்திர கேசி யென்னே 28

**பேய்ச்சூரை கிருமி**

நாபியைச் சூழச் சுற்றி நடுவுற வலிக்கு மாகில்
கோபிபேய்ச் சூரையென்று குடசமா முனியுங் கண்டான்



லோபமே யுடம்பு நைய வுடலது புரள வோங்கித்
தாபமே கொண்டு நோகிற் றானது கிருமி யென்னே 29

**†நாடிசூலம்**

அண்ட மூல நடுவுற வசைவு கூட வலித்திடில்
பண்டு நாடி சூலமென் பதுவிளங்கு நீயுமே
கண்ட வைம்பத் தாறுடன் கலந்த வைம்ப தாமிவை
கொண்டெழுந்த நோயெலாங் கொடிய வாத ரோகமே 30

**பழுவிழுங்கி**

அண்டத்தின நடுவுண் மேலா யசைந்துற வலித்து விம்மிற்
பண்டைய தாமிந் நோயைப் பழுவிழுங் கியதா மென்பர்
கன்றிட வீக்க மாகிக் கடுஞ்சலஞ் சீயாய் வீழிற்
கொண்டெழு வியாதி வாத ரோகமாக் கூறி னாரே 31

**ஆமசூலம்**

நாபியைச்சூழ்ந்து ளைந்து நடுவுந்தி புண்ணே போலச்
சோபமே மிகவுண் டாகிச் சோர்ந்திட வேவ லிக்கும்
கோபமாய்ப் புளித்தேக் கிட்டுக் குடல் முரிந் திடவே நோகும்
தாபமாய் வரண்டு முற்றிற் சாற்றுவ ராம சூலம் 32

**ஆமசூலத்திற்கு**
**சிகிச்சை**

இக்குணங் கண்டாற் றீர்தற் கியம்பிய மருந்து கேண்மின்
சுக்கொடு மரிசு நீரிற் ‡சுடவிரண் டொன்றாய்க் காய்ச்சி
ஒக்கவே தெளித்துக் கொள்ள வுறுமாம சூலை தீரும்
மிக்கிள் முருக்கின் பன்ன மேவுப்புங் கூட்டிக் காய்ச்சே 33

இப்படிச் செய்ய மாறு மில்லாதே லிந்து காயம்
வெப்பறு கழற்சிச் சாற்றில் விரவியே குடிக்கத் தீரும்
மெய்ப்புற மாறா தாகின் மிகுமுர லிச்சா றுப்பும்
தப்பறக் காய்ச்சி யுண்ணத் தணிந்திடு மாம சூலை 34

†நாடிசூலம் - நாவிசூலமென்றும் ‡சுட - வறுத்து

உடம்புற வுழற்றிப் பின்னை யுறுகெண்டை தானு மேறிக்
குடைந்துற வெகுத்து மாகிக் குமட்டியே வயிறுங் காலும்
தடம்படு முடல மெல்லாந் தானுறு கொடிபி டித்துக்
கடந்தனிற் காடி காய்ச்சிக் காலுறக் கழுவு மென்னே 35

உற்றவப் பாதந் தன்னை யுறமிகக் கழுவி மாற்ற
மற்றுமவ் வுதரந் தானு மறுகவே யுளைந்து நோகில்
முற்றுநற் காடி தன்னை முடுகவே காய்ச்சி நீற்றிற்
பற்றுறைப் பிசைந்து கூட்டிப் பழுப்பெருக் கலையான் மூடே 36

பழுப்பெருக் கலையின் மேலே பையவே சீலை மூடி
அடுப்பதில் வைத்து நன்றா யறவுமே வேது காட்டி
எடுத்ததை யெலாங்க ரைத்தே யியல்புடன் சேர்த்து நீயும்
கொடுத்திட வாம சூலங் கும்பிட்டே யோடுங் காணே 37

உற்றொரு சட்டி தன்னி லுப்புழக் கிட்டெரித்து
மற்றதைக் கொட்டிப் போட்டு மறித்துழக் கரிசி யிட்டுப்
பற்றுற வரிசி தீந்தாற் பகருரி நீரை விட்டுச்
சற்றுற வடித்து நீரைத் தானுணப் பாகமாமே 38

தானதி தாக மாகித் தாழ்ந்துண்க வரண்டு நாவும்
ஊனைவிட் டுயிர்போம் போல வுழத்தியே கெண்டை யேறில்
ஆனவப் பாகந் தன்னிற் றாழ்வரை யதனிற் சுட்டால்
மேனிதா னுழற்றி மாறி மீண்டதி பாக மாமே 39

இப்படித் தெசிக்கும் போதே யியல்புடன் சுட்டமழற்றி
ஒப்புறக் காலிட்டொற்ற வுளைவெலாந் தீருமென்று
செப்பினார் முன்னோ ரித்தாற் றீர்ந்திடா திருக்குமாயின்
மெய்ப்படி கண்ட சூலம் மீன்வது மில்லைக் காணே 40



உற்றுளே யிரைந்தசீத முறச்சிவந் துளைந்தி ருக்கில்
மற்றச மோதஞ் சுக்கு வறுத்துமோர் விட்டரைத்துப்
பற்றுறக் கரைத்து மோரிற் பருகிட மாறுமின்னும்
சொற்றிடு மரிசி தன்னை வறுத்துடன் குழைய பொங்கி 41

எடுத்ததைப் பிசைந்து மோர்விட் டியம்பிய பொடிடங் கூட்டிக்
குடித்திட மாறு மல்லாற் கூறுமுக் கடுகோ டோம
அடுத்திடு மிருசீ ரித்துப் பவைசமன் பொடித்து மோரிற்
குடிப்பினும் வெல்லப் பாகிற் கொட்டியே கிளறிப் பாகாய் 42

செய்துபாக் களவ தாகத் தின்னினுங் குடிநீ ராகக்
செய்துதா னாவிசெய்யுஞ் சேர்ந்தருந் திடினு மாறும்
எய்துமோர் சுக்குக் காடி யிளசையவெ காய வைத்து
மைதிகழ் கண்ணாய் கொள்ள மாறிடு மாம சூலம் 43

## குடகரி

கடைக்குடன் முதுகந்தண்டு கலந்துகை யடியிற் குத்தி
மிடைப்பட வலித்துப் பின்னை மிகவடி வயிற்றி னின்றே
புடைத்துற வெரித்த மூன்று புரண்டுடன் மறுகி நோகும்
இடப்புறந்தன்னி னிற்கு மிதுகுட கரியென் றோதே 44

## சிகிச்சை

குடகரி தனக்கு நன்றாய்க் கூறுவன் கிரியை தன்னை
உடல்விலா முதுகு நெஞ்சி லுறைத்திட வெண்ணைய் நெய்யும்
கடமதிற் காய வைத்துக் கலந்துற வொற்றி மாற்றிச்
சுடமிகக் கொள்ளுச் சாற்றிற் சொற்†குளங் கூட்டிக் கொள்ளே 45

உற்றுற வலித்துப் பின்னை யோடியே யெரிக்கு மாகிற்
சொற்பெறு மெண்ணெ யிங்கு சுகத்துட னுகர மாறும்
பற்றுற வலித்துப் பிள்ளைப் பரந்தடி வயிற்றே ரித்தாள்
சர்க்கரை யிந்து தேனிற் றானுறக் குடிக்க நன்றாம் 46

†குளம் - வெல்லம்

உதரமும் விம்மி விம்மி யுரமுற வலிக்கு மாகிற்
பதறவே வேண்டா நீயுந் பகர்ந்ததோ ரெண்ணெய் தன்னாற்
சிதறவே யொழுக்கி யொற்றிச் செயமுள வுள்ளியிந்து
விதமுள சுக்கு நீரும் விரும்பியே கூட்டி யுண்ணே 47

இந்துவு நெய்யுங் காய்ந்தங் கியல்புடன் குடிக்கி லேகும்
இந்துவுஞ் சுக்கு நீருங் கடுகுடன் குடிக்கி லேகும்
இத்துவு முள்ளி கொற்றா னிசைவுடன் குடிக்கி லேகும்
இந்துவும் பாலுங் கொள்ளி லிக்குட கரிபோங் காணே 48

**குடிநீர்**

முருங்கை †வன்னி யுள்ளியு முரண்ட வேலி சாரணை
பருங்கொ முஞ்சி சுக்குடன் பரிதிரண்டு நாழி நீர்
வருந்தியிங் குழக்கதாய் வயந்தகால மிங்கினில்
விரும்பியுட் குடித்திடல் விடுங்குட கரியதே 49

**எண்ணெய்**

கொடிக்கழற் பருப்பொடுள்ளி கொடியவிந்து காயமும்
வடித்தெரண்ட வெண்ணெய்சுக்கு வாளநன் மரீசமும்
பொடித்தரைத் தெடுத்துமே புகழ்ந்துநீ குடித்திடில்
வெடிப்பரந்த சூரைகுன்மம் விடுங்குட கரியுமே 50

ஆமணக் கெண்ணெ யிந்துப் பளாவியே குடிக்கி லேகும்
ஆமணக் கெண்ணெய் பாலோ டளாவவு மகன்று போகும்
ஆமணக் கெண்ணெய் கொற்றான் சாறருந் திடவுமாகும்
ஆமணக் கெண்ணெய் வேர்க்கொம் பவித்தநீ ரதுவு மாமே 51

அங்கவை தம்மி னாலே யக்குட கரிபோ காதேல்
துங்கநல் லெண்ணைய் நெய்யாற் றுவளவே யொழுக்கி யொற்றி
இங்கிவை தம்மி லேற்க விலவண வத்தி கட்டில்
சங்கைய தின்றி மாறு மென்றனன் தமிழ்வல் லோனே 52

†வன்னி - கொடிவேலி



**கழற்சிமாத்திரை**

கழற் பருப்பு வெள்ளையுள்ளி கடியகாய மிந்துடன்
பழுத்தசுக்கு நாகணத்தி னோடுபாத ரசமும்
பழக்கமுற்ற படியரைத்து மதுவளாவி யண்டிடில்
அழுத்திநின்ற குடகரியி னோடுசூலை யகலுமே 53

**குடல்வாதம் கழல்வலிக்கு**
**சிகிச்சை**

**புகை**

வியனுறு கழல்சு ருங்கி மெத்தவே வலிக்கு மாகில்
நயமுறு மெண்ணெய் நெய்யால் நாடியே யொழுக்கி யொற்றி
மயமுறு முள்ளி மஞ்சள் மகிழ்விதை நிம்ப வித்துத்
துயரறப் பொடிய தாக்கித் தூவியே புகைப்ப தென்னே 54

இதமுறு குந்து ருக்க மியல்புடன் கூட்டிக்கொண்டு
மதமுறப் புகைகள் காட்டி மருவிய கிரியை சொல்வன்
விதமுறு கொற்றா னுள்ளி வியன்கழ லிலையுங் கூட்டிக்
கதமற விடித்தே யொற்றிக் கட்டிடின் மாறு மன்றே 55

**எண்ணெய்**

உத்தமா காணிச் சாற்றி லோர்கழ லுள்ளி சுக்கு
நெய்த்திடு சயிந்த மிங்கு நேர்பட வரைத்துக் கொண்டே
ஒத்தவே ரண்ட நெய்யி லுண்டுபி னண்டத் தொற்றக்
கத்திடும் வளியுஞ் சூலங் கனங்குறைந் தேகுங் காணே 56

**சுரசம்**

கொத்தான்ற நிலையிற் சாற்றிற் கொடிக்கழற் பருப்போ டுள்ளி
உத்தமா காணி நொச்சி யுடன் சாறு கூட்டிக் காய்ச்சி
மெத்தன வோர்சி றங்கை விதிப்படி தேன்விட் டுண்ணக்
கத்திய சூலை குன்மங் குடகரி கடிதிற் போமே 57

**கட்டுமருந்து**

புங்குசங் குப்பி நிம்பமுங் கொற்றான்
புனலிக ளுடன்கிலு கிலுப்பை
அங்கையிற் பிறங்கை தன்னிலு நாறி
யிலையடம் புள்ளிமால் வசம்பு
இங்கிவை யெல்லா மிடித்தபி னீர
மறவறுத் தொற்றியே கட்டிற்
பொங்கிய கழலில் வலிகளும் விட்டுப்
பொருமலும் போமெனப் புகன்றார் 58

முற்றியே யுதரந் தன்னின் மோதிய வலிவி யறதி
பற்றற மாற தாகிற் பகருவன் கிரியை யொன்று
சித்தியா நிம்பே ரண்டந் திலமெண்ணெய் சமன தாக
ஒத்தியே சூடு காட்டி யுறத்தேய்த்து ரட்சை செய்யே 59

**இரட்சை**

உற்றாக வனுவாதி மூலந் தொடங்கி
யுறவூரு மடிகளிவை யொக்கவே யுன்னில்
பற்றாக வந்தாதி கொண்டே தெகித்துப்
பதறாம லதிலிரண் டங்குலத் தேறச்
செற்றாக முற்சூடு பொட்டாக வைத்துச்
சேருபஞ் சாக்கினித் தைலது தேய்க்க
முற்றக விட்டோடு மரியகுடல் வாத
முதிர்வாய்வு வலிகளிவை யோடியே போமே 60

கொம்மடிக் காயி னோடு குமரியாம் பயளை மூன்றும்
விம்முற வவித்து மேலே வீக்கத்தி லொற்றிக் கட்ட
அம்முதல் கரைந்து தாகி லதன்மேலே தெகிப்ப தாகும்
இம்முறைப் படியே செய்ய விறங்கிடு மண்ட வாய் 61

**இயந்திரிப்பு**

இப்படித் தெகிக்கும் போதே யியந்திரிப் பதனைக் கேளும்
மெய்ப்பட வாயுத் தன்னை மிகவுமுள் வாங்கிக் கொண்டு
செப்பிரு கழலை விட்டுச் சேர்ந்தசே வடியிற் கட்டி
அப்படித் தெகிப்ப தென்றே யருண்முனி யருளிச் செய்தான் 62



இன்னமு மிதற்குச் சொல்வ னியவிரு பாதனீட்டி
மன்னிய கரமு நீட்டி மல்லாந்து படுத்துக் கொண்டே
உன்னியுள் மாருத் தன்னா லுற்றண்டஞ் சுருங்க வாங்கிப்
பின்னிரு கழலை விட்டுப் பிடித்துறத் தெகிப்ப தாமே 63

**இரத்தம் குத்திவாங்க**

அரியயன் றேடிக் காணா வமலன் ற னருளை யுன்னித்
திரமுள வண்டந் தன்னிற் சேர்வுற வடியிற் கட்டிப்
பிரமெழு கனத்த நாடி யிதின்முளைப் பிரிவை யூன்றத்
தரமுற வேபு டைக்குந் தன்னிலே குத்து வாளுயே 64

குத்திய வாயி னாலே கொள்ளுஞ்செந் நீரை விட்டால்
இத்தினை மாற்றிப பின்னை யிசைந்தவப் புண்ணின் மேலே
ஒத்துற வசம்பு நாக முறவரை மிச்சஞ் சாற்றில்
வைத்துற விட்ட போதே வன்கன மழிந்து போமே 65

**கட்டுமருந்து**

உற்றிது செய்த பின்னை யுன்னுசன் மலியின் றோலைப்
பற்றுபஞ் சதுபோற் குத்திப் பையவே வறுத்துக் கட்டி
மற்றதிற் றோலுரித்து மகிழவே கட்டிப் பின்னை
ஒத்திடு கிலுகி லுப்பை யுறவிடித் ததிலே கட்டே 66

நீருறு முள்ளி கொற்றா னீள்சீந்தில் கிலுகி லுப்பை
சீருறச் சுட்டுச் சாம்பல் சேர்த்ததின் மேலே கட்டிற்
காருறு குழலி னாளே கனங்குறைந் தேகிப் பின்னை
வாரிபற் றற்றுச் செல்லும் வகையிது கண்டிடாயே 67

**குடிநீர்**

கனலியே குறிஞ்சா கந்தான் கான்றைசா ரணையின் வேரும்
புனமுருங் கையுங்கொற் றானும் புங்குசங் குப்பி யோடு
வனமிரண் டுழக்காய்க் காய்ச்சி வற்றிட வண்டந் தன்னில்
அனலுறு வலிகள் வீக்க மடசுத லகலுந் தானே 68

### காந்தக்குளிகை

காந்தமோ டுள்ளி யிந்து கழல்மணி சுக்குக் காயம்
ஏய்ந்தநேர் வாள வீச மேரண்டத் தயிலம் விட்டுச்
சாந்தெழ வரைத்துப் பின்னைத் தயிலத்தி லேக ரைத்து
மாந்தவே விருத்தி குனமம் வாய்வண்ட சூலை போமே 69

### அரிதாரக்குளிகை

முக்கடு பலையே பாள முந்துகெந் தாரங் காயம்
நச்சினங் காரஞ் சூத நல்லிந்து சமனதாக
வைச்சரை கரிப்பான் சாற்றில் வருகுன்றி பேலூருட்டி
முற்பட நுகரிலன்றே முறிந்திடுங் குன்மஞ் சூலை 70

### ஏகத்து

உற்றுறு முலையின் கீழே யுன்னியங் குலநால் விட்டு
மற்றொரு பழுவூ டாகி மயங்கிடக் குத்தி விம்மிக்
பற்றுற வலித்துப் பின்னைப் பையவூண் கெடுத்துச் சேரில்
முற்றுமே யிதனை நீயு மூன்றெகுத் தென்று கூறே 71

இப்படி மூன்றெ குத்து மிருபழுச் சொருகு மாயின்
மெய்ப்படு பெலனுங் குன்றி மேனியு மெலிவு காட்டும்
மைப்படு குடலைக் கவ்வி மரணமே யாகச்செய்யும்
தப்பற மருந்து செய்யச் சாற்றினார் முனிவர் தாமே 72

### ஏகுத்துக்குக் கிரியை
### இரத்தம் குத்திவாங்க

இந்தெகுத் தினுக்குச் செய்யு மியைபுள கிரியை யெல்லாம்
கந்தமா முனிவ னந்நாட் கழறினன் றமிழி னாலே
நொந்திடக்கனத்துத் துன்னில் நுகையேயெண்ணெய் நெய்யால்
சிந்திட வொழுக்கி யொற்றிச் சிதறவே பிசைந்தி டாயே 73

சிதறவே பிசைந்து பின்னைச் சேர்ந்தகல் லால முத்தி
அதிரவே யுருவிக் கொம்பா லமரவாய் தன்னி லொற்றிப்
பதிவிடங் காந்து கொண்டு பையவே நரம்பு துன்னில்
முதிரவே யுத்தி தன்னின் மூண்டுசீ லையினாற் கட்டே 74



கட்டிய பின்பு தானுங் கலந்தெகுத் ததனி லெண்ணெய்
விட்டுறத் தேய்த்துக் கொண்டு விரகினால் வரள வொற்றி
முட்டவே யியந்தி ரித்து முன்னிய நாடி பார்த்து
மட்டுறக் குத்தப் பாயும் பபிலெகுத் தற்றுப் போமே 75

இன்னு மிவையான் மாறாதே லெகுத்து மிகவுங் கோபித்துத்
துன்னு முடலி னோமிந்து துயரந் தன்னை யுண்டாக்கும்
முன்னு மெகுத்து வாயுவதின் முதிரு மவத்தை தனையறிந்து
பின்னுங் கிரியை செய்திடுகிற் பிரிந்தே போகும் பெண்மயிலே 76

### பின்னுஞ்சிரைவிட

சூத்திர மாக வேதான் சொல்லுவன் கிரியை தன்னைப்
பாத்தவந் நரம்பைக் கண்டு பழுவினற் பித்திற் குததிச்
சேர்த்திடு முதிரத் தோடு செந்நீரும் பாய வாங்கி
மாற்றிட வெகுத்துத் தீரும் வல்லப மாகச் செய்வாய் 77

### கொம்பு வைக்க

இந்தநற் கிரியை செய்தா லியன்புடன் மாறா தாகிற்
கொந்தியே வற்கம் பூட்டிக் குவிந்திடக் கொம்பை விட்டுச்
சிந்தநோ விரிகை கொண்டு சிக்கென மூண்டு குத்தி
முந்தவே கொம்பு தன்னால் முதியசெந் நீரை வாங்கே 78

மூண்டிடு முதிரம் வாங்கி முதுமஞ்ச ளேரன் டெண்ணெய்
ஈண்டவே விட்டுப் பின்னை யிசையவே கொம்பை விட்டு
வேண்டவே குறைந் தெகுத்து விரையவிட் டேகு மென்று
பூண்டமா தவத்தை யாற்றும் பொதியமா முனிசொன் னாரே 79

இப்படிக் கொம்பை வைத்தே யிடுசவர்க் கார மிங்கு
மெய்ப்பாடு கோடைக்காந்தம் வெதுப்பிமேற் கட்டி வைத்தே
அப்படி மூன்று நாளு மடுத்திடு கிரியை செய்க
தப்பிடா திந்த வண்ணந் தான்செய்து பின்னைக்கேளே 80

### கட்டுமருந்துகள்

இலைக்கள்ளி யிலைபறிததே யிதுகமு நீரில் வெந்து
குழைத்திடப் பிசைந்தெடுத்துக் கொண்டதிற் கட்டிப் பின்பு
கழற்கொடி யிலையு முப்புங் கருதுபுன் கிலையு மின்னும்
நிலக்குமி ழிலையுங் கூட்டி நெகிழவே கட்டிடாயே 81

†ஊற்றின்மேற் கோற்றான் றன்னை யிடித்துவா யுலரக் கட்டி
ஏற்றிடு முள்ளி மஞ்ச ளிண்டிலை யதுவுங் கூட்டி
மேற்படக் கட்டி லன்றே விட்டெகுத் தோடிப் போகும்
சாற்றிடு மிவையே யன்றித் தகுமுறை யின்னுங் கேளே 82

### முக்கணன் குளிகை

கள்ளியின் பால்க றந்து ‡கத்ததேங் காயுள் ளிட்கடே
உள்ளிவெண் கார மிந்துப் புடன்சவர்க் கார மிங்கு
தெள்ளுமக் காரவினோடு திரிகடு பொடித்தூள் ளிட்டுத்
துள்ளுகோ மயமேற் பூசி யெருவினிற் சுட்டிடாயே 83

அப்படிக்கோம யந்தீய்ந் தோடள வாக வெந்தால்
செப்பிடு தீயை மாற்றித் தேங்கயை யெடுத்துக் கொண்டு
மெய்ப்பட வரைத்து நன்றாய் வியனுற வழித்துக் கொண்டு
செப்புபா வட்டங் காய்போற் றிரட்டியே விழுங்கி டாயோ 84

திரளவே விழுங்கி யிட்டாற் றீர்ந்திடும் வியாதி கேளாய்
விரகுறு மெகுத்துக் குன்மம் விலகிடாச் சூலை காட்டி
கரவுறு கொர்ப்ப வாயு கவுசிகை யாமை யாம்பல்
பெருகுட கரியே யாதி பிசகறத் தீர்ந்து போமே 85

†சில பிரதிகளில் இச்செய்யுள்
“தோற்றுபொற் கொன்றைப் பன்னந் தொகுத்திடித்த திலேகட்டி”
என்ற அடியுஞ்சேர்ந்து ஐந்தடிச் செய்யுளாகவுமுண்டு.
‡முற்றியதேங்காயைக் கண்திறந்து இளநீரையூற்றிவிட்டு
அதனுள் கள்ளிப்பாலையும் சரக்குகனையு மிட்டரைத்துச் சாணம் பூச்சி சுடக



### உள்ளிக் குளிகை

கள்ளியின் கட்டை வெட்டிக் கருதுட லுள்ளே தோண்டி
உள்ளியு மிங்கு நல்ல ப்புடன் சீனக் காரம்
ஒள்ளிய வெண்கா ரத்தோ டொருநிறை யாகக் கொண்டு
துள்ளுகோ மயமேற் பூசி யெருவினிற் சுட்டிடாயே 86

சுட்டிடு கள்ளி தீந்தாற் சுகமதாயெடுத்துக் கொண்டே
இட்டதைக் கல்வத் தாட்டி யினியபா வட்டங் காய்போல்
மட்டுறத் தின்பீ ராகில் வல்லெகுத் தாமை சூலை
தொட்டகுன் மங்கள் வாயு தோற்றிடு முண்மை யாமே 87

### வெண்காரக் குளிகை

கள்ளியின் கட்டை வெட்டிக் கருதிய வுடலைத் தோண்டி
வெள்ளிய வெண்கா ரத்தில் விரதியப் பாலை வார்த்துத்
தள்ளிவா யடைத்து மேலே தயங்குகோ மயமும் பூசித்
துள்ளவே யிதனை நீயு மெருவினிற் சுட்டி டாயே 88

அந்தநற் பதம தாக வவிந்ததற் பின்னெ டுத்து
வெந்திடு வெண்கா ரத்தை விரகுறக் கல்வத் தாட்டிச்
சந்தமார் குளிகை குன்றி தன்னைப்போ லேயு ருட்டி
முந்தவே தேனிற் கொள்ள மூன்றெகுத் தேகு மன்றே 89

இங்குவெண் கார முள்ளி யிந்துநேர் வாள மிஞ்சி
பொங்குநற் காந்தமோடு புதியமுக் கடுகுங் கூட்டிப்
பங்குட னேநி றுத்துப் பழுப்பெருக் கலையிற் கட்டி
அங்கதிற் சாண மப்பி யளவதாய்ப் புடத்திற் போடே 90

போடுகோ மயமுந் தீந்து புதியெருக் கிலையும் வெந்தாற்
பீடுற வேயெ டுத்துப் பேய்ச்சுரை யிலையின் சாற்றால்
ஆடவே கல்வத் தாட்டி யரியதூ துளங்காய் போல
நாடியே குளிகை செய்து நன்னிழல் தன்னில் வையே 91

### பாடபேதம்

பூசுகோ மயமுந் தீந்து புனைந்திலை யதுவும் வெந்தாற்
பேசுகைத் தகரைச் சாற்றிற் பேணியே யரைத்தெ டுத்து
மாசில்தே றதுவே போல மன்னிய குளிகை செய்து
வீசுமே ரண்ட நெய்யில் விரசியே யுண்ணு வாயே 92

வைத்தவிக் குளிகை தன்னை வளருமா நெய்யி லுண்ண
முற்றிய வெகுத்து மூன்று முரணுறு குன்மஞ் சூலை
குத்திய வாயு பீலி குடகரி வயிற்று ரோகம்
இத்தனை நோயுந் தீரு மென்றுமா முனிவர் சொன்னர் 93

### இரட்சை

இப்படி யெகுத்தி னுக்கா வியம்பிய கிரியை செய்ய
மெய்ப்படி மாறா தாகின் மீண்டுமோர் கிரியை சொல்வன்
ஒப்புறக் கனத்து விம்மி யொக்கவே வலிக்கு மாகில்
செப்பிடு முதரந் தன்னிற் றெகிப்பது பொட்டி னாலே 94

அதனினோர் முதுகு தன்னி லங்கிரு சூடு சுட்டே
இதனினல் லெண்ணெய் மஞ்ச ளெருக்கம் பால்தம்மை விட்டே
மிதமுறப் புண்ண தாக்கி மேவியே கொதித்துப் பொங்கில்
இதமுற வோடு மென்றே யியம்பினார் முனிவ ரம்மா 95

### குடிநீர்

அரமுறி சுக்கு நத்தை யானசூர் கொடுவேல் கொற்றான்
உரைகழ லுள்ளி புங்கொன் றேரளா வாயி டித்து
விரவநீ ரிரண்டு நாழி வெந்துழக் காயி றுத்துப்
பருகுமே ரண்டத் தெண்ணெய் கூட்டிடப் பறக்கு மன்றே 96

புனமுறு முருங்கை வேரும் புதியமா விலங்கைத் தோலும்
இனியசா ரணையின் வேரு மிதுகழ லுள்ளி யிங்கு
வினவியே யிடித்துக் காய்ச்சி வியன்பெறக் குடிப்பீ ராகில்
மனமுறச் சூலை குன்ம மாறிடு மெகுத்துந் தானே 97

†யிங்கொன் என்றும், இங்கு பெருங்காயம்



பெருகிய வெகுத்தி னுக்குப் பேணியிங் குரைத்த வண்ணம்
மருவிய பதுமு கற்கு மன்னியிப் படிச்செய் யென்று
கிரணவெண் மதியின் கீறல் கிளர்சடை வைத்த வெம்மான்
அருளிய வண்ணந் தேர்ந்தே யகத்தியன் புவியிற் சொன்னான் 98

உத்தம மாகச் சொன்ன வுறுபல கிரியைக் கெல்லாம்
சத்தியந் தீர்ந்து போகுந் தவறியே தீரா தாயின்
பத்திய தொந்த மென்று பலதான தருமஞ் செய்து
சித்தியாற் சீவனை வேண்டத் தீர்ந்திடு மறிந்தி டாயே 99

இன்புறு முதரந் தன்னி லெழுகின்ற ரோக மெல்லாம்
துன்பமாய்த் துயர்வி ளைக்குஞ் சோரவே யுயிரை வாங்கும்
மின்பயி லெகுத்துப் போல மிகக்கொடி தான தில்லை
என்பது முன்னா ளீசன கத்தியற் கியம்பி னானே 100

### கோபிச்சூரை

நாபியைச் சூழச் சுற்றி நடுவுற வலிக்கு மாகிற்
கோபியாஞ் சூரை யென்று குடசமா முனியுங் கண்டான்
தாவியே யிதற்கு நீயுந் தான்மறை மந்தி ரத்தால்
ஓதியே பார்க்க மீளு முரனது கண்டி டாயே 101

‡இந்தமந் திரத்தி னாலே யியல்புற மாறா தாயிற்
சிந்துசா ரடையின் வேருஞ் சிறுகுறுந் தொட்டி வேரும்
கொந்துசே ருள்ளி யிங்கு குணமுடன் காயங் கூட்டி
இந்துநேர் மணக்கி னெண்ணெ யியல்புடன் கூட்டிக் கொள்ளே 102

### பாடபேதம்

†இந்தமந் திரத்தி னாலே யியல்புற மாறா தாகிற்
சிந்துசா ரணையின் வேருஞ் சிறுகுறுந் தொட்டி வேரும்
கொந்துகொள் ளுள்ளி யிங்கு குடிநீரா யவித்துக் கொண்டு
தந்தவே ரண்ட வெண்ணெய் சமன்கூட்டிக் குடிக்க நன்றே 103

†போய்சூரை -என்றும் ‡இந்துமந்திரத்தை இங்கு சாதுநீக்கினேம் குருமுன்னிலையிலறிக.

நாபிமே லங்கு லத்தே நடுமிக வேபு டைத்துத்
தாவியே மூலத் தோடு தான்குத்தி மேன்மூச் சானால்
நீவியே புதநல் லெண்ணெய் நெய்யினா னெகிழ வொற்றிக்
கோபியாங் குன்மம் போகக் கொட்சாறு குளமுங் கூட்டே 104

**உள்ளியாமணக்கெண்ணெய்**

கொடசாறு மிளகு சுக்குக் கொள்ளிங்கு வெள்ளை யுள்ளி
மட்டாயிந் தேரன் டெண்ணெய் வடித்துடன் குடித்த போது
கட்டின மலங்க ழிந்து கனசூல மெகுத்துக் குன்மம்
விட்டேகும் வயிற்று ரோக விதமென விளம்பி னாரே 105

**தேங்காயெண்ணெய்**

தேங்காயிரண்டு தனைத்துருவித்தெளிவாய்த் தன்பாலா வெடுத்துப்
பாங்காம் பிரமிச் சாறுள்ளி பரிவி னுடனே சமன்கூட்டி
நீங்கா தடுப்பி லேகாய்ச்சி நெய்தான் பிறந்த போதிதனை
வாங்கா யளவாய்க் குடித்திடுகின் மாறுஞ் சூலை வலியதுமே 106

அப்புறு தேங்காய்ப் பாலை யளவதாய்ப் பிழிந்து கொண்டு
நெய்ப்பெழக்காய் வைத்து நிகழவே மரிசந் தன்னை
ஒப்புறப் பொடிய தாக்கி யுற்றதன் மேலே தூவி
மெய்ப்புறக் குடிக்கிற் குன்ம மிகுமலங் கழயுங் காணே 107

**குளிகை**

அம்முறு தேங்காய் தன்னி லமரநேர் வாள மிட்டு
மும்மைசேர் கடுக மூன்று முப்பலை தானுங் கூட்டிச்
செம்மிச்சுட் டாவின் பாலாற் செறியவே காய்ச்சிக் கொண்டு
இம்மருந் ததனை வாங்கி யிசையவே யரைக்கும் போது 108

இந்துசா திலிங்கங் கூட்டி யேகமா யரைத்துப் பின்னை
வந்நகுன் றியின் வத்தைப்போல் வளமாக வுண்டை பண்ணிக்
சொந்தமா மதுவி லுண்ணச் சூலையவ் வெகுத்துக் குன்மம்
நொந்திடு முதரந் தன்னிற் குடகரி வாயுப் போமே 109



வெநதவத் தேங்கய் தன்னை வேறுவே றாகக் கீறி
முந்தநற் †குளிகை கூட்டி முறித்துமே கடித்துத் தின்றால்
உந்தியிற் கிருமி குன்ம முடன்வெப்புப் பவை சூரை
சிந்திடு முதர சூலை செறிமலர்க் சூழல ணங்கே 110

**பாற்குடிநீர்**

கொற்றா னிலைகற் றாழைமடல் கொடியின் கழற்சி யிலையுடனே
சிற்றா மணக்கினிலைகுறிஞ்சி சேரு முள்ளி யிலையொன்றாய்க்
கற்றா வின்பால் நாழிவிட்டுக் காய்ச்சி யுழக்கா யேவடித்துப்
பற்றா ரிந்து வுடனருந்தப் பறக்குஞ் சூரை குன்மமுமே 111

முற்றுமாண் பனையின் பாளை முறுகச் சுட்டெடுத்த சாம்பர்
அத்துடன் றேங்காய்ப் பாலு மதிற்குளங் கூட்டி யேழ்நாள்
திற்றிடச் சூலை குன்மஞ் சேர்ந்திடு மூல ரோகம்
சற்றுநில் லாது தீருஞ் சாற்றினார் முனிவர் தானே 112

**காயம்**

பிரமியின் சாற்றி னோடு பேசுபொற் கொன்றைச் சாறு
உரமிகு தைவே ளைச்சா றொருசம னாக விட்டு
மருவுபேர் காயமுள்ளி மதியுப்பு மதிற்கரைத்து
விரவிய வேரண் டெண்ணெய் விட்டுறக் காய்ச்சி யுண்ணே 113

உண்ணவே குன்மஞ் சூலை யுடலுறு மெகுத்து மூன்றும்
நண்ணுறு கொர்ப்ப ரோக நாபியின் வலியண் டத்திற்
கண்ணிய வாயு சூலை கனத்திடு ரோக மெல்லாம்
விண்ணிலே யோடிப் போகு மெனமுனி விளம்பி னாரே 114

**காந்தக்குளிகை**

காந்த மிரச மரிதாரங் கழல்முக் கடுகு திரிபலையும்
ஏய்ந்த வாள மிந்துப்பு மிசையும் விடமு மிடங்கணமும்
வாய்ந்த சீனக்காரமுடன் மதித்த நீலிச் சாற்றிலரைத்
தேய்ந்த குளிகை தூதளவா யிசைய வுருட்டி நிழலு லர்த்தே 115

†குளமுங்கூட்டி என்றும் குளம் -பிணைவெல்லம்

இப்படிச் சமைத்த நல்ல வேகாந்தக் குளிகை தன்னை
மைப்பட வெண்ணெய் தன்னின் மத்தித்து நுகர்ந்த போது
மெய்ப்படு சூலை குன்ம வியன்குட கரியெ குத்து
மைப்பட நில்லா தோடு மயிலியன் மடமின் னாளே 116

### எண்ணெய்

உள்ளிச்சா றுரியி னோடே யுறுமேரன் டெண்ணெய் நாழி
கள்ளிப்பா லுழக்கு மல்லாற் *கடுதிரி யோரு ழக்கு
†வெள்ளையிந் துப்புப் பத்து விராகனா யரைத்துள் ளிட்டுப்
‡பிள்ளைக்கற் றாழைச் சாறு பேணியே விட்டுக் காய்ச்சே 117

உற்றநற் பதத்தைப் பார்த்தே யுறுதிய தாய்வ டித்து
வெற்றிவே லவனைப் போற்றி மிகாமலோர் கரண்டி யுண்ணப்
பற்றிய குண்மஞ் சூலை பரவுத ரத்து ரோகம்
முற்றுமே தீர்ந்து போகு மொழியுரை பொய்த்தி டாதே 118

### பித்தசூரை

உந்தியை யெரித்த ழுற்றி யுளைந்துடல் மறுகிநொந்து
சிந்திட வாய்நீ ரூறித் தேகமு நெஞ்செ ரித்து
முந்திய சுழற்ற லுண்டாய் வயிறுகால் முகத்தி னோவாய்
இந்தமா குணங்கள் கண்டா லிதுபித்த சூரை யென்னே 119

### குடிநீர்

பித்தமாஞ சூரை யென்று பேசிய குணத்தைக் கண்டாற்
குத்துநெற் பொரியுஞ் சுக்குங் கூவிளை வேருங் கூட்டி
ஒத்தகொட் பருப்புங் காய்ச்சி யுறுகுளஞ் தானுங் கூட்டி
மெத்தவெச் செனக்கு டித்தால் மீளுமே பித்த சூரை 120

### சத்திக்கு

பயற்றினிற் பருப்பைப் பொங்கிப் பருகிள நீரை விட்டு
வியப்புற விரசி யிங்குப் பிழிந்துநீ ரூற்றிக் கொண்டு
நயப்புறு சீனி கூட்டி நன் கிதாய்க் குடித்த போது
தியக்கிடு சத்திபித்தந் தீர்வது திண்ணந் தானே 121

*கடுப்பொடி என்றும் கடுப்பொடி-கடுக்காய்ப்பொடி.
†வெள்ளையிந்துப்பத்து மிராவிடமைங்கழஞ்சு என்றும்
‡கற்றாழைச்சாறு உரி



எரிப்புட †னுடம்பு ளைந்தே யிறுகியே மறுகி நிற்கிற்
பருத்தசுக் கைங்க ழஞ்சு பற்பமே யாக்கிக் கொண்டு
தெரிப்புறு வெந்நீர் தன்னிற் றின்றிடப் பித்த சூரை
தரித்திடா தேகு மென்று தமிழ்முனி சாற்றினாரே 122

துய்யவா வெண்ணெய் தன்னைத் துவக்கறக் கழுவிக் கொண்டு
வெய்யமா சயிந்தந் தூளாய் விரைந்தரைத் ததனிற் கூட்டிப்
பையவே விடியற் காலை பருகிடிற் பித்த சூரை
உய்திற மில்லை யென்றே யுடலைவிட் டேகுங் காணே 123

### குடிநீர்

கீந்திலின் றண்டு சுக்குச் செங்குறுந் தொட்டி யின்வேர்
ஆய்ந்திரு வேலி லாமிச் சதிமிக நல்ல சந்தம்
வாய்ந்திள நீரிற் காய்ச்சி வடித்துடன் மீதுவிட்டுண்ணப்
பேர்ந்திடுங் குன்ம வாயு பித்தமாஞ் சூரை தானே 124

பயற்றுடன் சூரி சுக்குப் பகரொருட பிடியே கொண்டு
வயற்சுரைத்தண்டு தானும் வருகுறுந் தொட்டி வேரும்
நயக்கடு வெட்டுங் கூட்டி நலம்பட வறுத்தெட் டொன்றாய்
இயற்பட நுகரி லன்றே யேகிடும் பித்த சூரை 125

### பரராயசேகரம்.

குமரிவேர் கொற்றான் சுக்குக் குலநத்தை கடுகு ரோணி
சமமுறக் கிளத்து பாலை சிந்ததி மதுரங் கூட்டி
அமாவே நாழி நீர்விட்டாக்குவா யுழக்க தாகக்
குமுறியே குடன் மறுக்குங் குன்மமுஞ் சூரை போமே. 126

### சூரணம்.

நெற்பொரி மிளகு சுக்கு நெல்லிக்கா யோடிந் துப்பு
திற்பலி சமன் பொடித்துத் தேனுடன் குழைத்த ருந்த
அற்புகூ விளையின் வேருமரியசீ ரகமுஞ் சுக்கும்
திற்பலி நெல்லிக் காயுந் தின்னவு நன்க தாமே 127

†னிளைப் புங்கூடி என்றும்,

### சுரோணிதம் - சிகிச்சை

உந்திக்கீ ழுதாம் புக்கி யுயர்விலா வெரிந்து சிக்கிச்
சந்துகள் விருவி ருத்துத் தானுடனடுங்கும் வேர்க்கும்
இந்துவோ டாவின் வெண்ணெ யினிமையாய் நுகர்ந்த போது
வந்திடு சுரோணி தந்தான் மாறுமென் றருளி னாரே 128

### பூச்சு

நண்ணிய மருந்து தன்னை நலம்பெறக் கொண்டு பின்னர்
எண்ணெயு நெய்யுங் கொண்டே யிணங்கிட வொழுக்கியொற்றிக்
கண்ணிய வெள்ள ரைத்துக் கருத்துடன் வழித்து நீயும்
திண்ணிய நோவின் மேலே செறியவே பூசிடாயே 129

பூசிய மருந்தின் மேலே பூமத்த மிலையைப் போட்டு
மாசற வித்ன மாற்றி மன்னுபேய்ப் பீர்க்கின் காயை
வீசியே பிளந்து கட்டி விரவியங் கியிலே வைத்துக்
காசறக் கரைந்து வெந்தாற் கரைந்திடுங் கட்டி தானே 130

### இரட்சை

கட்டினா லெட்டு நாளுங் கரைந்தது மாறா தாகில்
முட்டியே செளுகஞ் செய்து முறைப்படி யுதிரம் போக்கிக்
கிட்டிடுங் கொல்லன் கோவைக் கிழங்கினைத் துவைத்து மேலே
கட்டுறக் கட்டு வீரேற் சுரோணிதக் கட்டி போமே 131

### †சிரைகுத்த

கட்டிய மருந்துக் கெல்லாம் வாடியே கரையா தாகிற்
சுற்றியே கிழித்துப் பின்னைச் சோர்வுற நனைத்துக் கொண்டு
குத்தியே கொம்பு வைத்துக் கொடிய நீர் தன்னை வாங்கில்
வைத்திடுஞ் சூலைக் கட்டி யெகுத்துவு மாறுந் தானே 132

### குடிநீர்

கருக்குவாய் கோவை யின்வேர் காரைவேர் காய்ந்த சுக்குப்
பருத்திசா ரணையின் வேரும் பையவே தறித்தி டித்துப்
பெருக்கநீர் குறுணி விட்டுப் பின்னது நாழியாக
எரித்துறக் கொண்ட போதே யேகிடுஞ் சுரோணி தானே 133

†சிரை - காரித்தோட்ட நரம்பு



கரியதாஞ் சூரை புன்னை கழற் கொடி யாலின் வேரும்
பெரியசா ரணைக்கி ழங்கு பேணுசுக் குள்ளி மஞ்சள்
உரிய நீர் நாழி வற்றி யுழக்கதா யுண்ட போதே
வருசுரோ ணிதவா தங்கள் வயிற்றுநோ வகலப் போமே 134

கொள்ளுட னுள்ளி தானுங் கூறெருக் கிலையிந் துப்பும்
எள்ளுக்காய் நத்தையின்வே ரெழில் பேறு சுக்குக் கூட்டி
உள்ளதாய் நாழி நீர்விட் டேயெரித் துழக்கத் தாக்கிக்
கொள்ளவே யோடுங் கெர்ப்ப சுரோணியும் வாய்ந் வுதானே 135

### இலைக் கள்ளி யெண்ணெய்

கள்ளியி னிலையிற் சாறுங் கழற்கொடி யிலையிற் சாறும்
உள்ளியுஞ் சிவதை வேரு முத்தமா காணிச் சாறும்
அள்ளுவெண் கார மிந்துப் பரைத் தொக்க வேக ரைத்து
வெள்ளையே ரண்ட நெய்யில் வெந்துற வடித்திடாயே 136

வெந்திடு மெண்ணெய் தன்னை விரவியே கரண்டி வீதம்
அந்திசத் தியிற்றப் பாம லருந்திடு நாட்பத் துக்கு
வந்திடு கெர்ப்ப சூலை வாயுவுஞ் சுரோணிக் கட்டும்
தொந்தமா மெகுத்துக் குன்மஞ் சூரையு மகலுந் தானே 137

### எண்ணெய் குடித்தபின் குடிநீர்

இப்படி யெண்ணெய் கொண்டா லிணங்கவோர் குடிநீர் கேளும்
ஒப்புறு மஞ்சள் தானு முயரிஞ்சி கழல்வ சம்பு
தப்பில்சா ரடைவேர் கஞ்சாத் தன்விதை சமன வித்து
வெப்புற வுண்பீ ராகிற் சுரோணித விதனம் போமே 138

### இராமபாணத் தூள்

வெண்கார மரிதாரந் திப்பில் காந்த
மிள்குவச் நாவிகொம்பு நெல்லிக் கெந்தி
பண்பான வரிதார மிந்து மோதம்
பசுமஞ்சள் முக்கடுகோர் கழஞ்சு வீதம்
நண்பான நேர்வாள மைங்க ழஞ்சு
நசியவே கல்வத்திற் றூளா யாட்டி
உண்பாய்வெந் நீரினிலே வயிற்று ரோக
மோடிவிடு மதின்வீர முரைசெய் வாயே 139

உரைசெய்த மகோதரங்கள் கவுசி கெண்டை
யொழியாத சூரைவெப்புப் பாவை குன்மம்
விரைசெய்த வலிசூரை கெர்ப்ப லாயு
விரைவாத மெகுத்துவலி குடலி லேற்றம்
கரையான சுரோணிதத்தின் கட்டி யின்னுங்
கரைந்தோடி யொழியுமந்தங் கடிய வாமை
தரை செய்த பாக்கியம்போ லிம்ம ருந்து
தானறியா தலைந்திடுவர் சனங்கள் தாமே 140

### சூரியகாந்திப் பற்பம்.

கள்ளிப் பாலு மோருழக்குக் கழஞ்சி யிரசம் பெருங்காயம்
உள்ளிப் பொடியு முரியாக வுயர்நற் கெந்தியிருகழஞ்சு
கள்ளிப் பால்விட் டேயரைத்துக் கருது நொச்சி யிலைச் சாறு
புள்ளக் கூட்டி நாழியதில் விரவிக் காய்ச்சி வெயிலில் வையே 141

வைத்தே காய்ந்து பொடியாக்கி வகையாய் கழஞ்சு நேரமொன்று
பிநத்தா தெடுத்து வெந்நீரில் விரும்பி யருந்திப் புளிபுகையும்
வைகப்பு முப்பு நீக்கிவிடிற் கவுசி யாமை யட்டலிகை
வெப்புப் பாவை பலரோகம் விட்டுப் போகு மெல்லியலே 142

### காந்தக் குளிகை

வாய்ந்தவுதரந் தனில் வருத்தம்வந்தேசாய்க்கு மருந்து சொல்வன்
சாந்த மிரச நற்கெந்தி கடுகு மிளகு கடுக்காயும்
சேர்ந்த வுள்ளி கடுரோணி திப்பில் நாவி சாதிலிங்கம்
காய்ந்த சரக்குக் கழஞ்சுவகை யேறக் குறையக் கூட்டாதே 143

எறும் வாள் மிருகழஞ்சு மிளநீர் விட்டுத் தானரைத்துக்
கூறுங் குளிகை தூதளவாய்க் குணமாய்த் திரட்டி நிழலுலர்த்தி
மீறுஞ் சுக்குச் சாற்றிலிட விட்டுப் போகு முதரத்தில்
ஊறும் வாயு புரட்டி வடித் துள்ளே குமட்டுங் குத்துகளே 144

குத்துக் கொளுவல் தனைக் கண்டாற்கொடுப்பீர் நிம்பநெய்யதனில்
சற்றே கெர்ப்ப வாயுவிற்குச் சாரணை வேரின் சாறதனிற்
சித்த மயக்குஞ் சன்னிக்குச் †சிந்து வாரத் திலைச் சாற்றில்
மெத்து வீக்கந் தனைக் கண்டான் மிகுநீர் முள்ளிச் சாகமதே 145

†சிந்துவாரம் - நொச்சி



சாகந் தன்னிற் கொண்டபின்பு தண்ணீர் வெந்நீர் தனிற் கொள்ளு
வேகித் துத்தான் பொருமியது மிகவே கழியு மறுக்க வெனில்
தாகத் துடனே யறும்பச்சைத் தண்ணீர் கூட்டு மருந்துடனே
பாகத் துடனே கழிச்சலும்போம் பலவா நோய்கண் மாறிடுமே 146

மாறா திருக்கின் மோர்குடியும் வயிற்றுக் கழிச்ச லுடன் மாறும்
வீறா மாவி னிலைச்சாற்றை வெயிலில் வைக்கத் தானுறையும்
தெறாய் தொப்புழ் தனில்வைக்கத் தீராக் கழிச்சல் தீர்ந்து விடும்
பேறா யிதனைச் செய்வீரேற் பெரிய வயிற்றிற் பிணிபோமே 147

### நீராமை

மார்பின் கீழ் வயிறு தாழ்ந்து வகைபட வலிப்பு முண்டாய்
நேரொத்த காயம் வற்றி நிறமது வெளுத்து நாவும்
நீர்வற்றித் தண்ணீர் தேடு நினைவற்று மலமுங்கட்டும்
வார்கட்டு முலையாய் கேளாய் வயிற்றில் நீராமை தானே 148

உடம்பு முலர்ந்துள் ளிருமலுண்டா யுதரம் வீங்கிநாவரண்டு
தடங்கண் வெளுத்துப் பிறங்காலுந் தடித்து வீங்கித் தாகமுமாம்
அடர்ந்த மூச்சுத் தொடர்ந்தோடு மனந்தல் மிகவு முண்டாகும்
மடந்தாய் சொன்னோ நீராமை வருத்துங் குணங்க ளிவையாமே 149

நாபிமே னெஞ்சு ளாக நடுவ றாமையிபோலச்
சோகமாய் மிகவ லிக்குஞ் சோர்திடுங் கண்கள் தாழும்
தாகமா யன்றி நிற்குந் தன்னுடல் கொள்ளா தன்னம்
கோபமாய்ப் பொருமும் வாயு கொடியநீ ராமை தானே 150

### பேராமை

மோதிடு முதரம் விம்மு முழங்கிடு மூதை மென்மேற்
பேதமாய் மேன்மூச் செய்தும் பெருகிடு மிளைப்புத் தாகம்
வாதையா யோங்கி வீங்கு மலசல மடைத்துக் கொள்ளும்
பேதமே செய்யு நீகேள் பேராமைக் குணமி தாமே 151

வீங்குஞ் சலமு மிகக் கோர்க்கு மிகுந்து பொருமு முடம்பெங்கும்
தூங்குங் கண்ணு மேன்மூச்சுந் துன்னும் புளியிற் றாகிக்கும்
வாங்கு முதகந் தனைத் தேடு மறுகித் துயா மிகுந்திருக்கும்
தேங்கு மதுவே பேராமை செய்யுங் குணங்க ளறிவாயே 152

### இவற்றின் அசாத்தியக்குறி

நெஞ்சுமே லுடம்பு வற்றிநிலைபெறு நரம்பு தோன்றிப்
பஞ்சுபோல் நாவுங் கண்ணும் பாண்டமும் வெளுப்ப தாகி
விஞ்சிய வண்டம் வீங்கிக் குமுறியே மலமுந் தீயிற்
துஞ்சுவ துண்மை யென்று சொற்றனர் கலைவல் லோரே 153

### பெருவயிறு

கருவியு மந்தம் பற்றிக் காயுமு முடம்பும் வற்றிப்
பெருகிய வுதரந் தானும் பெருகிடப் பொருமி விம்மும்
மருவிய வுண்டி மாறி மலத்தையு மறிப்ப தென்னில்
பெருகிய வுதா தோஷம் பெருவயி றென்ன லாமே 154

சலமலஞ் சிக்கிக் காட்டித் தாகமு மதிக மாகிப்
பலபட மயக்க மாகிப் பழஞ்சுர மறாதே நின்று
குலவிய வயிறு விம்மி யவையவங் குழைந்து காட்டிப்
பெலமிகக் குறைந்து காட்டும் பெருவயிறு றென்ன லாமே 155

### அகுவை

கல்லென வீர லோடே கனத்திடும் புகைந்து காட்டும்
புல்லிய வசனந் தானுங் குறைந்திடும் பொரும லாகும்
பல்பல வலியே யாகும் பசியின்றி மந்தம் பற்றும்
வல்லியே மலமுந் தீயு மகுவையாம் வாயு வாமே 156

மேனி வரண்டே யுதரத்திற் கனத்து வீங்கி மெய்வெளுத்து
வாய்நீர் சுழற்றி நெஞ்செரித்துக் கண்ணுமுகமும் வரண்டுலரந்து
ஊனே யுருக்குஞ் சுரமாக வுடம்புங் கனக்கு மிவை கண்டால்
மானே யகுவை வாயுவிது மண்ணோ ரறியச் சொன்னாரே 157



### கவுசி

ஈரலிற் கனத்தே யுந்தி யிருவிலாப் புதைய வீங்கிக்
கூரிய வூதை மூலத் துள்ளிலுங் குறுகிக் காணும்
சீரிய வசனந் தானுஞ் செறுத்திடும் வலியே வாங்கும்
மார்பது குளிர்ந்து காட்டுங் கவுசியாம் வாயு வாமே 158

இருபுய மார்பு வற்றி யெழுநரம் புதர மீது
பொருமிடும் வயிறு தானும் புடைத்தெழு நாவிற் சுற்றில்
மருவிய விலாவி ரண்டில் வருந்திடக் குத்தி நோவாம்
இருகரங்காலும் வீங்குங் கவுசியின் குணமி தாமே 159

### கெண்டை

சுரந்திடைக் கலந்த நீராற் சூழலிற் சீத நீரால்
வருத்திய கொடுஞ்சு ரத்தான் மந்தத்தா லூதை தன்னாற்
பறித்துறு மசீர ணத்தாற் பசியிற் றிரிதோ ஷத்தாற
பெருத்திடு மீர லோடுட் கெண்டைநோ யென்று பேனாசே 160

இருவிலா நரம்பு தோன்றி யீரலோர் பக்கந் தன்னிற்
பொருமிடுங் கொழுப்போனின்று வலித்திடும் புளித்தேக்கும்
மருவிய வன்னந் தானு மறுத்திடு மாளும் வற்றும்
பெரியவ ருரைத்தார் கெண்டை நோயெனப் பேசலாமே 161

சுரத்தினாலுடம்பு வற்றித் துடியென விடிக்கு நெஞ்சும்
உரைத்திடையீரன் மேலே யிபுறங் கனப்ப தாக
வருத்திடும் வலியு முண்டா மலமுலர்ந் துருண்டு வீழும்
பெருத்திடு தவத்தோர் கெண்டை வாய்வெனப் பேகின்னரே 162

### பிலிகை

மலத்தை யிறுக்கி மந்தித்து வலுவா யுதரந் தனிற்புரளும்
பெலத்தை குறைக்குமீரலொடுபெருகக்கனத்துத் திரண்டேறும்
உலர்த்து மசனங் குறைந்துவரு மோங்காளிக்கு மேப்பமுண்டாம்
குலத்திற் பெரிய பிலிகையினிற் குணத்தைப் பேசுங்குறியாமே 163

### வெப்புப்பாவை

அப்புங் காற்று மங்குரித்தே யடைபட்டீர லிடைப்பற்றி
வெப்புத் தோன்றி யகட்டங்க மிகுந்து வளர்ந்து மேல்வற்றும்
எப்போ தைக்கும் வாராம லிடையே யொருவற் குண்டானாற்
தப்பில் வெப்புப் பாவையென்பர் தடித்து வயிறு பொருமிடுமே 164

### (பாடபேதம்)

அய்யுங் காற்று மிகவுண்டா யந்தித் திருந்தே யுடல் வற்றும்
கையுங் காலு நரம்பெடுத்துக் கைப்பும் புளிப்பு மிகத் தேடும்
உய்யும் வயிறு வலித்திருக்கு மொருபக் கத்தே தான் கிடக்கு
வெய்ய வெப்புப் பாவையிது வென்றே முனிவர் விளம்பி 165

### மகோதரம்

வந்திடு மகோத ரத்தில் வாயுவு நேரே யோடா
சிந்திடு முடலும் வாடி யுதாமு மூதிக் கொள்ளும்
நொந்தடி பிறங்கால் வீங்கு நுட்பமாய்க் கண்டு பின்னும்
தந்திடு மகோத ரத்தின் குணங்களைச் சாற்று வோமோ 166

வாண்டுகண் வெளுத்துக் கொள்ளும் வாயுவும் பொருமிக் காட்டு
திரண்டிடுங் குடலைப் பற்றிச் செருமிடும் புதைய வீங்கும்
கரங்கழல் தடித்து வீங்குங் கனித்திடும் பொருமிக் கொள்ளும்
தெரிந்திடுங் குணங்கள் கண்டால் மகோதர மென்று தேரே 167

பசியின்றிச் சோப மாகிப் பழமலங் கருகி வீழும்
அசைவுக ளெல்லா நோவா மடிவயிறதைத்துக் காட்டும்
இசையவே யூதை விம்மி யிளைத் திடும் வரளு நாவும்
வசையுறு குணங்கள் கண்டால் மகோதர மென்னலாமே 168

வயங்கெட வெளுக்குமேனி வாயுவு மிகுந்தூன் வற்றும்
தியங்கிடச் செய்யு மெத்தச் சிறுத்திடு வாயு மென்மேல்
அயர்ந்திடுஞ் சந்து கைக ளண்டமும் வயிறும் வீங்கும்
வயங்கிழை மின்னே கேளாய் மகோதர மென்ன லாமே 169



அங்கமும் புடைக்க வீங்கி யழலின் மேற் றாப மாகி
மங்கியே யுதரந்தன்னில் வாயுவுஞ் சலமுங் கோத்துக்
கங்குல்சேர் நேரமானாற் கடியதோர் வாதை பண்ணும்
மங்குல்போ லளக மானே மகோதர மென்ன லாமே 170

இருமிடு மிளைக்கும் வாந்தி யெதிர்த்திடும் பொருமிக் கொள்ளு
வெருவிடுங் கண்கடாமும் வீங்கிடும் வயிறுந் தாளும்
இருவிலா விசிய விம்மி யிரைந்திடு மூதை மென்மேற்
கருகிநீர் மலமுஞ் செம்முங் கண்டுகொண் மகோத ரந்தான் 171

### மகோதரத்தில் அசாத்தியக்குறி

மேவிய மலச லங்கள் விடாமலு மிளைப்பினோடு
பாவிய சுரமுண் மூச்சுப் பற்றறாக் குணங்க ளாகிக்
கோபமாய் மிகவும் வீங்கிக் குரைத்திடுங் குணங்கள் கண்டாற்
சரவது திண்ணமென்று சடக்கென விட்டுப் போகே 172

### சாத்தியக்குறி

மலமொடு சலமு முண்டாய் வாயுவுங் கீழே நோக்கிக்
குலவிய வயிறு நானுங் குழைந்து தாழ்ந்த திருக்கு மாயின்
பெலமிகு மருந்தி னோடு பேசிய கிரியை தானும்
நலமுறச் செய்க வென்று நாகமா முனிவர் சொன்னார் 173

பேசிய மலச லங்கள் கழிதலும் பெருத்த வீக்கம்
வீசிய விடங்கள் தாழ்ந்து குழைதலும் விரவிக் கண்டாற்
கூசிட வேண்டா மிந்தக் குறிகளுண் டான போது
மாசிலா னருளை யுன்னி மருந்துசெய் மாறு மன்றே 174

### †சிகிச்சை

#### காடி

இயங்கமிலைச் சாறுடனே பிரமிச் சாறு
மினியகரி சாலையினிற் சாறு தானும்
வயங்கியநல் வீழியிலைச் சாறு மீஞ்சின்
வருகுருகின் சாறுபனைச் குருகிற் சாறு
நயம்படுசம் பீரத்தின் பழத்திற் சாறு
நவின் றபடி யோரொன்று படிதான் கூட்டித்
தியங்கிடுமாண் பனைக்கள்ளுப் படியி ரண்டு
சிவந்த புதுக்கலசத்திற் சேர்த்தி டாயே 175

†மருந்துகள் பிரதிகள் தோறும் வெவ்வேறாய்நூற்றுக் கணக்காகக் காணப்படுகின்றன. விரிவஞ்சி ஒருசிலவே இங்கு எழுதப்படுகின்றன.

சேர்ந்திடுமு சிக்காந்தங் கீச்சுக் கிட்டஞ்
செய்யவரப் பொடியுமிவை பலமோ ரொன்று
சார்ந்திடித்துச் சீலைவடி கொண்டு தூவிச்
சாற்றுடனே கலக்கி வைத்துத் தீயின் மேலே
ஆர்ந்திடவே சிறுகொதியிட் டிந்த வண்ண
மடுத்துவரு நாடோறுங் கொதியிற் காட்டி
மாந்தியிட வேழுநாட் பத்தியங் கார்
மகோதரமுட் பாண்டுகா மாலை போமே 176

**கடுக்காய்க்குழம்பு**

உண்டிதரஞ் சாதிலிங்கங் காயங் காந்த
மோமமில வங்கமதி மதுரங் கோட்டம்
*சுண்டியரை பொடிமிளகு தொடுத்த சீரந்
தும்பல்நவச் சாரமல்லி சவர்க்கா ரந்தான்
†இண்டிசைதிப் பிலியிவையோர் நிறையிற் கொண்டே
யிளநீரு மொருநாழி கடுக்காய் நூறு
‡குண்டை கொச்சை யருந்தாதார் குருகுமிஞ்சின்
குப்பையடர் காஞ்சோன்றி பிரமி கூட்டே 177

கூட்டுமெலு மிச்சங்காய்ச் சாறு நாழி
குழம்பாக்கிக் கழஞ்சருந்தக் காலை மாலை
வாட்டரிய நீராமை பிலிகை யட்டி,
மகோந்தரஞ்சே ரெகுத்திளைப்பு வகுத்த சோகை
ஊட்டுசம்பா வுப்பிலியூண் கோழி முட்டை
யுள்ளருந்திற் சலமூறு மூறா தாகிற்
காட்டுமுல்லை களப்பனைவேர் கன்மு ரீச
காராவின் கோமயத்தி லுள்ளே கொள்ளே 178

**கும்மடிக்காய்க்குழம்பு**

அலகையெனுங் கும்மடிக்காய்ச் சாறு நாழி
யதினளவே சம்பீரப் பழத்திற் சாறு
குலவுசெறி நொச்சியினிற் சாறு நாழி

*சுண்டி - சுக்கு †இண்டு - ஈயச்செடி
‡குண்டை - சேங்கொட்டை



கொள்ளிவைவெள் ளுள்யிஞ்சிச் சாறு நாழி
சலமறவே காய்ந்து வற்றி நாலொன் றானாற்
றன்னோடு சாதிலிங்கஞ் சூதங் காயம்
நலமுடைய வெண்காரஞ் சோம னுப்பு
நற்கடுகு மோதகமு நயந்து கொள்ளே 179

கொள்ளுவது வெந்தயமு மிளகு மஞ்சள்
குலஞ்சேரு நேர்வாளங் காந்த மோரொன்
றுள்ளபடி நிறைமூன்று கழஞ்சு கொண்டே
யொன்றுபட விடித்தரைத்துத் துளாவிக் காய்ச்சி
மெள்ளவது பழப்புளிபோ லிறக்கி வைத்து
மிகாமற்றூ துளங்காய்போ லுள்ளே கொள்ள
உள்ளபடி குன்மமெட்டு வாயு வர்க்க
முதரமுறு தோஷமெலா மோடிப் போமே 180

**கும்மடிக்காய்க்குழம்பு - 2**

பேய்க்கொம்மடிக் காயினுறு சாறு நாழி
பேசெலுமிச் சம்பழத்தின் சாறு நாழி
நாய்க்கடுகு மேனிசா ரடைபி ரண்டை
*நானாவெண் ணொச்சிசிறு தும்பை யுள்ளி
வாய்ப்புறுநற் கொழுஞ்சியிஞ்சி யு வாய்தை வேளை
மருந்தொன்று நீர்நாழி வற்றக் காய்ச்சிக்
காய்ப்புறவே நானாழி யாக வெந்தாற்
கடுகுரோ கணிசிவதை கருஞ்சீர் காயம் 181

காந்தமுட னுப்பைந்து சார மைந்து
காரமைந்து துரிசு துத்தங் கருது மஞ்சள்
ஏந்திழையே சாதிலிங்கஞ் சூத நாவி
யிருவிநெல்லிக் கெந்தகமு மினிய மோதம்
போந்ததிரி கடுகுதிரி பலைவெள் ளுள்ளி
பூவையே வெந்தயமுங் கடுகு பூவில்
ஆய்ந்து நிறு முக்கழஞ்சு சுத்தி வாள
மதுவுநிறை மூன்று கழஞ் சரைத்து மானே 182

*நானா - இலைக்கள்ளி

வேலிவேர் வன்னிநில வாகை வேரு
    மிக்கவுவாய் நன்னாரி வீழி வேரும்
ஆலவிழி மானேசா ரடைகொ முஞ்சி
    யவையொன்று பலம்பத்துக் கடுக்காய்த் தோலும்
ஏலுந்நீர் தூணிவிட்டே யெட்டொன் றாக்கி
    யிறுத்ததிலே விட்டோண் டத்தி லெண்ணெய்
கோலியொரு படிவிட்டுப் பனையின் வெல்லங்
    கூட்டியொரு பதின்பலமுங் குறுகக் காய்ச்சே 183

காய்ச்சுப்பழம் புளிபோலப் பதமே வந்தாற்
    கருதுமுண்டை சுண்டைக்கா யளவு கொள்வாய்
கூச்சமற மண்டலங்கொ ளுதர தோஷங்
    குன்மமகோ தரமெகுவை பிலிகை கெண்டை
ஒச்சமுறு நீராமை கெர்ப்ப சூலை
    யுடன் சூலம் பெருவயிறு வுந்து வாதம்
வாய்ச்சதொரு கவுசியிவை யெல்லாந் தீரு
    மலையமுனி யருளியதா மதித்துக் கொள்ளே 184

## ஏரற்குழம்பு

பெருத்துவளர் பெருவயிறு வெப்புப் பாலை
    பீடுடைய வயிறூதல் பிணிகட் கெல்லாம்
திருத்தமுற நோவாளஞ் சீனக் காரஞ்
    சிறப்புடைய வேர்க்கொம்பு கடுகு தானும்
உரைத்திடுமு சிக்காந்த மிந்துப்போடு
    முற்றபெருங் காயமினு மிளகு நல்ல
அருத்தியுள கன்மதமுங் கடுகு ரோணி
    யைங்கழஞ்சு வகையொன்றுக் களவு கூட்டே 185

கூட்டியிடு சாரணையின் கிழங்கு தன்னைக்
    குறையாமல் நாலுபலங் கூட்டிக் கொண்டே
ஈட்டியிடு வெள்ளாட்டுப் பாலும் வார்த்தே
    யிதமுடைய வக்கினியிட்ட டவித்து லர்த்தி
நாட்டமுட னோலையும் பலமி ரண்டாய்
    நன்றாக வவித்துலர்த்தி யிடித்துத் தூளாய்
வேட்டமுள தேங்காய்ப்பால் விட்டுக் காய்ச்சி
    வெந்துவரு மளவினினல் லெண்ணெய் சேரே 186



சேருநல்ல பதமதிலே யிறக்கி வைத்துச்
    செவ்விதாய் நாடோறுந் தின்பீ ராகில்
நாரமதிற் றாகமெனில் வெந்நீர் கொள்ள
    நலமற்ற புளியுப்புக் கைப்புத் தள்ளப்
பாரமுறு பெருவயிறு வெப்புப் பாவை
    பகருதர வளிசூரை வலிக ளெல்லாம்
காருடைய விருள்முனே கதிரோன் சென்றாற்
    கருமையெல்லாங் கரைந்ததுபோற் கரைந்து போமே 187

## ஏரற்குளம்பு - 2

எருமைமுல்லை யிலைச்சாறு சங்கங் குப்பி
    யியைந்திடுபேய்க் கொம்மடியின் காயிற் சாறு
தருமிவைகள் படியொன்று பேய்க்க ரும்பின்
    சாறுமெலு மிசையினிற் புளியும் பாதி
லருமஞ்சட் கிழங்கின்சா றதுகாற் கொத்து
    வகுத்திட்ட வேரற்றூள் கொத்திற் பாதி
பரியசது ரக்கள்ளிப் பாலா மூக்குப்
    பகர்சிவதை வே*ரிரண்டு பலமுங் கூட்டே 188

வெள்ளையுள்ளி மூன்று பல மிந்துப்பொன்று
    விளம்பியசுக் கரைப்பலமாஞ் சாரம் பாதி
உள்ளபெருங் காயமுட னரத்தை யோம
    மோரிரண்டு கழஞ்சரைத்துக் குழம்பாய்க் காய்ச்சிக்
கள்ளமறு மாணபனையிற் கட்டி கூட்டிக்
    கழஞ்சருந்தப் பத்தியமாய்ப் பிறநீர்க் கோவை
எள்ளலுறு முதரநோ யெகுத்துக் குன்ம
    மிவைதீருந் தேன் முலைப்பா லனுபா னத்தே 189

## காந்தக்குழம்பு

திப்பிலி மதுரஞ் சுக்குச் சீரகங் கரிய சீரிந்
துப்பரே ணுகங்க ராம்பு சொல்பெருங் குரும்பை காயம்
தப்பறு விழால்வெட் பாலை தானறிக்காய் குலக்காய் கோட்டம்
வெப்பறு கண்டில் வெண்ணெய் வெள்ளள்ளி வசம்பு மஞ்சள் 190

*சிதைவேர்பத்துப் பலமும் என்றும்

கார்புகாச் சிறிய மூலங் கருதுசந் தனமே மல்லி
சீர்பெறு வெளுத்தல் குப்பை சிவந்தசா திலிங்க நெல்லி
பேர்வசு வாசி யேவா, லுளுவையு மக்கறாவும்
நீர்பெறு சீனக் கார நவச்சரஞ் சவர்க்காந்தான் 191

இங்கிவை கழஞ்சி ரண்டோ டியன்மனோ சிலைக ழுஞ்சு
செங்காந்த முக்க ழுஞ்சு சோரப்பொடியும் பத்துப்
பங்கமில் மிளகு தானும் பகரிலோர் பிடியுங் கூட்டித்
தங்குநா யுருவிச் சாம்பல் சாருமாண் பனையின் பாளை 192

சுட்டிடு சாம்பல் தானுஞ் சொல்லிலோர் நிறையாக் கூட்டி
மட்டுறு தேசிக் காயில் வருபுளி கடுக்காய் நெல்லி
அட்டிடு சாறு தம்மி லரைத்ததைக் கரைத்து வெந்தால்
விட்டிடு நெய்யுந் தேனும் விரவிடக் குழம்பாய்க் காய்ச்சே 193

காய்ச்சியே யந்தி சந்தி கழன்மணி யளவு கொள்ளக்
காய்ச்சலின் வெப்புப் பாவை கடுமகோ தரநீ ராமை
பேச்சுறு பாண்டு சோகை பேராமை யட்ட லீகை
தீச்செறி பஞ்சு போலத் தீர்ந்திடு மென்று தேரே 194

**சிந்தாதிக்குழம்பு**

புளியிலை தூணி சாற்று கடுக்காய் போந்திடு நானூறு
போற்றிய சிவதையு முள்ளியுமஞ்சள் புகழ்பெறு மவுரியுடன்
களிதரு மூசி மல்லிகை சாறடை கனமுத் தக்காசுங்
கடுகொடு வேலியும் வேப்பம் பட்டை கருங்கீழ காய்நெல்லி
தெளிதரு வில்வக் காய்தூ துளையுந் திகழ்நா யுருவிவளரு
சேர்தரு வட்டத் திருப்பொடு சங்குந் தெசமூ லாதான்
துளிதரு சேங்கொட் டைநல் வசம்புஞ் சொற்சிறு மட்டியுமே
சூழ்பேர் மட்டி கரும்பு கரிப்பான் சொற்றிரி பலைபதுவும் 195

வகைக்கிவையோ ரொன்று பத்துப் பலமுங் கிட்ட
மருவபல நூறிரும்பு பலமு நூறு
சுகப்படவே கூட்டியெட்டு மரக்கால் நீருஞ்
சொல்லரிய கோமியமப் படியுங் கூட்டி
வகைப்படவே யெட்டொன்றாய் வடித்துக் கொண்டு



வளமான பனைவெல்ல மிடைதா னொன்று
முகைப்படுமாண் பனைக்கள்பேய்த் தும்பை முள்ளி
முதிருமஞ்சள் கொடுவேலி வேருங் கூட்டே 196

கூட்டுபுளி யம்பட்டை கீரைத் தண்டு
குளிர்புரோ சின்சருகு சுட்ட சாம்பல்
வாட்டமற நானாழி யதனிற் றண்ணீர்
வளமாகக் குறுணிவிட்டு வடித்துக் கொண்டு
நாட்டமுட னாரத்தம் பழத்திற் சாறு
நானாழி சதுர்க்கள்ளி யவுரி தானும்
ஈட்டமுறு நொச்சியிலை குப்பை மேனி
இனியதோர் வண்டிலைசா றடையுந் தானே 197

சங்கிலைகல் லூரியுடன் பிரமி தானுந்
தடித்தவிஞ்சி சாறிவைகள் வகைக்கீர் நாழி
பொங்கமுறு நெய்நாழி யெண்ணெய் நாழி
போதவே காய்ந்துபத மான போது
தங்குகரி சாலைச்சாற் றினில்சுவ றுத்த
சாருமர பொடியதுவுஞ் சிங்சி தானும்
துங்கமுறு திரிபலையுங் கடுக மூன்றுஞ்
சொற்றவிரு சீரகமு மிலவங் கத்தோல் 198

தானுமில வங்கபத்ரி யிந்துப் போமந்
தந்திடுவாய் விளங்கமுடன் றேவ தாரம்
ஆனதொரு திப்பிலிமூ லந்தா னெல்லா
மடைவாகப் பலமொன்று பொடியாய்ப் பண்ணி
மானமுட னே தூவிப் பதத்தி லாற்றி
வளமாக விருநாழி தேனும் விட்டே
ஊனமறக் கலந்தெடுத்துக் கழஞ்சு கொள்ள
வுதரநோய் பாண்டுகா மாலை போமே 199

### இலைக்கள்ளிக்குழம்பு

இலைக்கள்ளி யிலைச்சாறு படியி ரண்டோ
டியலுமதன் பாலதுவும் படியிரண்டு
குலப்பசுவின் மூத்திரமோர் படியு மாகுங்
கோவின்னெய் யரைப்படியுங் கூட்டிக் கொண்டு
விலக்கறுசா ரணைவேர்த்தூள் படியு மாகும்
வேறுகுள வட்டைத்தூ ளொருசிறங்கை
இலக்குறுமாண் பனைப்பாளை சுட்ட சாம்ப
லீஞ்சினது குருகுகிட்ட மயத்தின் றூளும் 200

தூளிவைக ளொவ்வொர்பிடி குந்து ருக்கஞ்
சொற்பெரிய காயமுடன் றுரிசு துத்தம்
வாள்விழியா யிந்துப்புச் சீனக்காரம்
வகுத்தபொரி காரமுடன் சவர்க்கா ரந்தான்
நீள்கடுக்காய் நவச்சார மிவைக ளெல்லாந்
நிறுத்திரண்டு கழஞ்சுநேர் வாள வித்து
மாளாது சுத்திசெய்தங் கிருபான் கொட்டை
வருசாதி லிங்கமரைக் கழைஞ்சு மாமே 201

ஆகுமே யிவையெல்லா மரைக ரைத்தே
யரும்பதத்திற் குழம்பாக்கி யருந்தக் கேண்மின்
சேருமொரு வெருகடிதான் னெய்யிற் றோய்த்துத்
தின்னவுத ரத்தினுறு நோய்கள் யாவும்
தீருமே யெகுவையட்டி யாமை யாம்பால்
தீராத பெருவயிறு பலவுந் தீரும்
பேரதுவு மிலைக்களிக் குழம்பா மென்று
பேசினார் மலையமுனி பெட்பாய்த் தானே 202

### சாரணைக்குழம்பு

சாரணை சமூலந் தன்னிற்சாறது நாழி யொன்று
வேர்தனை யரைத்தெ டுத்து விளாங்காயி னளவு கூட்டி
எருறு கோம யந்தா னுரிய தன் னெய்யு மூக்குப்
பாருறு கள்ளி யின்பா லாழக்குப் பரிந்து சேரே 203



சேருமிந் துப்பு மூன்று கழஞ்சதைச் சேர்த்த ரைத்து
நேருறு சட்டி யொன்று நிகழவே காப்புக் கட்டிப்
பாரிதிற் காய்ச்சி யொட்டும் பருவத்தி லிறக்கி வைத்து
நேரமொன் றரைக்க முஞ்சு நினைந்துண நன்ற தாமே 204

### புளியிலைக்குழம்பு

குலம்படு புளியி லுற்ற விலைமூன்று குறுணி கூட்டிப்
பலம்படு காடி தானும் பகருமுக் குறுணி யாக
நலம்படு மிலைது வைத்து நாற்காடி தனிற்பி சைந்து
கலம்பட வடித்தி ரும்பின் பொடிபலங் கலந்து கொள்ளே 205

கொள்ளுமம் மருந்து தன்னைக் குறுகவே துளாவிக் காய்ச்சி
விள்ளுமோர் குறுணியாக விதிபெற வடித்துக் கற்கம்
உள்ளியோ ருழக்குப் பின்னு முறுகடு நோரு மூக்குத்
தெள்ளிய மிளகு மூக்குச் சேரவே யரைத்துக் காய்ச்சி 206

பசுவினெய் கூட்டி நல்ல பருவத்திற் காய்ச்சிக் கொள்ள
வீசியுற பொருமன் மந்தம் வியன்மகோ தரமும் போகும்
கசியுறு வெப்புப் பாவை கழிந்திடுந் நீரும் வற்றும்
பசியறும் முனிவர் முன்னாட் பகர்ந்தசா நனம தாமே 207

சாதனங் கண்டு பின்னுஞ் சாற்றிய* மருந்திற் ‡காட்டு
மேதிப்பா லுரியுங் கூட்டி மிகுகுளம் பலமொன் றாகும்
காதிடு மிளகு சுக்குக் கடுவசம் புள்ளி மிக்க
நீதிநேர் வாளங் கம்பிப் பிசினுநேர் கழஞ்சு கொள்ளே 208

கொண்தோ ரடுப்பி லேற்றிக் குறுகவே துளாவிக் காய்ச்சிக்
கண்டதோர் பதத்தைப் பார்த்துக் கலந்துறவெடுத்தேயுண்ணப்
பண்டுமால் தேடிக் காணாப் பரமனா ரருளி னாலே
விண்டதோர் மகோத ரங்கள் விரையவிட் டேகுங் காணே 209

*முன்சொல்லிய புளியிலைச்சாறும் இரும்பும் வடித்த கஷாயத்தில்
‡காட்டு மோதிப்பால் - கள்ளிப்பால்

### காந்தக்குழம்பு

காந்த மிதரஞ் சாதிலிங்கங் கடிய நவசீன சவர்க்காரம்
போந்த வெண்கார மிருசீரம் புகலு மோம மிளகுள்ளி
வேந்த திப்பிலி வேர்க்கொம்பு வெந்தயங் கொத்த மல்லிகிட்டம்
மாந்த ரராவு மரப்பொடியு மன்னுங் குப்பை மேனியுமே 210

மேனி கறுத்த கைத்தகரை மீறுஞ் சிறுகாஞ் சோன்றியுடன்
கானி லாடு மருந்தாத கடிய பாலை பிரமியதும்
கூனி லீச்சங் குருகுமெலு மிச்சம் புளியுங் குழம்பாக்கித்
தேனி லினியா ரேயருந்தத் தீரும் வியாதி செப்புதுங்கேள் 211

முன்சொல்லிய புளியிலைச்சாறும் இரும்பும் வடித்த கக்ஷாயத்தில்
காட்டுமே திப்பால் - கள்ளிப்பால்

செப்பிய மகோதர முடன் பிலிகை யட்டி
சேர்குடலில் வாதமுட னேகெண்டை தானும்
வெப்புமிகு பாவையது மேகுநீ ராமை
மேவுமுத ரத்திலமர் நோய்வகைக ளெல்லாம்
தப்பற வகன்றுவிடு மென் றுமுனி வோர்கள்
சங்கர னளித்தமுரு கேசனரு ளென்றே
இப்புவி நரர்க்குறு பிணிக்கென வியம்பு
மேதமறு வேயிதனை யெண்ணியறிவீரே 212

### காந்தக்குழம்பு - 2

இரசங் கழஞ்சொன் றரையூசிக்காந்தமியம்புமது மூன்றினுடனே,
யிதமானவரை பொடியுமுன் றுகிட்டத்தூளிதுவுங்கழஞ்சுமூன்று,
வரதன்கலந்த சாதிலிங்கங்கழஞ் சொன்று வலியவரி தாரமொன்று,
வருமிந்துவொன்றுவசீனசவர்பொரிகாரைவகைநாலுமரையரையதாய்
, விரதங் கொளுங்கடுகு ரோகிணியு மிருசீர வேர்க்கொம்பு திப்பிலியு
மோமம்,மிளகுள்ளி யோரொன் றிருகழஞ்சரிதகி விளங்குற்ற
நெல்லிநூறு, சரதங் கொளுங்கா யிரண்டு மூறிடுநீர் தனிலரைத்
தேசரக்கைச், சயமான கொன்றையச மருந்தாக பாலைபாற் சோற்றி
தயவுற்ற வல்லாரலும் 213



வல்ல சொன்றி கன்முரிசு வயங்குறு துளிரோர்பிடி
நல்ல சாறு மெலுமிச் சிலங்கு புளியு மோரளவு
மெல்லக் கரைத்துக் குழம்பாக்கிவிரையக்காய்ச்சியருந்துவிரேல்
கொல்லக் கொடுத்த மகோதரமுங் குலவு முதரப் பிணிபோமே

### காந்தபற்பம்

அரிதாரஞ் சாதிலிங்க மனோசிலை யிந்துப்பு
மதிவிடயங் குறாசானி பெருங்காயங் கோட்டம்
பெரிதான கொத்தமல்லி திப்பிலி வேர்க் கொம்பு
பேரான மிளகிருவி கடுகுலுவா வுடனே
பரிதான நெல்லிக்காய்க் கெந்தகமு மிருசீர்
பண்புடைய பகர்பஞ்ச காரமொன்றோர் கழஞ்சாய்
அரிதான வரபொடியு மீரெட்டுக் கழஞ்சா
யயக்காந்த முக்கழஞ்சி ரசங்கழஞ்சு கொள்ளே 215

கொள்ளுவது காந்தபற்பங் கற்தகரைச் சாற்றிற்
குணம்பெறவிட் டேயரைத்துப் புதுச்சட்டி தப்பி
மெள்ளவது வுலர்ந்தபின்னர்ப் பொடியாக்கி யெடுத்து
வெருகடியி னளவாகத் தேனதனிற் கொள்ள
உள்ளமகோ தரமுடனே யட்டிவெப்புப் பாவை
யூதுகா மாலைநீ ராமையொடு பாண்டு
எள்ளளவு மில்லாம லேபறந்து போகு
மென் றுமுரு கேசனரு ளான்முனி யியம்பும் 216

### ஏரற்பற்பம்

வயிறு பொருமல் வலிகுன்ம மாறாச் சோகை காமாலை
எயிறு மேரல் சாரணைவே ரிரண்டுங் கூட்டிப் பொடியிட்டு
வயநல் லிங்கு நேர்வாள மருவுங் கடுகு ரோகணியும்
பயபேர் கராம்பு மிளகுலுவாப் பகரிந் துப்புச் சீரகமே 217

சீனக் காரம் வேர்க்கொம்பு செறிந்த கடுகு கன்மதமும்
தானிற் கழலுஞ் சவர்க்காரஞ் சமனோ ரொன்று நாற்கழஞ்சு
கானிற் றழலிற் பொடியிட்டுக் கதித்தகாய முடன் கூட்டி
வானுற் றெழுந்த தேங்காய்ப்பால் மருவச் சேர்த்து வாட்டுவரே 218

வாட்டிக்காரெள்ளெண்ணெய்தனில்வரள வெரித்துப்பொடியிட்டே
ஆட்டுங் காலை மாலைகழஞ் சருந்தப் பஞ்ச குன்மமுடன்
மீட்டுங் குடலிற் கற்சூலை மிகுத்த சூலை மெல்லெகுத்து
மூட்டுங் கனலிற் பஞ்சடை போல் மூன்றேயெகுத்தும் வேரறுமே
219

**கொம்மடிக்காய்த்தயிலம்**

கொம்மடிக்கா யினிற்றயிலங் கூறக் கேளுங்
சூளியெனுங் கொம்மடிக்காய் துண்ட தாக்கிச்
செம்மையுட னதுவிருக்கக் கற்கஞ் சொல்வன்
சிறந்தவிந்து வுள்ளிகுள விந்த மஞ்சள்
வெம்மையுள நேர்வாளங் கடுகு வோமம்
வெந்தயஞ்சா திலிங்கநெல்லிக் கெந்தம் வேர்க்கொம்
பிம்மெனவே மிளகுதிப்பி லியுங் காந்த
மிதமான வசம்பொன்றோ ரிருக ழஞ்சே
220

கழஞ்சுடனே யிதுவெல்லாம் பொடிய தாக்கிக்
காய்க்குள்ளே பொதிந்துமொரு மிடாவில் வைத்து
வளஞ்சேரு மெட்டுநாட் சென்ற பின்னர்
வகுத்தவதை யெடுத்துலர்த்தி மறுகாற் கள்ளி
உளஞ்சேரும் பாலதனி னனைத்துப் பின்ன
ரொருபானை தனிலிட்டே வெயிலில் வைத்து
அழன்றுவிழுந் தயிலமருந் திடப்பி லீகை
யட்டிபெரு வயிறு குன்மம் பாவை போமே
221

**உள்ளியாமணக்கெண்ணெய்**

உதரந் தனினோவுக் குள்ளி யெண்ணெய் கேண்மின்
அதரஞ் சிவந்த வழகாய் - அதாவரீசி
கொள்ளிரு நாளி கொடிக்கழற்சி யின்பருப்பு
மெள்ளவொரு நாழி விளம்பக்கேள் - தெள்ளுநீர்
தூணிதனை வார்த்துத் தொகைபெறவே காய்ச்சிநீர்
பாணியாய் நாழி பதமானால் - பேணிப்
பிசைந்து வடித்திதுவும் பேணியதோல் போக்கி
இசைந்தவெள் ளுள்ளிபல மீர்பான் - அசைந்த
கொடுவேலி யின்வேர் குறுகத் தறித்தே
இடித்தைம் பலநீர்ர் தூணி – படிமுறையே
நாலொன்றாய்க் காய்ந்தபின்னர் நச்சிப் பிழிந்ததனை
மேலொன்று கற்கம் விளம்பக்கேள் - சாலும்
பெருங்காய நல்விழால் பேணுஞ் சிவதை
பெருஞ்சவர்க்கா ரம்பொரி காரம் - வருங்கொத்த
மல்லிமர மஞ்சள் வளர்திப் பிலிமிளகு
சொல்லாற்ற லுப்புமுத்தஞ் சூடனே – மெல்லிய
வெண்கடுகு வெந்தயமு மேற்கடுகு ரோகணியும்
பண்புசெறி கொற்றானிற் பாக்கொழுந்து – நண்பாக
ஓரொன்றொருகழஞ்சா யொக்க நிறுத்திவற்றைச்
சேரொன்ற வேகரைத்துச் சேர்த்துமே – பாரொன்றும்
கள்ளிதரு பாலுழக்குக் காட்டியசிற் றாமணக்கின்
தெள்ளுமெண்ணெ யும்முழக்குச் சேர்த்திடுவாய் - ஒள்ளிதாய்
வெந்துபதங் கண்டதின் மேற்கடுகைத் தான்வடித்துக்
கொந்துலவுங் கோதையரே கூறக்கேள் - வெந்தவெண்ணெய்
காசளவு நக்கக் கடியநோய் தீரும்வகை
பேசுகிறேன் பெண்ணணங்கே பெட்புடனே – கேசி
குடல்வாதங் கழல்வாதங் குன்மவலி குன்மம்
அடலெழுந்த வட்டி பிலிகை – உடலடங்கும்
வாதம் வயிற்றெரிப்பு வாகுன்மம் பித்தகுன்மம்
சீதஞ் சுருண்டுசிக் கென்றவையும் - போதவே
அந்தர வாயுவது மான கவுசியுடன்
எந்தியநீ ராமை யினுங்கேளாய் - செந்தொரு
கோளுறுப்ப சூலமுடன் கொய்குசப்பு றோணியதும்
தாளுறுப்பு நோவதுவுஞ் சத்திகுன்மம் மீளுநோய்
பக்கசூ லம்மெகுத்துப் பார்நாபி சூலமினும்
தக்கவெப்புப் பாவையுந் தான்மீளும் - மிக்கெழுந்த
ஆமசூ லம்முடனே யார்கெண்டை நோய துவம்
சேம மகோதரமுஞ் சென்றகலப் - போமேதான்
என்றுமுனி வோருரைத்தா ரேற்ற மருந்திதனை
நன்றுறவே செய்வீர் நலம் 222

**இலவணக்கடுகம்**

சேருஞ் செந்நீர் சிறுகுடலிற் றிகழு மெகுத்து மிடப்புறத்திற்
சாருஞ் சடரிற் றடித்திறுகித் தன்னி லருந்துந் தாமரையை
ஊரு நகில்மேற் றுடர்ந்தேறி யுதர முறவே மிகச்சுழிக்கும்
காருஞ் செறிந்த விடஞ்சேரிற் கவுசி யணுகுங் கண்டாயே 223

கண்டாய் சடரிற் பிலிகையட்டி கடிய சுரத்திற் கனத்தகுன்மம்
பண்டே யடுத்த பழமலத்திற் படரும் வாயுப் படர்சூலை
விண்டேமெலியுமேல்வற்றும் வெளிறுமிளைக்கும்பொருமலுண்டாம்
தண்டே னுறழுந் தடிக்குமுந்தி தாகஞ் செய்யுந் தழலெழுமே 224

சாய்ந்தவுடல் தனில்வெளிறு மிளைப்புக் காணுந்
தணிந்துபின்னு மேகமுடல் தன்னில் வாடும்
சேர்ந்துடலிற் றினவாகுஞ் †சேருந் தாகஞ்
செறிந்துடனே யுடல்குளிரும் வெப்பு மாகும்
ஆர்ந்தபடி முகமுந்தி யடிவ யிற்றி
லானபுற வடிவீங்கும் பித்த பாண்டு
சார்ந்துடலிற் றடித்துந்தி தாம ரைக்காய்
………………… 225

அறிந்துடலில் வெப்புதர மந்தம் வந்தா
லறிவழிக்குங் கவுசிமகோ தரநீ ராமை
செறிந்தெகுவை பிலிகையட்டி சிறுகற் சூலை
தீராத வெண்சூலை சேரும்வாயு
முறிந்திடுமா மருந்திலவண நாழி கூளி
முகிழ்முலையுந் தெசமியுரி யூமைசேமம்
பிறந்திடுபேய்க் கரும்புபெருங் காயமோமம்
பேரரத்தை யிருகழஞ்சு பெருகா தென்னே 226

†சேரா தாகம் - என்றும்.



பெருகியவெண் காயமிரு நாழி சுக்குப்
பெருகாம லொருபலத்திற் பிறந்தோல் சீவி
உருகியதோர் நவச்சாரஞ் சங்கங் குப்பி
யுறுமேதி முல்லையிரு நாழிச் சாற்றில்
வருசிவதை யிருபலங்கொள் மஞ்சட் சாறு
வளர்நீலிப் பாலுழக்கில் வரளத் தேய்த்துக்
கருதுபனங் கட்டியினிற் கழஞ்சு கொண்டாற்
காய்ச்சியநீ ருடனருந்திக் கருது நீரே 227

நீரான பஞ்சகுன்ம நிறையெ குத்து
நீளுடலில் வாயுவுறிற் றேனிற் கொள்க
வாராத சத்திகுன்ம வகைமி குத்தால்
மாமேதி மோரதனில் மருவத் தீரும்
சோராத கவுசிகுன்ம வகைமி குத்தாற்
றுடியிடையார் முலைப்பாலி னுள்ளே கொள்க
ஆராத மண்டலமொன் றருந்து நாளி
லாற்றுமருந் தீரவுள்ளி யடைவு கொள்ளே 228

சேய்சடர் குக்கில் துத்தந் தெளிந்துட னனேக மெல்லாம்
போய்நடு வுதர மிண்டிப் பொருமல்நே ரெகுத்து முண்டாம்
வேயுட னிடத்தி லேறின் மீளும்பின் வலமும் வந்தால்
காயமேல் நோக்கி யுண்டி கழிந்துடல் நோக்கு நோயாம் 229

ஆமவ ருடலி லுண்ட வசீரண மெய்யி லூறித்
தாமதி சுரத்திற் குக்கில் தண்டித்துள் வெப்பு மாகி
வாமநே ராகும் பாகம் வடிவுநாற் சதுரம் வட்டம்
தூமமேற் கவுசி கீழே துடர்வது சாற்றுங் காணே 230

சாற்றும் பிலிகை சடர்பெருத்துத் தடிக்கு மிடத்தில் நீராமை
ஏற்று மெகுத்து வலமேறி யிளைப்பு வெளுப்பு முட்கழியும்
காற்றின் பொருமல் கால்கையுங் கனலுங் கண்ணுமொளிகுன்றும்
……………………………………………… 231

உற்றதோர் மூல ரோக முதரநோய் தடித்தே யண்டம்
முற்றிய வத்திக் காய்போல் முளைக்கிலுட் சலத்தைச் சிக்கும்
சற்றையை வாத பித்தந் துடர்வது பிரமே கத்தின்
பற்றிய தாரை நேரே படர்வது வெகுத்தா மன்றே 232

எகுத்துமே லிளைப்பு மேனி யிறுகுமெல் வடிவு வற்றும்
வகுத்துநீ ராமை போலும் வரிவிழி மயங்குந் தாளில்
மிகுத்துறக் கனத்து வாடும் வெளிறுமுள் ளென்பு தோன்றும்
பகுத்துற விடத்திற் பற்றிப் படர்வது சாருங் காணே 233

### மருந்து

காணா ரிங்கு வெள்ளுள்ளி கரியமிளகு குயில்மெ ழிவேர்
நாணா ரொன்று காலிரண்டு நாலு மூன்று வெள்ளாட்டின்
ஊணார் பாலி லுள்ளருந்து மொழுங்கே நாளு மண்டலமே
பேணீரிண்டாமடைவு கொள்ளிற் பெருஞ்சா ரணையுமுருங்கையுமே
234

முதியாள் கூந்த லிருவேலி முற்றுஞ் சந்தம் வெள்ளுள்ளி
மதியா ரோம மரமஞ்சள் மருவு மிங்கு முலுவாவும்
பதியா ருமை(ச்சி) வெள்ளாட்டுப் பாலிற் காய்ந்து பருகிப்பின்
விதிசேர் மூன்று மடைவுகொள்ளின் மிளகு நாழி யுள்ளியிங்கே 235

இங்கொரு பலத்தி னேரே யிளையவர் கொடிசேர் மங்கை
செங்கொடி வேலி மூலந் தேனுவின் பாலிற் சேர்த்துப்
பங்கொரு நாழி நெய்யும் பதத்தினிற் காய்ச்சிக் கொள்க
திங்களி னுப்பு நேரே சேர்த்துட னருந்து வாயே 236

கழித்தெகுவை பிலிகையட்டி கருநீ ராமை
காயமுற்ற கெளிசைமேற் கவுசி யென்றே
பழித்தமெல்லைப் பாலுடனே பனையின் கட்டி
பருகியபின் மருந்துசுக்கு மிளகு வுள்ளி
சுழித்தகுயில் மொழிவேருஞ் சமனிற் கொண்டு
சோற்றுடனே காட்டிக்கூ ழாக்கி யுண்டே
கழித்தகஞ்சா விருப்பூறல் நிமிளை சொண்டி
கார்செறியா மணக்குடனே வாள மஞ்சே 237



அஞ்சாத வசம்புலுவா வடைவே கொண்டே
யறப்பழுத்த சாரணைவேர்ச் சாறு நாழி
மின்சார வரைத்ததனைக் கரைத்துக் காய்ச்சி
வேப்பெண்ணெய் விட்டிறக்கி நாளிற் கொள்ளே
துஞ்சாத சாரணைவேர் முருக்கு முள்ளித்
துளிர்பூலா விலைச்சாறு நாழி நாழி
நஞ்சார வுண்டைமெல்லை நீரும் பாலு
நாழியிரண் டாமெனவே நல்கு நீரே 238

நல்கியவிந் துப்புநாற் கழஞ்சு வுள்ளி
நாழியொன்று மிளகுமொரு நாழி சுக்குச்
சொல்லியசீ னக்கார மரத்தை யோமஞ்
சொற்பெரிய காயமொரு பலமோ ரொன்று
வல்லபடி யாலரைத்துக் காய்ச்சிப் பாதி
வற்றியபின் சாரணையின் பொடியுந் தூவி
நெல்லிபெறு கெந்தகத்தோ டிரசங் காசு
நிறைதனிலே சேர்த்துள்ளே நாளிற் கொள்ளே 239

கொள்ளவினி தானபனங் கட்டி தன்னிற்
குறையாம லொருகடுக்காய்ப் பிரமா ணத்தில்
உள்ளருந்தி யொருமிடறு வெந்நீர் கொண்டா
லுருகுமெழு கெனுமெகுவை பிலிகை யட்டி
தள்ளியநீ ராமைவரு மாம்பல் கெண்டை
தங்கியதோர் கேசியுடன் சூரை யெல்லாம்
வள்ளலுட னீரிழந்த கஞ்ச வெய்யோன்
மதியமுற்ற துகள்பொடிபோன் மருவுஞ் சொல்லே 240

சொல்லு மெருக்கி னிலைச்சாறு தோற்று மலகைக் காய்ச்சாறு
வெள்ளை யறுகி னிலைச்சாறு மேதி மோரு மிரண்டொன்றாய்
வல்ல படியொன் றொருநாழி வகையிற் கூட்டும் படிவெள்ளை
உள்ளி மிளகு மொருபலத்தோ டோமஞ் சுக்கு மொருபலமே 241

பலஞ்சேர் நேர்வா ளப்பருப்புப் பரிந்தே யாறு கழஞ்சுடனே
நிலஞ்சே ரெருக்கி னிலைச்சாறு நேரே யுழக்கி லரைத்துப்பின்
கலந்தே யாக்கி நீர்நாழி கரைத்துக் காய்ச்சிக் குழம்பாக
உலர்ந்தே யருந்தக் கவுசிகுன்ம முடல்விட் டோடும் பார்தனிலே 242

பார்நீ ரெகுத்துக் குக்கில்சடர் பரிந்தேநிற்குங் குணங்கேளும்
நீராய்த்திரளும் பயோதரங்கீழ் நிற்குமாறு வங்குலத்தில்
வேரா மிடத்திலெதிர்மீளும்வலமே யேறித்திரண்டுருண்டால்
தீராக் கவுசி குடகரிமேற் றிரண்ட பொருமன் மாறாதே 243

மாறாத குன்ம ரோகம் வலியுறு மயக்க மாகில்
வீறான சதுரக் கள்ளி மேவிய பாலு ழக்கிற்
சீறாத வாட்டின் பாலுந் தெளிந்தொரு நாழி கூட்டித்
தூறான சிறுகுறிஞ்சித் தூளியு நாழி தேடே 244

நாழிவெள் ளுள்ளி சொண்டி நற்பெருஞ் சீரகத்திற்
தாழ்வறு மிளகு ழக்குச் சரிகடு குரியிந்துப்பு
மீளவும் பலமீன் கச்சல் வெண்டலை பலமு லர்த்தித்
தூளியுந் நாழி தேங்காய்த் துருவலு நாழி தானே 245

நாழியெள் ளிற்பிண் ணாக்கு நல்கிய பனையின் கட்டி
மீளவும் புடத்திற் றூளி மேவிய தேங்காய்ப் பூவிற்
தூள்படி கலசந் தன்னிற் சுருக்கியுட் சேமஞ் செய்து
நாளொரு புன்னைக் காய்போல் நல்கியே யருந்திடாயே 246

அருந்துநீர் கவுசி குன்ம மமர்சூலை மாங்கிஷஞ்சேர்
பெரும்பிலி கையுமே யட்டி பெருகுட கரியெகுத்து
வருந்துகற் சூலைமேனி வரிவெளுப் பாண்டுரோகம்
மருந்துண்ணில் மாறுமென்று வாகடர் சொல்லுமாறே 247

மாதேகேள் மிளகுசொண்டி யாட்டுப் பாலில்
வாரணவெச் சங்கள்ளிப் பாலுங் கூட்டி
மீதேகே எக்கினியிற் குழம்ப தானால்
மிகுந்தபனங் கட்டியிலே யுள்ளே கொள்ளப்
போதேநற் பிண்ணாக்கு வெள்வெங் காயம்
பொடித்தபனங் கட்டிவெரு கடியுங் கொண்டாற்
தீதேவா ராதுபிற நீருண் டார்க்குத்
தீருமென வாகடநூல் திருந்தச் சொல்லே 248

## புகை

சொல்லா யீயந் துரிசுலிங்கஞ் சூதஞ் சிவந்த பாஷாணம்
நல்லா ரூண்மாங் கிஷபேதி நவஞ்சேர் காரஞ் சவர்க்காரம்
கல்லாம் வெளிறு பாஷாணங் கலுழன் கல்லு மாவித்துப்
பொல்லா வற்ச நாவியகில் போற்றும் பெருங்கா யமுந்தேடே 249

தேடுங் கல்நார் காரரிசி சிவதை கள்ளிப் பாலெருக்கு
நீடுஞ் சேர வோர்நிறைகொள் நீர்சேர் முதலை நெய்யுளுவை
வாடுந் தசையு மூனெய்யும் வளர வரைத்தே யுண்டைசெய்து
சாடு நிம்ப நெய்தன்னிற் றணிய வுதரப் புகைநீட்டே 250

உதரங் கடுக்கில் வெள்ளாட்டி னுள்ளிற் றசையு முளுவையினிற்
தசையு மிலவின் பிசினுடனே சமூல மூன்றிற் றாடகைய
மருவ வரைத்தக் குள்ளருந்தி மாட்டின் கொம்பு முதலைநெய்யும்
கருகப் புகைத்தக் கணந்தனிலே காரந் தன்னைக் காட்டுவரே 251

காட்டும் வீழி வேரளவு காய்ச்சுக் கட்டி யவ்வளவு
கூட்டும் விளாவின் பிசினோமங் கொடிய காய மிளகுள்ளி
நாட்டும் வசம்பு முலைப்பாலி னல்கி யரைத்தே யுள்ளருந்த
வாட்டு மூல ரோகமெலா மாறு மென்று சொல்லுவரே 252

வாட்டியகற் றாழைநீர் சூதமது தன்னில்
மருவுதிரி கெந்தகத்தோ டரைபொடியுந் தசமாம்
கூட்டியரைத் துக்கலையு ளடக்கிமலை யதனின்
†குடுமியுளே யிருத்தியவர் மேலுமலை யிருத்தி
நாட்டுமஞ்சு கடிகைசென்றால் நல்கியுடனெ டுத்து
நற்றிரியோ டோமமுட னேர்வாளங் கழஞ்சு
தேட்டுமுதல் மருந்துடனே சேர்த்துடனே நாளுந்
தினமுமொரு தெருகடிதான் சீராம லருந்தே 253

†பிரதிகளிற் கண்டபடி இதனைப்பதிப்பித்தோம் பொருள் விளங்கவில்லை.

அருந்துமதன் குடிநீரி லடைவே கொள்ளு
மானபிடி கையளவு கடுக்கா யைந்து
இருந்தகும ரிச்சருகு பிடிதா னீரி
லெட்டொன்றாய்க் காய்ந்ததனை யுள்ளே கொள்ளும்
மருந்துடன்சிற் றாமணக்கி லெண்ணெய் நாளு
மருவிடுமேற் பொடிதூவி வளந்தா னுண்டால்
பொருந்துநவ குன்மமுற்றித் திரண்ட சூலை
பொறிபடுதீக் கலையெனப்போய் மறையு மாதே 254

மாதேகே ளிரசங்கெந் தகங்கடுக்கா யோமம்
வளரிரும்பிற் பொடிசெம்பிற் பொடிசிவதை வேரும்
மீதேகேள் பெருங்காயம் வெண்கார மிளகு
மிகுந்தகருஞ் சீரகந்திப் பிலியுடனிந் துப்புப்
போதாய நாகணநந் திக்கிழங்கு கடுகு
பொருந்துள்ளி சரிநிறுத்துக் கரிப்பானி லரைத்துத்
தாதாக வளர்ந்தேறு விரைப்படியுள் ளருந்தச்
சட்டெகுத்துப் பிலிகையட்டி தன்னில்விரைந் திடுமே 255

விரைந்தேகா திருந்தாலே மருந்து கேண்மின்
வேலியுடன் செருப்படிபா வட்டை நொச்சி
வரைந்தாரை கொடிப்பாலை முள்ளி யர்க்கு
மாதுபிரா யிலைக்கள்ளி முருங்கை கொற்றான்
பரந்தேகை யாந்தகரை யிலையோ ரொன்று
படிதகர்த்துச் சாறுழக்கு முல்லை வேரும்
அருந்தாத பாதிரிவேர் வில்வம் வட்டு
டன்னெருஞ்சி கொடுவேலி யங்கு வேரே 256

வேருடனே கொடிக்கழலின் பூறல் நொச்சி
மிகப்பழுத்த சாரணைவேர் கொளுஞ்சி சீந்தில்
பாரில்நில வாகைவேர் குறிஞ்சா வேரும்
பருத்ததழு தாழைவேர் நிறுத்துத் தூணி
நீருடனே யதனிலொன் றாகக் காய்ச்சி
நிறையாக வடித்துப்பின் கடுக்காய் நூறு
சேரவிடித் துத்தூணி மோரிற் காய்ச்சிச்
சிறக்கவொரு நாழிகண்டா லிறக்கிக் கொள்ளே 257



சிறக்கவிரு நாழியுள்ளி காடி தன்னிற்
செறியவரைத்துக் காய்ச்சி நாழி செய்து
பிறித்தபடி யோரொன்று நாழி தானும்
பெருகாமற் கூடவிட்டங் கெள்ளி லெண்ணெய்
முறித்திடுநீர் நானாழிக் கிரண்டா மெண்ணெய்
முற்பட்ட மருந்துடனே கரைத்துக் காய்ந்தால்
அறுத்தமேற் பொடிகுப்மை தேவ தார
மதிமதுரஞ் சீரகத்தோ டோமங் கொள்ளே 258

கொள்ளுந்திப் பிலிமஞ்சள் மிளகு சுக்குக்
கூறுநெல்லி கடுதான்றி கொத்த மல்லி
மெள்ளவிடித் துப்பொடித்துக் காய்ச்சி யெண்ணெய்
மேல்வீசிப் பொடியுடனே பனையின் கட்டி
உள்ளருந்தும் படிகடுக்கா யொன்று நேரே
யுதரமிண்டில் நேர்வாள முடனுட் கொண்டால்
விள்ளவொணாப் பஞ்சகுன்மம் விரைந்தே யோடி
விடுமென்று வாகடநூல் விதித்த தன்றே 259

விதித்தசிறு குறிஞ்சியிரு நாழி தூளி
வெள்ளுள்ளி நாழிமிள குரியிந் துப்புக்
கதித்தபல நாலுகருஞ் சீர கந்தான்
கருதுமுரி வேர்க்கொம்பு நாழி யோமம்
மதித்தகடு குரிகச்சல் மச்சந் தன்னில்
வன்சிரத்தைக் களைந்துபொடி தூளி யெள்ளில்
மிகுத்தபுண்ணாக் குப்பொடியு நாழி தேங்காய்
மிகவத்தற் பொடிநாழி நிறையிற் கூட்டே 260

கூட்டுபனங் கட்டியொரு நாழி தன்னிற்
குறையாதே பழத்தேங்காய்ப் பூவு நாழி
வாட்டமுடன் புடவறையிற் பொடித்த தூளி
மண்கலசந் தனிலடைத்து நாளிற் கொள்ளிற்
கூட்டெகுத்துப் பிலிகையட்டி கவுசி குன்மஞ்
சோராத நீராமை பஞ்ச குன்மம்
நாட்டமுட னசுரர்புரந் தன்னிற் போந்த
நாரதனார் மருந்தெனவு நல்கு நீரே 261

நீரணுகா தேயுரிய வாட்டுப் பாலு
நீண்டசது ரக்கள்ளிப் பாலா ழாக்குப்
பேர்சிவதை வேருமிரு பலமா மஞ்சள்
பெரும்பீலி யிற்றுளி கூட்டிக் காய்ச்சிப்
பாரினிய குழம்பையொரு சுண்டைக் காய்போற்
பரிவிட்டே யுள்ளருந்த மிகுந்தால் மாற்றுச்
சீரினிய தேனுவின்மோ ருள்ளே கொள்ளத்
தீயிலிடு நீரெனவே தீரு மாதே 262

மாதேகேள் மிளகுசொண்டி கடுக்காய் முற்றி
வளரெருக்கிற் சமூலத்தைத் தகர்த்து நீரில்
மீதான வாளந்தா னெட்டொன் றானால்
விரைந்தருந்த வூணாகம் பஞ்ச குன்மம்
தாதேறுஞ் சமன்மூட மைய மெய்யிற்
றடித்தகுட கரியெகுத்துத் திரண்ட சூலை
தீதேவா ராதுப்பி லப்பே போலத்
திரண்டகுட லுட்சடமுந் தீர்ந்து போமே 263

## சமுத்திராசுத்திநெய்

தெசமூல மோரொன்று பதின்பலமா மணக்குச்
சிவதைபுன்கு காக்கணஞ்சா ரணையெருக்கு முருங்கை
பசுநீர்மைக் கொடிக்கழற்சி யாகவிவை யொன்று
பதின் பலமாய்த் தறித்திடித்துப் பன்னிரண்டு மரக்கால்
வசமாக நீர்வார்த்துக் காய்ச்சிநா லொன்றாய்
வற்றியபின் பிழிந்ததனை வடித்துவெள்ளை யுள்ளி
பிசகாம லேநூற்றின் பலமதிலே நருக்கிப்
பேசுமிரு தூணிநீர் வார்த்தெரித்துக் காய்ச்சே 264

காய்ச்சிநா லொன்றானாற் பிழிந்து முந்த வடித்த
கஷாயமதிற் கலந்துகடற் சுத்தியென்னு மதனைக்
கூச்சமற வேநூற்றின் பலமெட்டி னுடனே
குழியிதழி விட்டவித்துக் கொண்டுவெந்தா றியநீர்
மாய்ச்சலற வடித்ததையு முன்கஷா யத்தில்
வார்த்தனிற் றசையுலர்த்திப் பதின்பலந்தா னரைத்து
ஓச்சமுறக் கஷாயத்திற் கரைத்தாயி லின்றோ
லுவாயின்றோல் வெள்ளுருவை யிவையொக்க விடுமே 265

இடு‡வன்னி வேர்ப்புறந்தோல் சாரணைவே ரதுவு
மேரண்டக் காய்புளியி லிணங்குபொருக் குடனே
விடுசெங்கீ ரையிண்டு சுடுநீறோ ரொன்று
விரும்புபுனல் நானாழி தனிற்கரைத்து வடித்தே
அடுமுன்னைக் கஷாயத்தில் வார்த்ததிலே கரைக்கு
மம்மருந்து கேள்மிளகு சுக்கரத்தை காயம்
கொடுவேலி வேரதனிற் புறந்தோல்திப் பிலியுங்
கூறுதிரி பலைகடுகு ரோகணியுங் கொள்ளே 266

கொள்ளுகருஞ் சீரகஞ்செவ் வள்ளியது தன்னிற்
கொடிசிறுமூ லகஞ்செவியங் கொத்தமலி தகரம்
தள்ளரிய புனமுருங்கை வேர்சீனக் காரஞ்
சவர்க்கார மிந்துப்புச் சதகுப்பை யுடனே
விள்ளுமச மோதகங்கற் கடகசிங்கி சிவதை
வேருடனே நேர்வாளங் கச்சோலஞ் சதுரக்
கள்ளியின்வேர் காக்கணம்வேர் சேங்கொட்டை யொன்றைங்
கழஞ்சரைத்துக் கரைத்துக்கஷா யத்திலிடுங் கடிதே 267

கடிதிலறு நெய்நாழி யளந்ததிலே விட்டுக்
கறந்தபசுப் பால்நாழி யாறுமதில் விட்டு
நெடிதெரித்துக் கணபதியைப் பூசித்து வடித்து
நேரமிரு கழஞ்சுநக்க நீராமை யெகுத்துக்
கொடியகுன்மம் பிலிகையட்டி யோடுகுடல் வாதங்
கூறுமுத ரந்தனிலே கொண்டநோய் பலவும்
படியிலே தீருமெனச் சமுத்திரா சுத்தி
பாவாணர் கொண்டாடிப் பகர்ந்தனர்பே ரிதற்கே 268

## சமுத்திராசுத்திநெய்-2

சமுத்திரா சுத்தியிற் றண்ணீ ரின்றி
மதிபெற வெந்த மாமிசம் பதின்பலம்
இஞ்சி பதின்பல மிதனுடன் கூட்டி
மிஞ்சுவெள் ளுள்ளியும் வேறே பதின்பலம்
துஞ்சவே வார்த்துத் துழாவிமுக் குறுணிநீர்

‡வன்னிவேர் – கொடுவேலிவேர்

நாலொன்றாய்க் காய்ச்சி நலம்பெறப் பிழிந்து
விதிபெறுங் கற்கம் விளம்பக் கேளீர்
மதிகொடு வேலியும் வளர்ந்த முருங்கையும்
இந்துப்பு மோதக மிருசீ ரகமும்
வந்தமுக் கடுகம் வளர்பெருங் காயம்
செவ்விய மிடவகஞ் சிவதைவே ரதுவும்
அவ்விய மில்லா யத்தித் திப்பிலி
சிறுமூ லகமுஞ் சிறுபுள் ளடிவேர்
உறுமிவை கழஞ்சா யொக்க நிறுத்து
முற்கஷா யத்தி னுற்றவந் நீரால்
அரைத்துக் கரைத்தே யாவின் னெய்யொடு
பாலுங் கூட்டிப் பதத்தில் வடித்துத்
தினமுமுக் கழஞ்சுநெய் மகிழ்வுடன் கொள்ளக்
கனம்பெறு மகோதரங் கவுசிகை யட்டி
குன்மமோ ரெட்டுங் குறித்தநீர்க் கோவையும்
வன்மமார் சூலையும் வடிவேல் முருகன்
பாதந் நோக்கும் பத்திசெய் யடியவர்
மலநோ யகலும் வாறே போலத்
தீர்ந்திடு மென்று செப்பினர்
ஆய்ந்திடு முள்ளத் தருந்தவத் தோரே 26

## நொச்சிநெய்

நொச்சிசா ரணையுடனே பொன்னாங் காணி
நுவலுமிவை துளிரொன்றோர் பிடிய தாக
நச்சியவே ரழிஞ்சிலரைப் பிடிய தாகு
நல்லவரை பொடியுடன்குந் துருக்கஞ் சுக்கு
மெச்சியதிப் பிலிசயிந்த மிவையோ ரொன்று
விளங்கியமுக் கழஞ்சுகொண்டு முருக்கி லூற்ற
பச்சிலையின் சாற்றரைத்து நெய்யுங் கூட்டிப்
பதத்திலே வடித்திறக்கிப் பாரில் வையே 27

வைத்தகடு குடனரைத்து நெய்யுந் தின்ன
வலியபெரு வயிறுபல குன்மம் வெப்புத்
தொத்தியமா பாவைநீ ராமை நீரிற்
றுவழ்தவளை யிளைப்புடனே சொல்லு மற்றைப்
பித்தமுறு பாண்டுவகை சோகை யெல்லாம்
பிறங்குவைவேற் குருபரன்ற னருளைப் பெற்றோர்
சித்தமுறு வினையெனவே யேகு மென்று
தேர்ந்தகுறு முனிவரர்முன் செப்பி னாரே 27



## நவச்சாரமெழுகு

எருக்கலையின் பாலுழக்குக் ‡காட்டு மேதி
யின்பாலு மோருழக்குக் கலந்து கொண்டு
வருக்கமுறு நவச்சாரங் கழஞ்சு பத்தில்
வார்த்தரைத்தே யீருழக்கு மான பின்னர்ப்
பெருக்கமுறு மேரண்டத் தெண்ணெய் விட்டுப்
பின்னமற வரைத்துமெழு காய்வ ழித்துச்
சுருக்கமுற மிளகளவு வெந்நீ ரிற்கொள்
சுகமாகு மகோதரநீ ராமை தானே 272

## நவச்சாரக்குழம்பு

தானமுறு கிருமியொடு மலமும் போகுஞ்
சரீரத்தின் கூறுடனே நோயுங் கண்டே
ஈனமறச் சுண்டைக்கா யளவு மேற்கு
மின்னமொன்று நவச்சாரஞ் சாதி லிங்கம்
கானமுறு நற்சீர மசம தாகங்
கருதுசவர்க் காரமுடன் சூதந் தானும்
மானமுறு முக்கடுக மயத்தின் றூளும்
வகுத்தபடி சமன்கொண்டு மூலி கேண்மின் 273

மேனியுடன் சிறியகாஞ் சோன்றி யீஞ்சின்
விளங்குகுரு கொடுபிரமி பங்கம் பாளை
ஈனமற விவையெல்லாஞ் சமனாய்க் கூட்டி
யியம்புசரக் கதனிறைகொள் கடுக்காய்த் தூளும்
மானமுற விருவகைக்குஞ் சமன தாக
வகுத்துக்கொண் டெலுமிச்சம் புளியி னோடு
கானமுறு மிளநீரும் படியொவ் வொன்று
கலந்துகுழம பாக் கியுண்ணக் கலையு நீரே 274

## உள்ளியாமணக்கெண்ணெய் -1

உள்ளி யிஞ்சி யிந்துப்பு வுற்ற சிவதை சீலந்தி
கொள்ளு நிலவர் கைசமூலங் குலவு மிளகு திப்பிலியும்
முள்ளே ரண்டவெண்ணெயுடன் முடக்கொற்றானினிலையுங்கொள்
தள்ளா தெக்கக் கள்ளிப்பால் தன்னோ டெரித்துக் கொள்வீரே 275
‡காட்டுமேதியின் பால் - கள்ளிப்பால

கொள்வீர் குன்மங் குடல்வாதங் கொடிய பிலிகை யட்டலிகை
உள்ளே திரண்ட மலக்கட்டி யுடனே பிறந்த சஞ்சீதம்
கொளவோர் பக்க சூலைவலி குமிறும் வாயுப் பெருவயிறு
பிள்ளே கழிந்து போமென்று பெரியோ ருரைப்ப திதுவாமே 276

உள்ளி மிளகு மோரொன்று ஒருநா ழிக்கிங் கொருபலந்தான்
விள்ள வரிய கொடுவேலி வேரு மிஞ்சி யவ்வளவு
வள்ளி முருகன் கொடிமங்கை மருவும் பருவ மாவின்பால்
கொள்ளும்படியே யரைத்து நெய்யிற்குழப்பிக் காய்ச்சிய ருந்திடுமே
277

அருந்து நாலா மடைவுதன்னை யறையக் கேளு நவச்சாரம்
திருந்துங் கல்நா ரிந்துப்புச் சேரு மிந்து வலுவுள்ளி
வருந்துங் காந்தஞ் சாதிலிங்கம் மருவு மிரும்பிற் பொடிசெய்து
பொருந்துஞ்சமனாய் வேளையினிற் பொடியும் புடத்திற்பொடி
துண்ணே 278

உண்ணு மஞ்சா மடைவுதன்னி லொழுங்கைக் கேளு மிந்துப்பு
மண்ணில் நீலிப் பாலுழக்கில் மருவு நஞ்சு வாங்கிப்பின்
நண்ணு மோம மிளகுள்ளி நலஞ்சேர் கார மிங்குலுவா
பண்ணும் படியா யரைத்துவரால் பருகும் படியே யூட்டீரே 279

ஊட்டிக்கள்ளி யுதரத்தி னுள்ளே யிருத்திக் கலையில்மண்ணாற்
பூட்டிப் புறத்தி னுள்ளறையிற் பூமி யடக்கி மேலெரித்து
வாட்டிப் பொடியா னால்மருவி மருந்தையருந்த மண்டலமும்
ஆட்டிற் கல்லு நவச்சார மவினோ டிங்கு மருந்துகவே 280

அருந்து மாறா மடைவுகொள்ளு மாறு நாழி குமரியினீர்
பரிந்து புகட்டி யறுநாழி பதத்திற் காய்ச்சிப் பின்னொன்றாய்
இருந்த படியில் வடிநீரி லெருமை மோரு மிருநாழி
பொருந்துங்கடுக்காய்ப்பொடிநாழி பேர்ற்றுஞ்சிவதைப்பொடியுழக்கே
281



உழலும் பொடிநா கணநந்தி யுற்ற மூலப் பொடிநாழி
மிளகோ டுள்ளி யோமமிங்கு வெண்காரம் வெவ்விய மூலம்
வளரு முளரி நவச்சாரம் மருவிந் துப்புச் சவர்க்காரம்
பழைய வுலுவாத் திரிகடுகு பகருங் கெந்த மரைபொடியே 282

அரைக்கு மருந்தா மணக்கெள் ளெண்ணெய் நெய்யளவிற்கரைத்தங்
கெரித்து மேவப் பதங்காய்ச்சி வடித்துக்கழஞ்சு தான் கொள்ளிற்
செரிக்கு மெகுத்துப் பிலிகையட்டி செரிநீராமை பஞ்ச குன்மம்
உருக்குங் கவசி யுட்கழிவோ டுண்மூ லத்தி னொடுக்களுமே 283

ஒடுங்கு மேழா மடைவுசொல்வ னூறுந் தயிரிற் பனநீரில்
இடிஞ்சீ ரகமிள கிந்துப்போ டெழுதிப் பிலிசீ னக்காரம்
கடுஞ்செவ் வியநேர் சிறுமூலங் கனல்வெண் கார நவச்சாரம்
விடுஞ்சீ ரரைத்து நெய்நாழி விட்டுக் காய்ச்சி வடித்திடுமே 284

### உள்ளியாமணக்கெண்ணெய்-2

சொலத்தகு வெண்கா யுள்ளி தோலது போக்கி நூற்றின்
பலத்தினை யரிந்து தூணி நீரது விட்டுக் காய்ச்சி
நலத்துடன் குறுணி யானால் நறுவிய கடுக்காய் நெல்லி
செலத்துடன் மிளகு சுக்குத் திப்பிலி தான்றிக் காயே 285

அன்புடன் வசம்பு வீழா லரிசியு மதனோ டான
தென்கொடு விளங்க மத்தித் திப்பிலி கொடுவேல் வேரும்
மென்சவர்க் கார மோதம் வேண்டியே யிவைகள் கூட்டித்
துன்பறு செவிய முந்துவர்ச் சிகையொன்று முக்க ழஞ்சே 286

முக்கழஞ் சாகக் கொண்டு முறைமையா லரைக ரைத்து
இக்கணங் கள்ளிப் பாலு மிதம்பெற வுழக்குக் கூட்டி
அக்கணஞ் சிவதை வேரிற் புறந்தோலு மொருபலத்தை
வக்கண மாகத் தானே வளம்பெற வரைத்துக் கூட்டே 287

ஏறுசிற் றாம ணக்க மெண்ணெயு மிரண்டு நாழி
கூறிய பதத்தில் வெந்து குலாவியே வடித்துக் கொண்டு
ஊறிடு மோர்நாட் கேழ்நா ளொருகழஞ் சுள்ளேகொள்ளில்
மீறிய வாத குன்ம மிகுத்திடு பித்த குன்மம் 288

மனவிய சத்தி குன்ம மண்டியே யெரிக்குங் குன்மம்
கனவலி குன்ம மன்றிக் கனம்பெறு வயிறுஞ் சொல்லிற்
றனமகோ தரங்க டாமுந் தக்கமூத் திரகி ரீச
முனவிய வுதர வாத முயர்வலி யோடே குத்து 289

போதமில் சூரை தானும் புகலுமட் டலிநீ ராமை
சீதவன் னோவு துட்டக் கிராணியும் பக்க சூலை
பேதமில் குடல்வா தஞ்சொற் பெற்றிடும் வயிற்றின் மற்றும்
ஓதிய வியாதி தீரு முண்மையீ துண்மை யாமே 290

## எருக்கலம்பூச்சூரணம்

பொரிகாரம் பெருங்காயஞ் சீனக் காரம்
புகல்வசம்பு கறியுப்போ டசம தாகம்
திருவாருஞ் சாதிலிங்கஞ் சூத மெல்லாஞ்
சேரவொரு நிறைகொண்டே யெருக்கம் பூவின்
வருசாற்றா லரைத்துமண்ணின் கலையத்துள்ளே
வைத்ததன்மேற் சில்லிட்டுச் சீலை மண்செய்
தொருவாது சிறுபுடமிட் டெடுத்துப் பற்ப
முட்கொள்ளப் பணவிடைநோ யொழியு மன்றே 291

## வெண்காரச்சூரணம்
## பேதிக்கு

வெண்காரம் வெண்காய மரிதாரங் காந்த
மிளகுதிப்பில் வசநாபம் பெருங்காயஞ் சுக்குந்
தண்பாகு நெல்லிமஞ்ச ளிந்துப்புக் கெந்தந்
தயங்குகடுக் காயோம நேர்வாளங் கூட்டி
நண்பான பற்பமிவை பேதிக்கு நெய்யில்
நலிவெப்புக் குளிர்மிகுந்தால் நயந்தருந்தத தேனிற்
பண்பான கவிகைமகோ தரமட்டி வெப்புப்
பாவைபித்த வாயுவிவை பறந்தோடிப் போமே 292



## இலவணக்குழம்பு

நாயுருவி யுடன்குமரி கதலித் தண்டு
நல்லபனி தாங்கியெனு மூலி தானும்
ஏயவிவை தனித்தனியா யுலர்த்திச் சுட்டே
யெடுத்தறலிற் காய்ச்சுமுப்புப் பலமோவ் வொன்று
தூயவெவச் சாரமுடன் பூவி னீறு
துலங்கவிவை தாமுமொரு பலம்வ கைக்குப்
பாயநவச் சாரமுடன் கல்லி னுப்புப்
பலமெட்டு வெடியுப்புப் பலமி ரண்டே 293

இட்டதிலே கோவினீர் வெள்ளாட் டின்னீர்
ரிவைவகைக்குப் படியெட்டு விடுக லக்கி
மட்டுறவே தெளிவிறுத்துத் தீபம் போல
வருநெருப்பிற் காய்ச்சியே யுப்பெ டுத்து
வட்டமுறு பேய்க்குமட்டிக் காயின் சாறு
வடித்தெட்டுப் படிகரிப்பா னெல்லிக் காய
கட்டமறு நிலவாகை சம்பீ ரத்தின்
கனியிவற்றின் சாறுபடி வகையாய்க் கூட்டே 294

கூட்டுமிலைக் கள்ளியுடன் சதுரக் கள்ளி
கொடிக்கள்ளி திருகுகள்ளி யெருக்குத் தானும்
நாட்டமுடன் சாறுவகை படியிற் பாதி
நவில்கொற்றான் முசுமுசுக்கை புரசு கொன்றை
தேட்டமுட னிவைசாறு படியி ரண்டு
சேர்த்ததிலே கடுதான்றி சிவதை யின்வேர்
ஈட்டுவெள்ளை யுள்ளிவகை பலமொன் றாக
விடித்தரைத்துக் கலக்கியது திரளக் காய்ச்சே 295

காய்ச்சியதி லிரண்டுபிடி யேரண் டெண்ணெய்
கதியாமற் றேனுமொரு படியை விட்டு
வாய்ச்சதொரு குழம்பாகப் பண்ணிக் கொண்டு
வகுத்தெடுத்துப் பாக்களவா யுள்ளே கொள்ளப்
பாய்ச்சலுறு நீராமை கவுசி கெண்டை
பருமுதர நோயனைத்தும் பகருஞ் சூரன்
மாய்ச்சலுற வெறிந்தவடி வேலன் பாதம்
வணங்குமவர் பிணியெனவே மாய்ந்து போமே 296

### சோகை

தேசிக முனிவன் கூறு முதரநோய் செய்கை தன்னிற்
பேசிய சோகை பாண்டு விஷபாக மொடுகா மாலை
கூசிய நாலு ரோக மொடுகுணஞ் சிகிச்சை யாதி
காசணி முலையாய் சொல்வன கருதிடுஞ் சோகை கேளே 1

### சோகைத்தொகுப்பு

**சாத்தியம் -3 அசாத்தியம் -3**

காணுமே வாதம் பித்தங் கபஞ்சுரஞ் சன்னி ரத்தம்
காணுமே சோகை யாறிற் கருதிய பித்த சோகை
காணுமே சுரமி ரத்தம் மூன்றிவை சாத்தி யங்காண்
காணுமே வாதஞ் சேற்பஞ் சன்னிமுன் றசாத்தி யங்காண் 2

சாத்திய வசாத்தி யங்கள் தகுமுறைப் படியே கண்டு
பார்த்திடுங் குணங்கள் செய்யுங் கிரியையும் பகர்ம ருந்தும்
முத்தவர் மொழிந்த நீதி முறைதவ றுறாத வண்ணம்
சத்திய தமிழி னாலே யியம்புவன் குறித்துக் கொளளே 3

### சாத்தியம் -3-ல்

### 1- பித்தசோகை

அடிவயி றதைத்து முகமுமதைத்தகன் பார்பதுவும் மிகவெளிறித்
தடிதலைதிமிர்ததுக்கண் வெளுத்துத்தழன் றுபசியாலுணர்ச்சி கெட்டு
மடிவாய்க் காலு மிகவோய்ந்து நாக்கு முதடு மஞ்சள தாய்
வடிவா மிருகா தடைத்தடைத்து வருங்காண் பித்த சோகமதே 4

கையுங் காலு முகம்வயிறுங் கண்ணும் பல்லு மலஞ்சலமும்
செய்ய நிறமாய் வீக்கமுறுந் தேகம் வெளுத்துக் கண்டுங்கும்
ஐயும் பித்துங் கலந்துவரு மன்னஞ் செல்லா தாகமுறும்
தொய்யின்முலையாய்பித்தமஞ்சட் சோகையென்று சொல்லுவரே 5

வயிறு முகமுங் கனத்ததைத்து வாய்நீர் பெருத்து மஞ்சணித்து
அயிறு மசனஞ் செறுத்துவிம்மு மையும் பித்து மந்திக்கும்
மயிலின் றூக்க மதுபோலச் சற்றுச் சற்றே மயக்கமுமாம்
துயிலும் வாரா திக்குணங்கள் பித்த சோகை யெனச்சொல்லே 6



சோகமே யெழுந்த போது தோன்றிடுங் குணங்கள் கேளாய்
சோகமே யிரும லாகு மிளைப்பொடு துரப்பு முண்டாம்
சோகமே கைகால் வீங்குந் துடியென விடிக்கு நெஞ்சு
சோகமே பரிதா பத்தோ டுப்பிசந் தோன்றும் பாரே 7

காவிமேல் நெஞ்சு மட்டுங் கனத்திடு நரம்பு தோன்றும்
மேவிய விஷநீர் பாய்ந்தே மேவதி சார மாகும்
பாவையே நாவுங் கண்ணும் பாண்டமும் வெளுத்துக் காட்டும்
ஓவிய மனையாய் பித்த சோகையென் றுரைத்திடாயே 8

### 2- சுரசோகை

கரமொடு காலு மோயுங் கண்ணது துவாரங் காந்தும்
உரமுறு பெலமுங் குன்று முணவின்றி வீக்க மாகும்
பொருமிடும் வயிறு கண்டம் புகைந்திடு மிரும லுண்டாம்
சுரமுறு சோகை யென்று சொல்லுவர் முனிவர் தாமே 9

ஊதை மிகுந்து நாவுலர்ந்தே யோங்கா ளித்து நெஞ்செரித்து
நாத மடைத்து விழிபுகைந்து நாவு முடம்புஞ் சிவந்திருக்கும்
பாத கரமுந் தாகமுறும் பரிதா பித்துக் கண்டுங்கும்
வேத முனிவ னுரைத்தருளுஞ் சுரசோ கத்தின் குணமிதுவே 10

### 3- இரத்தசோகை

மயங்கிடும் வெளுக்குந் தேக முதரமு மந்தம் பற்றும்
துயங்கிடுஞ் சடம்வேர் வாகுந் துடியென விடிக்கு நெஞ்சு
பயங்கொளுஞ் சோரி கக்கு மிருமலு மிளைப்பும் பற்றும்
இயம்பிடும் வீக்க மாகு மிரத்தமாஞ் சோகை தானே 11

வயிறுங் காலு மதைப்புண்டாம் வாய்நீர் பெருத்து மயக்கமுண்டாம்
துயிலும் வாரா திருமலுண்டாந் துரப்பு மிளைப்பு முவாந்தியுமாய்ப்
பயிலு முணர்வு மறக்குந்தா துறவே நட்ட மாகுமிது
குயில்மென்மொழியா யிரத்தமுறுஞ் சோகை செய்யுங் குணமாமே 12

### அசாத்தியம் -3-ல்

### 1- வாதசோகை

தேகமுந் தூல மாகிக் கருமைதோய்ந் திரும லெய்தி
ஆகமு மகன்று காட்டி முகமொடு வயிற தைத்துத்
தாகமும் பசியு மின்றி மலஞ்சிக்கித் தலைசு ழன்று
மோகமாய் வீங்கும் வாத சோகத்தின் முறையி தாமே 13

கண்ணு முகமு மலநாவுங் கையுங் காலுங் கருதுயிரும்
நண்ணு மலமுஞ் சலமொன்பான் கருமை நிறமா மதுநாடல்
மண்ணில் நடக்கில்கிறுகித்து மலத்துத்தடித்து வயிறதைக்கும்
திண்ண மிதுவே வாதநோய் சேருஞ் சோக மெனச்செப்பே 14

### 2- சேற்பனசோகை

சூக்கிடுந் தேக மாகி யிளைப்பொடு துரப்பு முண்டாய்
ஊக்கமே யின்றிக் கைகா லோய்ந்துநெட் டுயிர்ப்பு முண்டாய்
வீக்கமாம் வயிறு கைகால் குளிர்ந்திடும் வேர்வை யாகும்
தாக்குசேற் பனத்தின் சோகை தான்செயுங் குணங்க ளாமே 15

மயங்கெட வுதரம் விம்மி யன்னமும் மறுத்துக் காட்டும்
நயம்பெற வெளுக்கு மேனி நாவழு வழுத்தி ருக்கும்
பயங்கொளு மிளைப்பு விக்கல் பரிதாப மோகம் பற்றும்
தியங்கிடுஞ் சேற்ப சோகை செய்குண மென்று செப்பே 16

### 3- சன்னிசோகை

### தொந்தசோகை என்பதுமது

மந்தமே பற்றுங் கைகால் வயிறதைத் திளைப்பு முண்டாம்
உந்திய வாத பித்த கபமுடன் கோபித் தோங்கும்
அந்த†மால் நிறம தாகுஞ் சுரமொடு பிரமை யாகும்
தொந்தமாஞ் சோகை யென்பர் சொற்றமி ழுணர்ந்த தூயோர் 17

### சோகையின் தேகவேறுபாடு

வாத சோகை கருமையதாம் பித்த சோகை மஞ்சணிக்கும்
ஓது சேற்ப சோகைவெண்மை யுறுமே யிரத்த சோகையது
மாதே செம்மை நிறமாகுஞ் சன்னி சோகை மால்நிறமாம்
தீதி லுதிர சோகையது புகரில் நிறமாந் தேர்ந்தறியே 18

†மால்நிறம் - விட்டுணுவின்நிறம் - நீலநிறம்



### பதினாறுவயதிற்கானுஞ் சோகைசெய்யுங்குணம்

இளநோய் சோகை யீரெட்டா மிந்த வாண்டி லுறுமென்னில்
எழவே தலைநேரம் வயிறுவிம்மி யிரத்த மலமுங் கெட்டுலர்ந்து
அழகே யழிந்து விழிநாக்கு மதிகப் படவே வெளுப்பேறிக்
கொளுமே யெய்ப்பு மிளைப்பதுவுங் கொடிதா நெஞ்சந்துடியாமே 19

### இளஞ்சோகைக்கு மருந்து

கீழ்காய் நெல்லி வேர்கழஞ்சு கிளாபொற் கடுக்காய் முக்கழஞ்சு
தாளா நின்ற மிளகொருகால் சற்றே புளித்த மோருடனே
ஏழ்நா ளந்தி சந்தியுமே யெடுத்திப் படியே குடித்துவரில்
ஆழ்வா ருலகுண் டுமிழ்ந்ததுபோ லகன்றே போகு மிளஞ்சோகை 20

### லோகசூரணம்

அரபொடி யிருப்புக் கிட்ட மானபச் சிலைக ராம்பு
வருமதி மதுர மேலம் வசுவாசி யிரண்டு சீரம்
மருவுறு பச்சை திப்பில் மரிசநற் றகர மோரொன்
றொருகழஞ் சிடித்துச் சீலை யுறக்கிளி முடிந்து கொண்டே 21

கோமயந் தன்னி லூற விட்டெடுத் ததனிற் பின்னர்
ஆமிதை நாக வல்லிச் சாறுவிட் டரைத்து லர்த்திப்
பாமுறை யரித்தி ரண்டு பணவிடை தேனிற் கொண்டால்
நோமுறை வந்த சோகை நுவன்றிடு பிணிகள் போமே 22

போந்திரி நாட்கொ ருக்காற் புகன்றிடு பற்பத் தோடே
சேர்ந்திடு மேரண் டெண்ணெய் சேர்த்திடும் பேதியாக
மாந்திடு மேழு நாட்பின் மதித்தமோர் கூட்டிக் கொள்க
ஆய்ந்திடு பத்தி யத்தோ டருந்தவே முனிவர் சென்னார் 23

### பாண்டுரோகம் - 5

திருமறை முனிவன் கூறும் வாகடச் செய்கை தன்னில்
வருமுறை பாண்டு ரோக வகைதொகை யைந்தாச் சொல்வர்
உருகெழு வாதபித்த கபங்களி லொவ்வொன் றாகும்
†திரிவித தொந்த மொன்று சேர்மிருத் திகையா லொன்றாம் 24

†திரிவித தொந்தம் - வாதம் முதலிய மூன்றும் தொந்தித்து உண்டாகும் சன்னி பாண்டு

### பாண்டுரோகத்தின் பொதுக்குணம்

துரப்புட னிளைப்பு முண்டாய்ச் சுவாசமு முட்ட தாகி
இரத்தமுங் கெட்டுச் சோர்வா யிந்தியங் கொள்ளா தாகி
உரைப்புறு மசனம் வேண்டா துட்சுர மாகிப் பாண்டம்
இரைப்புமாய் வெளுத்து நாசி யிற்சளி தோன்றிச் சிந்தும் 25

செவியிரைக்குந் தலைசுற்றும் முரோமம் வேறாந்
தேகமிகக் கனமாகு முகமும் வீங்கும்
சவிகெடுக்கு முதரத்தீ மந்த மாகுஞ்
சளியொழுகுஞ் சினத்துவிழுந் துடியா நெஞ்சு
குவிமுலையாய் புத்திமிக மந்த மாகிக்
குற்றமுறுந் தாதுகெடுங் குளிர்ச்சி வேண்டா
தவிபுலத்து முனிவரரிவ் வண்ண மாக
வறைந்தனர்க ளாராய்ந்து கண்டு கொள்ளே 26

### 1. வாதபாண்டு

வாதத்தி லெடுத்த பாண்டு வருங்குணம் வலிகுத் துண்டாம்
தீதுற்ற வுடல்ந டுங்குஞ் சேர்ந்திடும் வீக்க மெய்ப்புப்
பேதுற்று மலச லங்கள் நகங்களுங் கறுப்புக் கொள்ளும்
கோதுற்று வயிறு விம்முங் கொண்டிடு மரோசி கந்தான் 27

உரைத்திடுங் கண்ணு நாக்கு முதட்டுடன் சரீரந் தானும்
புரைத்துற நிறமே கெட்டுப் பொரிந்திடு மலங்க டானும்
விரைத்தடங் குழலா யிந்த மெலிவுகள் கண்ட போதே
உரைத்தனர் வாத பாண்டென் றுணர்ந்திடு முனிவர் தாமே 28

கையுங் காலுங் கனத்துளைந்து கண்ணு முகமும் வயிறதைக்கும்
மெய்யுங்கனத்துவெளுத்திருக்கும்வெண்ணீர் நுரையாய் வயிறழியு
ஐயுங் கோபித் திளைப்புண்டா மன்னஞ் செறுத்தங்குவாந்திக்கும்
செய்யும் வாத பாண்டுவெனத் தெரிந்த பெரியோர் செப்பினரே 29



### பித்தபாண்டு

பித்தத்தி லெடுத்த பாண்டு பேசுநா வரட்சி யுண்டாம்
மற்றுடல் பசுமை யாகி மஞ்சளி நிறமு முண்டாம்
உற்றிடு மூர்ச்சை தாக மொளிகெடுங் கண்க டாமும்
துற்றிடு மழற்சி வாயிற் றுர்நாற்றம் புளித்தேக் குண்டாம் 30

இருமலே யிளைப்பு நெஞ்சி லிடிப்புடன் றுரப்பு மாகிப்
பெருகவே நடக்கும் போது பேசுமுட் டதுவே யாகும்
வெருவுறக் கிறுகி றுக்கு மேனியும் வெளுத்த தைக்கும்
பெருகிய பித்த பாண்டு வாமெனப் பேசி னாரே 31

உதயமெய் யதைத்துக் கைகா லோய்ந்துடன் சுரந்து நோவாய்ப்
புதையவே வீங்குங் கண்ணும் போதவே வெளுக்குஞ்சோர்வாம்
பதகர மதிலு மிஞ்சிச் கொறிவதா யசறு பற்றும்
விதமுறு குணங்கள் பித்த பாண்டென விளம்பினாரே 32

### 3- சிலேற்பனபாண்டு

மெய்யே வெளிறும் வயிறதைக்கும் வீங்கும் புறங்கால் புறங்கைகள்
கைகா லோயுங் கிறுகிறுக்குங் கண்ணு முகமும் பஞ்சாகும்
துய்ய மலநீ ரழாய்ந்துவிழுந் தொண்டை கசிந்து துரப்புமிகும்
ஐயே கக்கு மிக்குணங்க ளறிவாய் சேற்ப பாண்டெனவே 33

வேர்த்து வெருவிக் கண்குளிரும்வெச்சென் றிருக்கும்விலா நெஞ்சும்
ஆர்க்குந் துடிபோ லிடிக்குமது வையும் பித்துங் கலந்துவரும்
தீர்க்க மன்றி மறதியுண்டாந் திற்றி நாவும் வழுவழுக்கும்
பார்த்தா லுடம்பு வீக்கமுறுஞ் சேற்ப பாண்டு விதுபகரே 34

கண்ணு நாவு முதடுடம்புங் கருது மலமோர் பிரகாரம்
உண்ணுங் கரமுங் கால்தானு முடனே வெளுக்கு முதகமதிற்
பண்ணுந் தாக முண்டாகும் பசியற் றிருக்கும் பார்த்திதனை
எண்ணுஞ்சிலேற்ப பாண்டுருவென் றெழுதிவைத்தார் பெரியோரே 35

### 4- சன்னிபாண்டு

ஓதிய வாத பித்த சேற்பனங் கோபித் தோங்கும்
ஊதையு மிகுந்து விம்மி யுதரமுங் காலும் வீங்கும்
பேதமா யிளைக்கும் விக்க லுவாந்தியும் பிரமை தாகம்
கோதையே சன்னி பாத பாண்டுவின் குணமி தாமே 3

கண்ணுந் தூங்கி முகமதைத்துக் கைகாலோய்ந்து கிறுகிறுக்கும்
உண்ணு மசனஞ்செறுத்துவிம்மி யோங்காளித்து நெஞ்செரிக்கும்
தண்ணீர் தவிக்கு நாவரளுந் தாக மோகம் பிரமையுமாம்
பெண்ணே கேளாய் திரிதோஷந் தொந்தித் தோங்கும் பெரும்பாண் 37

வன்னியுட னூதையையுங் கோபித் தோங்கு
மஞ்சணித்தே யிளைப்புமாய் மயக்க மாகித்
துன்னிருமல் கண்புகைத்தல் கைகா லோய்தல்
துரப்பெழுதல் பிரமையொடு சோக மாதல்
மன்னுநக மும்மலநீர் கண்வெ ளுத்தல்
வாந்திகொள்ளல் வயிறூதல் மானே கேளாய்
சன்னியுறு பாண்டுசெயுங் குணங்க ளென்று
சாற்றினார் வாகடநூல் தன்னை யாய்ந்தே 38

### 5 - மிருத்திகாபாண்டு

முகமொடு புறங்கால் வீங்கு முட்டடு னிளைப்பு முண்டாம்
மிகவுநெஞ் சிடிக்கு மண்ணை விரும்பிமென் மேலுந் தின்னும்
தகவுறும் வயிறு விம்முங் கிருமியு மலத்திற் பற்றும்
தொகைபடு குணங்கள் மண்ணாற் றோன்றிடும் பாண்டு வாமே 3

### சில பிரதிகளில் வேறும்
### மூன்று பாண்டுகள் கூறப்பட்டிருக்கின்றன
### அவை பின்வருமாறு
### 1-சுரபாண்டு

காயு முடம்பி லெப்போதுங் கண்ணுந் தூங்கிக் கிறுகிறெனும்
வாயு முடம்பில் விடம்போலாம் வாங்கிப் புசிக்க மாட்டாது
சாயங் கால மிருமலுறு முதரம் விம்முந் தாகமுறும்
பாயு நீருஞ் சுடுமலமும் பச்சென் றிருக்குஞ் சுரபாண்டே 40



### 2-இரத்தபாண்டு

சுரத்தினிற் பித்தந் தோன்றி யுதிரமே சொரிந்து கக்கும்
நெரித்திடும் புருவ முச்சி யிடித்திடு நெட்டை யுண்டாம்
கரத்தொடு காலு மோயுங் கண்முகம் புதைய வீங்கும்
இரத்தமாம் பாண்டு செய்யுங் குணமென வியம்பி னாரே 41

வாய்நீர் சுழற்றி நெஞ்செரிக்கு மலமுஞ் சலமுஞ் சிவந்திருக்கும்
தேனீ போல மிடறிரையுஞ் சில்லென் றடைக்கு மிருகாதும்
ஊனே யுருக்குங் கபம்வீழு மோங்கா ளிக்கு முதிரம்விழும்
மானே காலும் வயிறதைக்கும் வகுத்தா ரிரத்த பாண்டுவென 42

### 3-மூலபாண்டு

கால்கை யோய்ந் துடல் காய்ந்து வெளுத்துகிர்
சால வேபெலன் றானுங் குறைந்திடும்
சூல மேற்கொண் டுணவு சுருங்கிடும்
மூல பாண்டின் குணத்தை மொழிந்தனர் 43

ஊதை விம்மி யுதரமும் வீங்கிடும்
பாதை நீள்குறங் கைப்பற்றி வாங்கிடும்
தாது நாசம தாய்மலந் தங்கிடும்
ஓது முலத்தி லுற்றிடும் பாண்டுநோய் 44

### காமாலை
### வரட்காமாலை

முகமும் வீங்கிக்கண் வெளுத்து மூச்சு நடக்கில் முட்டாகி
அகமுந் துடித்து நாவரண்டே யணுகுந் தாது கெட்டுவரும்
மிகவு மகனஞ் செரியாது மேனி வரண்டு வெளுப்பேறும்
தகவே சொன்னோங் காமாலை சாற்றுங் குணக ளிவையாமே 45

### வாதகாமாலை

கரிமண் சாம்ப லிவைதின்னுங் கண்ணு முகமும் வெளுத்ததைக்கும்
விரிய விலாவி லிளைப்புண்டா மிருகால் மூட்டுக் கடுத்தோயும்
பொருமும் வயிறு நெஞ்சிடிக்கும் போதந்தாழுங் கண்புகையும்
மருவும் வாத காமாலை வருத்துங் குணங்க ளிவையாமே 46

**ஊதகாமாலை**

பொருமிடு முடம்பெண் சாணும் பொருத்துகள் தோறுநோவாம்
இருவிலா நெரிய வாங்கி யிளைத்திடு மூதை விம்மும்
கருதுநாத் தடித்துப் பேசுங் கபமிகுந் திரும லுண்டாம்
உருவிழி முகமும் வீங்கு மூதுகா மாலை தானே 47

**மஞ்சட்காமாலை**

கண்முக மலச லங்கள் கருதுநா வுதரங் கைகால்
திண்ணநா வூதி யொக்கப் பசலமே செறிந்து காட்டும்
உண்ணுநீர் தாகம் பற்றி யுதரத்து ளுதை விம்மும்
மண்ணிடை சுழலு மேனி மஞ்சட்கா மாலை மானே 48

**கருங்காமாலை**

அவயவங் கறுத்துக் காட்டி யயாவொடு மயக்கம் வேர்வை
கபமுற விளைக்குங் கைகால் குளிர்ந்திடு நெஞ்சு காயும்
சுவையுறு மெண்ணெய் நெய்பா லுணவினாற் றொந்த மாகும்
பவமறு முனிவன் சொன்ன பயன்கருங் காமா லைக்கே 49

**காமாலைமூன்றின் நிறவேறுபாடு**

வாதகா மாலைசெய்யுங் குணத்தின் பேத
மருவுநகங் கறுத்திருக்கும் பித்தந் தன்னால்
ஓதவரு காமாலை கண்ணு நாக்கு
முதரமுடன் மஞ்சளிக்குஞ் சேடத் தாலே
போதவரு காமாலை நகம்வெ ளுக்கும்
புகன்றகா மாலைதனிற் றொந்த மானால்
பேதமுறு மென்றுமுனி வோர்க டோர்ந்து
பேசினார் குணங்குறிகள் பெருகத் தானே 50

**காமாலையின் அசாத்தியம்**
**(பாண்டுசோகைகளுக்குமொக்கும்)**

பெருகவீங் கிடுமு டம்பு பேசுமுட் டதுவு மாகும்
கருகிடுங் கண்ணு நாக்குங் கறித்திடு பற்க டாமும்
உருவுறு முதரந் தானு மொக்கவே பொருமி விம்மும்
வருமருந் தினுக்கு மிஞ்சு மற்றசாத் தியமென் றாரே 51



ஆறாப் பித்தம பித்தபாண் டடைவே யக்கினி மந்தமுமாய்
வீறாப் பதத்தில் மிகச்சூழ்ந்து மெய்வாய் நாவு மிகவெளிறும்
மாறாப் பெருமன் மலமூறும் வலிக்கு நாறு மசன மின்றாம்
ஊறுஞ்சலத்திலெண்ணெய்விட்டாலுடன்மேற்சேடம் படர்பாசி 52

படரும் பருத்தி போல்வெளிறும் பாதம் பன்னீ ராயூறும்
நுடரு நரம்பு கருநரம்பாய்ச் சுவாசந் தூரச் சுழித்துநிற்கும்
சடரந் தன்னின் மேற்றினவு சாரு முழலை சலம்பொசியும்
இடரே புரியுங் குணங்கண்டா லிவைகண் மார்க்க சங்கடமே 53

**சிகிச்சை**
**கீழ்க்காய்நெல்லிநெய்**

மாறுங் கீழ்காய் நெல்லியின்வேர் மருவும் பலமூ வைந்தினுடன்
நாறுங் கடுக்காய் விரைபோக்கி நுணுக்கித் தூளி கொத்தமல்லி
நீறு முழக்கு நெல்லிக்காய் நிறையிற் பாதி சிவதையில்வேர்
தேற விடித்துக் கோசலத்திற் செறிந்த தூணி யிரண்டுவிடே 54

விட்டே நாலு நாளிற்பின் மிகவும் பிசைந்து வடிநீரில்
இட்டே கடுகு ரோகணியு மேலந் திப்பிலி மோதகமும்
மொட்டே செண்ப கங்கோட்ட மொழிந்த மஞ்சள் வேர்க்கொம்பு
மட்டாங் கழஞ்சோ ரொன்றாக மருவ வரைத்துக் கரைத்திடுமே 55

மருவு மாவி னெய்புகட்டி வடித்து நோங் கழஞ்சுகொளிற்
பொருமல் சோகை யுட்கழிவு பொறிசேர் துயரங் காமாலை
உருகும் பாண்டு வுள்ளடக்க முன்னும் பிறநீ ரூறுதலும்
வெருவி யேகு மென்றுமுனம் விரித்தார் முனிவர் மேதினிக்கே 56

**கடுக்காய்நெய்**

பாண்டுகா மாலை படர்சோகை நீர்க்கோவை
ஊண்டுநோய் தீர வியம்பக்கேள் வேண்டும்
சிவனதுர்க்கி தன்னில் வருவிதையை நீக்கி
நினைவாய்ப் பலமைம்பா னேடி - இனமான
சிவனதுர்க்கி - கடுக்காய அம் - நீர்

கீழ்காயி னெல்லிவேர் கிண்டிமு வைந்துபலம்
தாழ்விலா தேயெடுத்துச் சார்மல்லி வாள்விழியாய்
எண்ணாளி கூட்டி யிடித்தங் குறுணிவிட்டு
நண்ணியது பாதியாய் நாடியபின் - எண்ணமுடன்
கோசலமீர் நாழி கூடவிட்டு நாலுநாள்
ஆசறக் காய்ச்சி யதன்பின்பு – மோசமற
வேபிசைந்து தான்வடித்து வேண்டியது நானாழி
யாவெடுத்துக் கற்கவகை யானுரைப்பன் - காவிலுறு
கோட்டங் கடுக்காய் குலவுமிரு சீரமஞ்சள் 57

நாட்டுசுக்குச் செண்பகப்பூ நல்லேலம் - கூட்டும்
சிவதை கடுரோணி செங்கழுநீர் மூலம்
நவையற முக்கழஞ்சு நாடி - இவையெல்லாம்
சேர்த்தரைத் தந்நீரிற் செம்மைபெற வேகரைத்து
வார்த்துப் பசுநெய் வருநாழி - கூர்த்த
பதமெழுகாய்ப் பார்த்துப் பணிந்து முக்கட் டேவை
இதமுற வேவடித்திந் நெய்யைக் - கதமறவே
நோயு முடற்கூறு நுனித்தறிந் தோர்கழஞ்சு
காய வுருக்கிக் கருத்துடனே – ஆய
இருபதுநாட் பத்தியமா யேற்றபடி யுண்ண
வருசோகை பாண்டு வருந்தும் - உருவெளுப்பு
வன்னிமந்தங் காமாலை வந்தநோய் தீர்ந்துவிடும்
என்ன முனி சொன்னா னிசைந்து 58

**கடுக்காய்நெய்-2**

இசைந்திடு நெய்தா னின்னமொன் றுரைப்பன்
பசந்திடு பயோதரப் பாவைநல் லாய்கேள்
உசந்திடு கடுக்கா யொருநூறதனைப்
பெரிதாய் வாங்கிப் பிளந்து விதைநீக்கி
இடித்தெட் டொன்றாய் வடித்திடு கஷாயம்
தன்னொடு கீழ்காய் நெல்லிகரி சாலை
உன்னுறு காட்டு மல்லிகை சாலை
வகைபலம் பத்து வருபழங் கிட்டம்
அதுவும் பதின்பல மாக வெடுத்தே



இடித்துக் கஷாய மெட்டொன் றாக்கிப்
பிழிந்து கலந்து பேசிய கரும்பின்
சாறு நாழி யூற விட்டுத்
திரிகடு கோடு திரிபலை திப்பிலி
மூல மந்தித் திப்பிலி யேலம்
கடுகு ரோகணி கருதிடு மல்லி
மரமஞ்சள் கோட்ட மதுரஞ்செவ் வள்ளி
தருமஞ் சிட்டி சதகுப்பை வீழால்
கரிய சீரகங் கராம்புசெண் பகப்பூ
வெட்பா லரிசி விரும்பில வங்கம்
மாசிக் காயும் வகைகழஞ் சொன்றாய்
அரைத்துக் கரைத்தே யாவி னெய்யும்
விட்டு வடித்து மேவியே நக்கத்
தொட்டிடு பாண்டுஞ் சோகையு மாதி
தீர்ந்திடு மென்று செப்பினர்
ஆய்ந்திடு முள்ளத் தருந்தவத் தோரே 59

**கடுக்காய்நெய்-3**

அருந்துநெய்தற் கிழங்குகண்டங் காலி கோரை
யருஞ்சிவதை நன்னாரி கீழ்காய் நெல்லி
திருந்துகொடு வேலியின் வேர் கருப்பஞ் சாறு
சீந்தில்குப்பை மேனிகரி சாலைச் சாறு
பொருந்துகொடி மல்லியிலை தண்ணீர் விட்டான்
புகல்சாறென் றொருநாழி பசுப்பால் நாழி
மருந்துநெல்லி தான்றிசுக்கு மிளகிந் துப்பு
மதுரமில வங்கமா வின்பூக் கோட்டம் 60

கோட்டிவிழா லேலமிவை கழஞ்சோ றொன்றாய்க்
கொள்கடுக்கா யைந்துநூ றவித்த நீரும்
ஈட்டுநறு நெய்நாழி விட்டுக் காய்ச்சி
யிதமாக நாலாநாள் வடித்துட் கொள்ளில்
நாட்டுமெய்ப்புக் காமாலை பாண்டு சோகை
நடுக்கிளை யுளைமாந்தை யிருமல் காசம்
கோட்டுமா முதறடிந்த வைவேல் முன்னர்க்
கூடுமசு ரக்கிளைபோற் குலைந்து போமே 61

**அமிர்தசஞ்சீவி**

அரிதார மனோசிலைவெண் காரங் காந்த
மரபொடிமுக் கடுகுடனே கடுக்காய் தானும்
சரியாகக் கழஞ்சுதழல் பீச்சிக் கண்டந்
தானிடித்த பொடியிதற்குச் சமனாக் கூட்டிப்
பரிவாக வெலுமிச்சம் புளியா லாட்டிப்
பாக்களவா யுண்டைசெய்து தேனிற் கொள்ள
மருவாது சோகைகா மாலை பாண்டு
மாறுமிந்த மருந்தமிர்த சீவி யென்னே 61

**ஊறுகாய்**

எலுமிச்சங் கனியதனை நாலாய்க்கீறி
யிந்துப்பு மிளகுள்ளி கடுகு சுக்கு
வலுமிக்க வரப்பொடியுஞ் சமனாய்க் கொண்டு
வளர்கையான் றகரையினிற் சாற்றா லாட்டி
எலுமிச்சங் கனியதனி னுட்பொ திந்தே
ரவிமுகத்தில் வைத்தெடுத்து நேர மொன்றுக்
கலைவின்றி யொருகீறு தின்ன மாறு
மகலாத பாண்டுகா மாலை தானே 62

**மண்டூரசூரணம்**

வளமுறு பழமண் டூரம் வகைபெறக் காய்ச்சித் தோடம்
புளியொடு குமரி நீர்தாம் பூலிகைத் தகரைச் சாறும்
உளசுர பியினீர் காடி யொன் றினி லாறு சுத்தி
தெளியநா லாறு செய்தே செவ்வையாய்ப் பொடிய தாக்கே 63

பொடிசெயிம் மருந்தா றெட்டுக் கழஞ்சுடன் புதிய காந்தம்
கடுமர பொடியோ ரொன்று கழஞ்சுநா லாகக் கூட்டி
அடவிகச் சோலஞ் சீன மிளகேல மசம தாகம்
வடுவில்முப் பலை†த மாலம் வருகுறா சானி வாசி 64

†தமாலம் - பச்சை



வாசமர் கராம்பு மூன்று கடுகுமற் றிலவங் கந்தான்
மாசினற் சீர கந்தான் வகைக்கொரு கழஞ்ச தெல்லாம்
கூசிடா திடித்து முன்னர்க் குறித்தமண் டூரந் தன்னோ
டீசனா ரருளை யுன்னி யேற்கவே கலந்து வையே 65

வைத்தவிம் மருந்தைக் கையான் றகரையின் வருநீர் விட்டுச்
சுத்தமாய் வெயிலில் வைத்துச் சுவறவே காயந்த பின்பு
மெத்தவுங் கருகி டாமல் வெச்சோட்டில் வறுத்திடித்துச்
சித்தமீ துவந்து கோம் வெருகடி சீனி தேனில் 66

உண்டிடப் பாண்டு சோகை யுற்றகா மாலை யாதி
மணிடிடும் வெப்புப் பாவை மெல்லியர் பெரும்பா டும்போம்
கண்டிடு மெய்ப்பி ளைப்புக் கனசூலை தாப சோபம்
கொண்டிடும் பித்த மாதி போமெனக் கூறி னாரே 67

**மண்டூரசூரணம் -2**

ஆண்டு நூறளவு சென்ற மண்டூர மதனை வாங்கி
நீண்டதோ ருலைமு கத்தில் நெருப்பெழக் காய்ச்சிக் காய்ச்சி
வேண்டிய கோச லத்தின் மிகுநூறு தரமுந் தோய்த்துக்
காண்டகு பொடிய தாக்கிக் கலந்திடு மருந்து கேண்மோ 68

மருந்துமுக் கடுகு மூன்று பலைவசு வாசி யோமம்
பொருந்துமக் கறாவெண் கோட்டம் புகல்குறா சானி வீழால்
அருஞ்சுரர் தருவோ டேல †மடவிகச் சோலஞ் ‡சோலந்
திருந்துபேச் சிலைகை ராம்பு சீரக மிரண்டு தேடே 69

தேடுவால் மிளகிந் துப்புத் திகழ்கொடு வேலி வேரும்
கேடிலா முத்தக் காசு கிளரிலா மிச்சு வேரும்
நாடுமிங் கிவையோ ரொன்று கழஞ்சுநற் பொடிய தாக்கிக்
கூடுநற் காந்த மாறு கழஞ்சையுங் குணமாய்ச் சேரே 70

†அடவிகச்சோலம் - கஸ்தூரிமஞ்சள்
‡சோலம் - கச்சோலம்

சேரா பொடிமூ வாறு கழஞ்சுநற் சுத்தி செய்த
கார்கொள்மண் டூரத் தூளுங் கழஞ்சுநா லைந்து கூட்டி
நேரில்கைத் தகரைச் சாற்றால் நெகவரைத் தினுமச் சாற்றில்
சாரவே குழைத்துப் பானுப் புடமதில் வைத்தி டாயே

வைத்துநீ கிளறிக் காய்ச்சி மறுகாலச் சாறு வார்த்துச்
சுத்தமா யுலர்த்தி நன்கு தூளித மாக்கிப் பின்னும்
அத்தகு சாற்றிற் கிண்டி யருணனி லுலர்த்தித் தூளாய்
வத்திர காயஞ் செய்த மருந்திலோர் கழஞ்சு வாங்கே

வாங்கியந் நிறையிற் சீனி கலந்துமண் டலம ருந்தி
ஆங்குவா கடர்சொற் போல வாகாத பதார்த்த நீக்கிற்
போங்கடுப் புடன்வா தங்கள் புகன் றகர மாலை சோகை
தீங்குசேர் பாண்டு ரோகஞ் திரிகளின் பெரும்பா டும்போம்

தாகமோ டசீர ணங்கள் தணிவிலாச் சூலை மேன்மூச்
சேகுமெய்ப் பிளைப்புப் பித்த மிடர்தருஞ் சோப தாபம்
மோகமார் முத்தோ ஷங்கள் மொழிந்தநோய் பலவுந் தீரும்
பாகன மொழியாய் மூத்தோர் பாலர்க்கு மருத்த லாமே

**மண்டூரசூரணம் -3**

மண்டூர சூரணத்தை மானிலத்தீர் நன்குசெய்து
கொண்டா லுறுமோ கொடுநோய்கள் - வண்டேயும்
கூந்தன்மட மானே குறித்துமுன்னோர் சொன்னபடி
ஆய்ந்து முறைதவறா தாங்குரைப்பன் - ஏய்ந்ததொரு
நூறாண் டளவுசென்ற மண்டூர நூறுபலம்
நூறாண் டிடாம னுவன்றபடி – நூறாண்டி
கட்குணவு நல்கிக் கருதுபசு மூத்திரமோர்
மட்கலத்தி லிட்டு மறித்தினுங்கேள் - உட்கு
வரலகற்றி வெள்ளா டதினீர் நரர்நீர்
சரியா யதில்விட்டுச் சாற்றும் - உரைவகையாற்
தூணி யளவாக்கிச் சொல்லியமண் டூரமதிற்
பேணியிட்டு மண்சீலை பெட்புறவே காணவதிற்
செய்து பசுத்தொழுவத் திற்றாட்டு மண்டலத்தி
லெய்தி யெடுத்தங் கினிவகைகேள் - கொய்த



 புளியிலைநீர் முக்குறுணி போதக்கொண் டத்தில்
டளவதனைக் காய்ச்சியுறத் தோய்த்துத் - தெளியவைந்து
த்துமுறை தோய்ந்தபின்னாப் பண்புபெறு கையானீர்
த்தவகை முக்குறுணி யிற்றோய்த்து – வைத்திருந்து
ற்றாழை நீர்குறுணி மூன்றிற் கருத்தாக
றபோலத் தோய்த்து முடிந்தபின்னர்ச் - சுத்தமுறு
ண்டூரந் தன்னை யிடித்துவடி கொண்டினுங்கேள்
விண்ட வரப்பொடி மேன்மையுறத் - தண்டாமற்
த்துப் பலமெடுத்துப் பார்நாவற் பட்டையினிற்
த்தமுறு சாற்றிற் றொடுத்தூறி – மெத்தவுமே
பொங்கிமிக வாறியபின் போந்த வதைப்பொடித்துப்
ங்கமறு காந்தம் பதின்பலமும் - மங்காமற்
ணச்சாற் றிட்டுக் கலந்தூறிக் காய்ந்ததற்பின்
ாண வதைப்பொடித்து வைத்திடுவாய் - பேணியினும்

க்கடுகு முப்பலையு முற்சிவதை ரோகணியும்
க்கடுகு லச்சுனமுந் தானோமம் - மிக்கநற்சீர்
ப்பைந்து காரமைந்து மொண்சார மைந்ததுவும்
செப்புகின்ற வாய்விளங்கஞ் சின்மூலம் - துப்பார்ந்த
ஆறரிசி சிற்றரத்தை யானகுறா சானிதரு
தேறுகின்ற சாதியைந்து சாதிலிங்கம் - கூறுகின்ற
ண்டில்வெண்ணெய் சோமனுப்புக் கஷ்தூரி மஞ்சளுடன்
பிண்டசிறு செங்கடுகு வெண்கோட்டம் - ஒண்டொடியே
நெல்லிக்காய்க் கெந்தகமு நேரியசீ ரேலமதும்
ல்லுமதி நல்விடயம் பூதவர்க்கம் - வல்லவதி
ாமதுர மோடமழை மாறிலவெண் குந்துருக்கம்
சேமதிரி பத்திரியுந் தேடியே – ஆமினுங்கேள்
அட்டவர்க்க மும்வசம்பு மானசிறு தேக்கதுவுஞ்
ிட்டிகுக்கில் வெள்ளறுகு சேரியங்கு – திட்டமுறு
லிமுள்ளுக் காவிளைவேர் நேர்சித்ர மூலமெனும்
இவையொ றொருபல நிறைகொ ளிடிபொடி
ுதிய துகிலிடு வடிகொ ளளவிடு
வைகொண் மதுவினில் விரவி வெருகடி
ுவள வயிலுவை பொழுது மிருபது – நவைசேரும்

எய்ப்பி ளைப்பொடு சத்தி விக்கலும்
அத்தி யுற்றெற பித்த முள்ளதும்
இச்சை கெட்டழல் சத்தி றிற்கசை
துய்ப்பொ றுத்திடு மத்தி யுற்றது
கக்கல் பற்றிய வெப்ப முற்றது
தொக்க தைத்திடு மக்கு ணத்தொடு – வெப்பான

ஊது காமலை யாம சூலைகள்
தாது சீவித சூலை சூரைகள்
மோதி யேயெழு சோகை யூதைகள்
தாப மோடெழு சோப மாதிகள்
தேக பாரிச நீர்கள் சோரிகள் - தீதான

சிரமுறு பித்தம் வயினுறு பித்தம்
கரபத பித்தம் மெரிவுறு பித்தம்
உரமுறு பித்தம் பரிவுறு பித்தம்
கருவிழி பித்தந் திரிவுறு பித்தம்
தெளிவறு பித்தஞ் செவியிரை பித்தம்
உளைவுறு பித்தந் தழலுறு பித்தம்
பயமுறு பித்தங் கயமுறு பித்தம் - தியவான

குன்மமதி சாரம் வன்மையுறு மாமை
கொன்னுறுக விகை துன்னுறுபி லீகை
மன்னுகுடல் வாயு இன்னலுறு சூரை
சென்னிசுழல் வாதை யின்னபல நோய்கள் - துன்னாதே

என்று பொதியத் திருந்து தமிழுரைத்த
நன்றி யுறுதவத்து நாயகனார் - அன்றருளிச்
செய்தபடி யாலுரைத்தேன் நீமை தருமுணவும்
கைதவமு நீக்கியருட் கண்ணுதலை – உய்திபெற
நாடி யுளத்திருத்தி நாளுமருந் துண்பவருக்
கோடிநோய் போகு முணர்



## நெல்லிக்காய் லேகியம்

மருமேவு குழலணங்கே நெல்லிக் காயின்
வருசாறு படியெட்டிற் குறைவு றாதே
திருமேவு சர்க்கரையோர் பதின்ப லத்தைச்
சேர்த்துவற்றக் காய்ச்சிவரும் பாகு தன்னில்
உருமேவு பசுநெய்யோர் படிதான் கூட்டி
யருகிவரும் பருவத்திற் சரக்குக் கேண்மின்
சிறுநாக மலரேல மிலவங் கத்தோல்
செப்புமதன் பத்திரியு மதுரஞ் சீரம் 76

சீரமருவு மிந்துப்புப் பலங்கால் வீதஞ்
செப்புமிள கொடுசுக்குப் பலத்திற் பாதி
பேர்மருவு முந்திரிகைப் பழமி ரண்டு
பெருகுதிப்பில் நாலுபலம் பாலில் வெந்து
நேர்மருவு சிவதையெட்டுப் பலத்தூளாக்கி
நிகழ்த்துமருந் தினிற்றூவித் தேனும் விட்டுக்
கூர்மருவு பதத்தினிலே காய்ச்சி யுண்ணக்
கூறியவப் பிணிகளெலாங் குலைந்து போமே 77

## அமுதசிந்து லேகியம்

மூன்று மரத்தில் முறித்திடு புளியிலை
ஒருநா றுடனே துருவே றியநற்
பழைய விரும்பு பலமது மைம்பது
சித்திர மூல மத்தினில் வேர்தான்
இருபதோ டைந்தா மிஞ்சிபன் னிரண்டரை
சாரணை வேருடன் தேவர் டாருவும்
ஆறே காலா மருந்துச மூலம்
செவ்வியந் திப்பிலி மூலமென் றுரைத்த
பத்துடனிரண்டுஞ் சுத்தம துறவே
தனித்தனி நாற்பலந் தகர்ததே யிடித்து
நாலிரு மரக்கா லாலிநீர் விட்டு
மரக்கா லொன்றாய் வடித்ததிற் பழைய
வெல்ல மதுபலஞ் சொல்லுமை யைந்து
கூட்டிக் காய்ச்சிக் குழம்பது வானாற்

கொம்மடி மாதுளை கூறிய தோடை
நற்கனிச் சாற்றோ டிக்குறு சாறும்
வகைபடி யிரண்டு வார்த்துமேற் கற்கம்
ஓமமுக் கடுக முடன்குறா சானி
ஏலங் கராம்போ டிலவங்கப் பட்டை
இவைவகை நாற்பல மிருபலங் கிட்டம்
அயசிந் தூர மதுபல மிரண்டு
துளிதமா யிட்டுத் துளாவியே பின்னர்க்
கையான் றகரையிற் கருதிய சாறு
படியிரண் டளவிப் பருவத்தில் நெய்யும்
தேனும் விட்டுத் திரண்டிடு பதத்தில்
இறக்கியே மருந்தை யினியவுள் ளத்தால்
ஆனை முகவ னடியிணை வாழ்த்தி
நெல்லிக் காய்போற் சொல்லிய வளவில்
உண்ணக் கொடும்பிணி யுரத்திடு குன்மம்
பாண்டுகா மாலை பகர்பல காசம்
ஈண்டுறு சூலை யெகுத்துப் பிறநீர்
பீநச மாதிப் பிணிபல வகலும்
என்றுமா முனிவ ரிசைத்தனர் மருந்துணும்
காலங் களிலே கருதிடு சுக்குத்
திப்பிலி மூலஞ் செப்பிய வேலம்
குடிநீர் கொள்ளக் கூறினர்
மடியறு தவத்து வரன்முனி வோரே

**காந்தக்குழம்பு**

காந்தக் குழம்பைக் கருதி யுரைத்திடவே
ஆம்பன்முகத் தைங்கரனை யன்புடனே – தாம்பாடிக்
கொண்டுசிறு காஞ்சொறியின் கூறுமிலை நற்கையான்
விண்ட பிரமிகுப்பை மேனியுடன் - கண்டதொரு
நெல்லிக்காய் நற்கரும்பு நேர்நீற்றுப் பூசினியின்
நல்லகனி தாடிமத்தி னற்கனியும் - முல்லைநகை
மானே புளியமிலை மற்றிஞ்சி யாமிவைகள்
ஆனாத சாறுவகை யாவின்னெய் - தேனினுடன்
கூட்டிச் சரக்குவகை கூறுகேன் வெண்காரம்



நாட்டு மரிதார நற்றுரிசு – காட்டுகின்ற
சூதஞ் சவர்க்காரஞ் சொல்லு மிருகழஞ்சு
சாதிக்கா யேலந் தகுமிளகு – ஓதும்
இலவங்கப் பூவுடனே யேற்றவசு வாசி
குலமே விருசீரங் கோதாய் - நலமேவும்
முக்கழஞ்சு காந்தமது மூவிரண்டு கிட்டத்தூள்
தக்க பதின்கழஞ்சு தன்னோடு – மிக்க
அரபொடியீ ரெண்கழஞ்சா †யவ்விலையின் சாற்றால்
உரமுடனே யாட்டி யுறவாய்த் - திரமுடனே
கூட்டிக் குழம்புகொள்ளக் கூறுபல வீக்கமதும்
நாட்டு மகோதரமு ற்பாண்டு – பாட்டில்
உரைத்தபடி தீருமென வோதினார் முன்னோர்
விரைத்தகுழ லாரணங்கே மெய் 79

**அமுதசர்க்கரை**

சீலமுட னேயமுத சர்க்கரையைச் செப்பிற்
கோலமுறு மாவிரையின் வேரிலை கொழுந்தோல்
ஆலவிரை யோடுடன் முசுட்டைவிரை யத்தி
மேலவிரை வேருமிரு வேலியிவை தேடே 80

தேடிய வமுக்கிரவு செப்பிய நெருஞ்சில்
வாடிவரு முத்தமிலா மிச்சுவன சத்தின்
பாடிவரு பூவிலுறு தாதிவைக ளோர்பங்
காடியம ருமமிர்த சாக்கரையொர் பங்கே 81

பங்கமறு சீரக மிரண்டுபலை மூன்று
தங்கும மலர்கடுக மூன்றினொடு கோட்டம்
துங்கமுறு நாகமலர் சொல்லியகர்ப் பூரம்
அங்கமு றரேணுகமு மானமது ரம்மே 82

மேற்கூறிய இலைகளின் சாறு

மதுரமுறு முந்திரிகை யின்கனிமற் றேலம்
கதுவியபே ரீஞ்சினொடு கற்கடக சிங்கி
சதுரமுறு தாளிச்ச பத்திரியுஞ் சாதி
பொதுவிலுறு காயசம தாகமும் புகன்றே

புகன்றதொரு சந்தனமு நேர்நிறை பொடித்தே
அகன்ற விரு மாமதமு மானபுனு கோடு
நுவன் றபொடி சர்க்கரை கலந்துட னுகர்ந்தாற்
குகன் றனரு ளாற்பிணி குறைந்திடுவ கூறும்

கூறியதோர் தேனினுட னேகொளுகி லாகம்
பாறுமவ ரேபசுவி னெய்யினி லருந்திற்
தேறுமுட லோடுபல தீர்பிணிகள் கேளும்
ஊறுபல பாண்டினுட னுற்றகச ரோகம்
காறியகா மாலைகர காலெரிவு மேகம்

மேகமதி லேவுரு கடுப்புளைவு மெய்யிற்
சோகமுறு பித்தமுந் தொடுத்துடல் கடுப்பும்
ஆகமுறு ரத்தமு மடுத்திடு முரோகம்
ஏகுமுறு மாதவன்மு னுற்றவிம மாயே

**காடி**

கரிசாலை பிரமியுட னியங்கு வீழி
காட்டுமிவை யிலையீஞ்சின் குருகு போந்தை
வருகுருகு தேசியினிற் கனியுஞ் சாறு
வாங்கியே படியொன்று வகைக்குக் கூட்டி
உரிதான பனங்கள்ளுப் படியி ரண்டு
மொன்றபக்கிக் கிட்டத்தூள் பல மிரண்டு
சரியாக வாப்பொடியும் பலமி ரண்டு
தகுகாந்தம் பலமொன்று பொடிய தாக்கே

ஆக்கியே புதுக்கலயத் திட்டசாற்றி
லளாவியே சிறுகொதியிட் டேழு நாட்கள்
வாக்கியே குடித்துவா நாளு நாளும்



வகுத்தபடி கொதியிட்டுக் கொள்ள லாகும்
ாக்கியே வருபாண்டு சோகை யெய்ப்புத்
ருமிளைப்புக் காமாலை பித்த பாண்டு
83போக்கவே தீருமென வுரைத்தார் வேதம்
புகன்றமுனி வரருப்புப் புளிப்ப கற்றே. 88

**சுயமக்கினி**

நாலு கழஞ்சா மரபொடியு நல்ல கெந்தி யெண்கழஞ்சு
84சாலச் சூத மறுகழஞ்சு †சருவே சுரனா ரரைக்கழஞ்சு
மாலின் றேவி யரைக்கழஞ்சு வளருங் காந்த மறுகழஞ்சு
கோலக் குமரிச் சாற்றரைத்துக் கொடிய வெயிலில் வைப்பீரே

வைத்தே கலத்தான் மூடியிட வாகாய் நீறி யமைந்திருக்கும்
சற்றே யெடுத்துப் பணவிடைதான் சாரு மிஞ்சி தேன்வெல்லம்
85கற்றோ ருரைத்த கரிசாலை காணு நொச்சி யிவற்றொன்றில்
வைத்தே யுண்ணப் பலகுன்ம மாறாப் பித்த பாண்டதுவும்

அதுவு மாறாப் புளித்தேப்ப மரிய சோகை காமாலை
கதுவு மட்டி பீலிகையுங் கடிய நோய்கள் மாறிவிடும்
86மதியின் முன்போன் மேமாம் வகுத்த வுப்புப்புளியினுடன்
எதுவு மாகாப் பதார்த்தங்க ளகற்றி யிடவே யிசைத்தாரே 91

**பெரிய புளியெண்ணெய்**

பெரியபுளி யெண்ணெய்தனைப் பேசக் கேண்மின்
பிறங்குநொச்சி யிலைச்சாறு படியொன் றாகும்
அரியகருப் பூரவள்ளி பிரமி கையா
னவைசாறு படியிரண்டு பதுமந் தன்னிற்
பெரியவளை யச்சாறு படியி ரண்டு
பேசுநெல்லிக் காய்ச்சாறு நாலு கொத்து
87விரியுமெலு மிச்சையினிற் புளியு நாலு
விளங்குநீர் வள்ளியுடன் முசுமு சுக்கை 92

†சருவேசுரனார் - சாதிலிங்கம்

சாறிவையும் படியிரண்டு பசுப்பால் நாலு
சாற்றுமெண்ணெய் படிமூன்று கலந்து கொண்டு
கூறுசிவை சாயவேர் சிற்ற மட்டி
†கோகனகத் தேவியர முறிகீழ் நெல்லி
நாறுமிரு வேலியிலா மிச்சு முத்த
நன்னாரி தூதுவளை வட்டு வேரும்
நீறுபட விடித்தரைத்துக் கலக்கிக் கற்க
நிகழ்த்துமுறை யாராய்ந்து நிறையிற் கொள்ளே 9

கொள்ளுமிரு சீரசம தாகமகில் கோட்டங்
கோதில்சுரர் தாருவிரு வேலியதி விடயம்
தெள்ளுசிறு திப்பிலிசெவ் வள்ளிவசு வாசி
சேர்‡பறவை மோடிசத குப்பையுட னேலம்
அள்ளுறுகச் சோலமுட னேசிறிய தேக்கு
மச்சமறு பச்சிலைக ராம்புவரு சுக்கு
விள்ளுசிறு நாகமலர் வெண்மையுள சந்து
வீசுமண மேவியசெஞ் சந்தனமுந் தேடே 9

தேடுகுலக் காயுடனே சரக்க தெல்லாஞ்
சேர்த்தரைத்துக் கலக்கியது துளாவிக் காய்ச்சி
நாடுபதந் தனில்வடித்துச் சிரத்தில் வைத்து
நலமுறவே யுடலாதி யந்தம் பூசில்
கூடுபித்த பாண்டுருவு பித்த ரோகங்
கொடியபித்தந் தனிலுண்டாங் கிரந்தி ரோகம்
வாடுபித்த சேற்பசுரஞ் சரத்தில் வந்த
வரள்வெப்புத் தோஷமுடன் கபாலந் தானும் 9

†கோகனகத்தேவி சீதேவியார் செங்கழுநீர்
‡பறவை செண்பகப்பூ மோடி பெரும்குரும்பை



தானுமொரு தலைக்குத்து முட்டி ளைப்புத்
தான்றீருஞ் சிறுபிள்ளை முதல தாக
வானுலவு பெரியமா னிடர்க ளீறாய்
வருபிணிக ணிவாரணமா மெனமுன் னோர்கள்
ஊனுயிர்க ளுறுமுடலிற் றுயரை நீக்க
வுவந்துரைத்தார் மணிவளரு நதிசேர் சோலைத்
தேனுலவு கதிரைநகர்க் கிறைவ செவ்வே
டிருவடிக ளிறைஞ்சியெண்ணெய் செய்து பாரே 96

**பருத்தியிலைச்சாற்றிற் புளியெண்ணெய்**

சீர்கொண்ட புளியெண்ணெ யொன்றினுங் கேளுகைத்
தகரையின் சாறு நாழி
செய்யநீர் வள்ளியின் சாறுமொரு நாழிபின்
சீதையின் சாறு நாழி
நீர்கொண்ட பொடுதலைச் சாறுநிறை நாழிபின்
னேர்வவ்வி லொட்டி நாழி
நிகழ்முசு முசுக்கையிற் சாறுமொரு நாழியா
நீளும்ப ருத்தி தன்னில்
ஏர்கொண்ட விலையினிற் சாறுசீ தேவியா
ரிலையினிற் சாறு நாழி
யெலுமிச்சி னிற்புளிய மிருநாழி யிளநீரென்
னெண்ணெயொரு நாழி யாகப்
பார்கொண்ட திப்பிலியு மலமில வங்கம்
பருத்தசந் தனங்க ராம்பு
பகர்மதுர மரமஞ்சள் மஞ்சள்சுரர் தாருவும்
பரிந்துசெவ் வள்ளி கொள்ளே 97

கொள்ளு மாஞ்சில் லகில்கோட்டங் குலவு மரத்தை மஞ்சிட்டி
விள்ளு மலையி லிருவேலி வேர்கொம் புடனே லாமிச்சுத்
தெள்ளுங் கொத்த மல்லியதுந் திகழ்கச் சோலங் கழஞ்சொன்று
துள்ளுந் தூது வளைகோரை சொல்லு நாரி யிருவேலி 98

வேல்போல் விழியாய் சமனரைத்துவிரையவடித்துத்தலையில்வைக்
மூல மான காமாலை முதிய சுரமும் பாண்டுருவும்
கோல மான வெளுவெளுப்புக் குலையுங் கதலி வனஞ்சூழுங்
சாலக் கதிரை முருகனிரு சரண மறவார் சாற்றினரே 99

**வெப்பாத்திப்புளியெண்ணெய்**

வெப்பாத்திப் புளியெண்ணெய் விளம்பக் கேண்மின்
வேர்நாரி தூதுவளை சிற்ற மட்டி
தப்பாத சதாவேரி யோரி தழ்த்தா
மரைகல்லின் முரிசுகளப் பன்னை வட்டு
ஒப்பாரும் பற்படகம் பேர மட்டி
யுயர்சீந்தில் சீதேவி முத்தக் காசு
செப்பாரு மிருவேலி பொன்னாங் காணி
சிறுகரம்பை யிலாமிச்சு வெட்டி காணே 10

காணே ‡யசுவம் வாலுளுவை கராம்போ டுள்ளி செவ்வள்ளி
பேணே கோட்ட மிலவங்கம் பேசு மிருசீ ரதிமதுரம்
தூணே செறியு மரமஞ்சள் சொல்லு நல்ல வசுவாசி
வீணே யில்லா வெந்தயமு மேவுஞ் சாதிக் காய்தேடே 10

தேடே யசமோ தகமல்லி திப்பிலி கடுகு ரோகணியும்
நீடே சுக்குச் சடாமாஞ்சி நேரொன் றிரண்டு கழஞ்சுகொடு
நாடே தேசிப் பழச்சாறு நல்ல வெண்ணெ யுடன் வடித்தே
ஊடே தின்று மேற்பூசி யுச்சி தனிலும் பொருத்தப்போம்

போமே பாண்டு காமாலை புகலுந் துடிப்பு வாயுவொடு
வேமே கிராணி யெய்ப்பிளைப்பு மிகுத்த பித்த மிவையெல்லாம்
பூமேன் மனிதர் தமைவிட்டுப் போகும்பொதிகைமுனிவனுக்குக்
கோமான் கதிரைக் குருபரவேள் குறித்தே யருளிக் கூறினதே 10

**மண்டூரவடகம்**

உத்தமமா மெலுமிச்சம் பழத்தின் சாற்றை
யொன்றுக்குப் பாதியாய் வெயிலில் வைத்துச்
சுத்திசெய்த கிட்டத்தூள் கூட்டிக் காய்ந்து
சொற்குழம்புப் பருவமதிற் கடுக மூன்று 10

‡அசுவம் - அமுக்கிரா



த்திபெறு முள்ளியிவை கூட்டி யாட்டிச்
சேர்த்துண்டை யுட்கொள்ள மோருஞ் சோறும்
த்திபெறுந் தென்கதிரை முருக வேள்தன்
தம்பணிவோர் வினையெனக்கா மாலை பாறும் 104

**அழற்காமாலைக்கு**

றுமழற் காமாலை தீரக் கேளும்
பகருமர பொடிநாவந் பட்டை நீரிற்
றுவெயின் முகத்திலிடப் பற்ப மாகுங்
குறித்திரச மிளகுதிப்பி லோமங் கெந்தி
றுபட வேகூட்டிப் பற்ப மாக்கி
நேரமொரு பணவிடைதூள் தின்னத் தீரும்
றயருந் தென்கதிரை முருகன் செய்ய
தாள்மறவாக் குறியமுனி சாற்றி னானே 105

**ஊறுகாய்**

ற்றிடுநல் லூறுகாய் பாண்டு வீக்கஞ்
சவிகெடுக்குங் காமாலை சோகை போகத்
தேற்றமுறு சாரணைவேர் சித்ர மூலஞ்
செய்யநா யுருவிகரி சலைநீர் முள்ளி
தோற்றுமிவை வேரிரு சீரகங்க டுக்காய்
சொற்காந்த முள்ளிமிள கசம தாகம்
ற்றுமுறும் பீநாறி நெல்லிக் கெந்தி
நவில்கடுகு மிந்துப்பு நல்ல கிட்டம் 106

ட்டமுறு மரபொடிமுக் கழஞ்சு கூட்டிக்
கிளர்கையான் றகரைச்சாற் றால ரைத்து
ட்டமறு மெலுமிச்சம் பழத்தைக் கீறி
நவின்மருந்தை யுட்பொதிந்தோர் கலையந் தன்னில்
ட்டதன்மேல் நல்லெண்ணெய் தானும் விட்டே
யேழுநா ளெடுப்பினுள்ளே புதைத்தெ டுத்துக்
ட்டமற வேதின்னத் தீருங் கண்டீர்
கதிரமலை வாழ்முருகன் கருணை யாமே 107

### பித்தகாமாலைக்கு
### கூஸ்மாண்டரசாயனம்

ஆமே பித்த காமாலை யதனிற் பாண்டு வகைதீர
நாமே யுரைப்போஞ் சவர்க்கார நவின்முக் கடுக முப்பலையும்
தாமே யுள்ளி யீருள்ளி தகுமிந் துப்பு விழாலரிசி
பூமேன் மதுரம் வெண்கோட்டம் புகலு மோம மரபொடியே

பொடிசேர் கிட்ட நவச்சாரம் பொடித்துச் சமனா யதிற்சீனி
கடிசேர் தேசிப் பழச்சாறு காட்டு நீற்றுப் பூசினியின்
வடிசேர் சாறு தான்கூட்டி வற்றக் காய்ச்சிக் குழம்பானாற்
படிசேர் தேனு மதில்விட்டுப் பாகா யருந்தப் பறந்திடுமே

### வரட்காமாலைக்கு
### மண்டூரசூரணம்

பறக்கும் வரண்ட காமாலை பாறக் கூறும் படிகேண்மின்
சிறக்குஞ் சுத்தி தனிற்றெளிந்த செய்ய கிட்ட மரபொடியும்
நிறக்குங் கடுகு திரிகடுகு நேரு மல்லி வசுவாசி
உறக்குங் கடுக்காய் தான்றிக்கா யுயர்வெள் ளுள்ளி யிருசீரம்

சீரார் கராம்பு மிவையனைத்துஞ் சேர விடித்துப் பொடியாக்கி
நேரார் பொன்னாங் காணியினி னிகழுஞ் சாற்றில் மூன்றுநாட்
பரோர் நிம்பத் துளிர்ச்சாற்றிற் பேணி மூன்று நாட்கொள்க
ஏரார் பசுவின் மூத்திரத்தி லியலு மூன்று நாளாமே

நாண்மூன் றின்னுங் கரிசாலை நயந்த சாற்றிற் கொண்டிடவே
காண்முன் சொன்ன நோய்தீருங் கண்டு நோயின் வன்மைதனைப்
பேணிக் கிட்ட மரபொடியும் பெய்வாய் நிறையின் மிகுதிபெற
மாணுங் கதிரை வேன்முருகன் மலர்த்தாள் நெஞ்சின்மறவாதே

### சலமுடைக்க
### சுரசம்

கழற்சிப்பருப்பு, வெள்ளுள்ளி, மிளகு, அதிமதுரம் ச
கற்றாழைச்சாறுவிட்டரைத்து முடக்கொற்றான் சாற்றிற் கறை
எட்டொன்றாய் வற்றவைத்து வடிகட்டி வெண்காரம் பொரிக
பொரித்ததூள் மேற்பொடியிட்டுக் குடிக்கச் சலமுடைக்கும்.



### பற்று

கோழிமுட்டை வெள்ளைக்கருவும் உள்ளியுமரைத்துச் சீலையிற் றோய்த்து அடிவயிற்றிற்போடச் சலமுடைக்கும்.

### உண்டை

இரசம், கெந்தகம், சுக்கு, திரிபலை, மிளகு சமனெல்லாங் கண்டளவு சுத்திசெய்த வாளம் கரிசாலைச்சாற்றாலாட்டி, தூதுளங்காயளவுருட்டி நிழலுலர்த்திவைக்கவும். சலமறிப்புக்கு அவுரியிலைசாற்றிற் கொடுக்கவும்.

### பற்பம்

கெந்தகம், திரிகடுகு, வெண்காரம், நற்சீரகம், பொரிகாரம் வகை-கழஞ்சு-க அஞ்சனக்கல்லு, அதிமதுரம், கோட்டம் வகை கழ-இ- சுத்திசெய்தவாளம் கழ-கூ பசுப்பாலிலவித்து கையாந்த கரைச்சாற்றா லரைத்து உலர்த்திப் பற்பமாக்கி சீனியிற் கருப்புக்கட்டியி ...னச் சலமறிப்புரோகம் எல்லாந்தீரும்.

### சோகையிருமலுக்கு

ஆமணக்கெண்ணெயும், தேனும், வெண்காயச்சாறும் கலந்துநக்கத் தீரும்